விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 புரட்டாதி 17 ஞாயிற்றுக்கிழமை (04.10.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 289

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள்,
ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு
வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5392
(C-2366)

# இலங்கையைத் தீவிரமாக கண்காணிப்பது அவசியம்

## சர்வதேச மனிதவுரிமை அமைப்புகள் அறிக்கை

(ஜெனிவா)

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்த விடயத்தில் பொறுப்புக் கூறும் விவகாரத்தில் உறுதியான முடிவுகளை எட்டுவதுக்காக நிறைவேற்றப்பட்ட ஜெனிவா தீர்மானத்தை இலங்கை அரசு நடைமுறைப்படுத்துகின்ற முறைமையை தீவிரமாக கண்காணிப்பது அவசியம் என சர்வதேச மனிதவுரிமை அமைப்புக்கள் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

(15ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மைத்திரி கிளிநொச்சிக்கு வருவார்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாளை திங்கட்கிழமை கிளிநொச்சிக்கு வருகை தரவுள்ளதுடன் யாழ்ப்பாணத்துக்கும் வருகை தரவுள்ளார்.

நாளையதினம் கிளிநொச்சிக்கு வரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி கோவிந்தன் கடைச் சந்திப்

15 ஆம் பக்கம் பார்க்க....

## மலக்குழியிலிருந்து கைக்குண்டுகள் மீட்பு

(கரணவாய்)

வீட்டு மலசலகூட குழியிலிருந்து இரண்டு கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் நேற்று மதியம் ஒரு மணியளவில் உடுப்பிட்டி சந்திக்கு அருகாமையில் உள்ள வீட்டில் இடம் பெற்றுள்ளது.

வீட்டின் மலசல கூட குழியினை திருத்து

16 ஆம் பக்கம் பார்க்க....

## மதுபானம், சிகரெட்டின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு மதுபான வகைகளுக்கான விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

5வீதத்துக்கும் குறைவான அல்கஹோலைக் கொண்டுள்ள பியர் ஒரு லீற்றருக்கான விலை 40 ரூபாயாலும்

15 ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நா தீர்மானத்தை ஏற்க மாட்டோம்-வாசு

(ஜெனிவா)

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை கடந்த தேர்தலில் ஆதரித்தவரும் அவரது அரசாங்கத்தில் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான அமைச்சு பொறுப்பை வகித்த வருமான

15 ஆம் பக்கம் பார்க்க....

## வெளுத்தது இலங்கையின் சாயம் பிரச்சினைக்குத்தீர்வு தமிழீழமே

### பொதுவாக்கெடுப்பை கோரி ராமதாஸ் அறிக்கை

(கொழும்பு)

இலங்கை இன்னும் திருந்தவில்லை என்பதை உலக சமுதாயம புரிந்து கொள்ள வேண்டும். ஈழத் தமிழர்களிடையே ஐ.நா. மூலம் பொது வாக்கெடுப்பு நடத்தி வடக்கு, கிழக்கு மாநிலங்களை தனித தமிழ்ழ மாக அறிவிக்க வேண்டும். இவ்வாறு பாமக நிறுவுனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

15 ஆம் பக்கம் பார்க்க....



## அன்று தற்கொலைப்படை வரவேற்பு; இன்று கட்சி பேதமின்றிய வரவேற்பு

### யாழ்.வந்த அமைச்சர் நிமால் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கு 1996ஆம் ஆண்டு நான் வருகை தந்தபோது என்னை தற்கொலை குண்டுதாரிகள் வரவேற்றனர்.

தற்போது கட்சிபேதமின்றி அனைவரும் இணைந்து வரவேற்கின்றனர். இதனை நானும் வரவேற்கின்றேன் என போக்குவரத்துத் துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

16 ஆம் பக்கம் பார்க்க....



## ஜெனிவா தீர்மானத்துக்கு எதிராக எதிர்க்கட்சிகள் பாரிய போராட்டம்

### 14ஆம் திகதி நடத்த திட்டம்

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு எதிராக எதிர்க்கட்சிகள் பாரிய போராட்டம் நடத்தத் தீர்மானித்துள்ளன.

இலங்கையில் போர்க்குற்றச் செயல்கள் இடம்பெற்றுள்ளதாக அமெரிக்காவும் இலங்கையும் நிறைவேற்றியுள்ள தீர்மானத்துக்கு இந்த எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

ஜெனிவா தீர்மானத்துக்கும், அரசாங்கத்தின் அணுகுமுறைக்கும் எதிர்ப்பை வெளியிட்டு எதிர்க்கட்சிகள் இணைந்து கொழும்பில் பாரியளவில் எதிர்ப்பு போராட்டமொன்றை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

15 ஆம் பக்கம் பார்க்க....

## உண்மைகளைக் கண்டறிவது நல்லிணக்கத்துக்கு வழிவகுக்கும்

### பிரிட்டன் பிரதமர் கமரூன் வலியுறுத்து

(லண்டன்)

இலங்கையின் பொறுப்புக்கூறல் தொடர்பில் ஜெனிவா மனித உரிமை பேரவையில் அமெரிக்காவினால் முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட பிரேரணையினை சர்வதேச தலைவர்கள் வரவேற்றுள்ள நிலையில், பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூனும் அதனை வரவேற்றுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் அமெரிக்க பிரேரணைக் குறித்த வரவேற்பினை வெளிப்படுத்தியுள்ளார்.

அத்துடன் போர்க்குற்றச்சாட்டுக்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில், நீதியான விசாரணைகளை

15 ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கை மீதான தீர்மானத்துக்கு 38 நாடுகள் இணை அனுசரணை!

(ஜெனிவா)

ஜெனிவாவில் இடம்பெற்ற ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 30ஆவது கூட்டத்தொடரில் இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனிதவுரிமைகளை ஊக்குவித்தல் என்ற தலைப்பில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியுள்ள நாடுகளின் எண்ணிக்கை 38 ஆக அதிகரித்துள்ளது.

ஜெனிவாவில் நேற்று முன்தினத்துடன் முடிவுக்கு வந்த ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் கூட்டத்தொடரில் அமெரிக்க, பிரித்தானியா, மசிடோனியா மற்றும் மொன்ரெனிக்ரோ ஆகிய நாடுகள் இணைந்து முன்வைத்திருந்த இத்தீர்மானம் கடந்த வியாழக்கிழமை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருந்தது.

இதன்போது, இத்தீர்மானத்துக்குக்கு அமெரிக்கா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா, ஜேர்மனி, அல்பேனியா, கிரீஸ், லத்வியா, மொனரெனிக்ரோ,

15 ஆம் பக்கம் பார்க்க....

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 6 நிறுவனங்களில் நிதிமோசடி நாமலிடம் விசாரணை ஆரம்பம்

சட்டவிரோதமான முறையில் சம்பாதிக்கும் மில்லியன் கணக்கிலான பணத்தை வர்த்தகங்களுக்கு பயன்படுத்தி நிதி சந்தையில் இணைத்துகொள்ளும் கடத்தல் ஒன்றில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஈடுபடுவதாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பில் பொலிஸ் நிதி மோசடி விசாரணை பிரிவினால் விசேட விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

அவரின் உரிமைத்துவத்தின் கீழ் செயற்படுகின்ற 6 நிறுவனங்கள் இக் கடத்தல் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளதாக நிதி மோசடி விசாரணை பிரிவு வெளிப்படுத்தியுள்ளது.

"கவர்ஸ் கோப்பரேட் சர்விஸ்", "கவர்ஸ் சொலுஷன்", கவஸ் செகடேரியட்" "என்.ஆர்.கன்ஸல்டன்", "ஹெலோ கோப்" மற்றும் சிலோன் ஹோல்டிங்ஸ் ஆகிய நிறுவனங்களே இவ்வாறான கடத்தல் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினராக மாத்திரம் மாதாந்த சம்பளம் பெறும் நாமல் ராஜபக்ஷ இந் நிறுவனங்கள் ஊடாக பல மில்லியன் கணக்கிலான கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்வதாக எழுந்த சந்தேகத்தின் பேரில் இவ் விசாரணைகள் மேற்கொண்ட நிலையில் இதன் போது கறுப்பு பணம் வெள்ளை பணமாக மாற்றும் வியாபாரம் ஒன்று தொடர்பிலும் தகவல்கள் வெளியாகியுள்ளது.

அத் தகவல்களுக்கு இடையில் 2012ஆம் ஆண்டு கவர்ஸ் கோப்ரேட் சேவிஸ் நிறுவனத்தினால் ஹெலோ கோப் நிறுவனத்தை விலைக்கு வாங்குவதற்காக 125 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நாமல் ராஜபக்ஷவிடம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் போது.

தனக்கு சொந்தமான என்.ஆர்.கன்ஸல்டன் சட்ட நிறுவனத்தை பங்களாதேஷ் தொழிலதிபர் ஒருவருக்கு விற்பனை செய்து 50 மில்லியன் பணம் பெற்றுகொண்டதாகவும், அப் பணத்தில் அந் நிறுவனத்தை பெற்றுகொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் பங்களாதேஷ் தொழிலதிபர் அல்லது அவரது பணம் இந் நாட்டிற்கு எவ்வாறு வந்ததென்று இது வரையிலும் தகவல் வெளியாகவில்லை.

கவர் கோபரேட் நிறுவனத்தின் 2013-14ஆம் ஆண்டு காலப்பகுதியின் வருமானம் 81 மில்லியனாகும்.

எனினும் குறித்த நிறுவனம் ஆரம்பிக்கையில் 10 ரூபாய பங்குகள் 100 மாத்திரமே காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய இவ் 6 நிறுவனங்களுக்கு பணம் கிடைத்த முறை தொடர்பிலும் பணம் சம்பாதித்த முறை தொடர்பி லும் தகவல் வெளியிடுவதற்கு நாமல் ராஜபக்ஷ முன் வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (செ-12)

# ஜெனிவா பிரதிநிதி முரண்படவில்லை

(கொழும்பு)

ஜெனிவாவில் உள்ள இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க, நடப்பு அரசாங்கத்தின் நிலைப்பாட்டுக்கு எதிரான நிலைப்பாட்டை வெளிப்படுத்தி இருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்து.

எனினும் இதனை இலங்கை வெளிவிவகார அமைச்சு மறுத்துள்ளது.

இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சினால் விசேட மறுப்பறிக்கை ஒன்று வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ரவிநாத் ஆரியசிங்க, வெளிவிவகார அமைச்சுடன் இணைந்து பேச்சுவார்த்தை நடத்தி மேற்கொள்ளப்பட்ட நிலைப்பாடுகளையே ஜெனிவாவில் வெளிப்படுத்தி வருகிறார்.

ஆனால் இதற்கு புறம்பான கருத்துக்களை சில தரப்பினர் தவறாக வெளிப்படுத்துவதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (செ-12)

# சேயா படுகொலை மேலும் ஒருவர் கைது

கொட்டதெனியாவ 05 வயது சிறுமி சேயா துஷ்பிரயோகத்துககு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் மேலும ஒருவர் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை 72 மணிநேர தடுப்புக்காவலில் வைத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்ள நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

மினுவாங்கொடை நீதவான் நீதிமன்றத்தில் சந்தேக நபரை நேற்று ஆஜர்படுத்தியபோது பதில் நீதிபதி பிரியந்தி லியனஆராச்சி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (செ-12)

# வட, கிழக்கு ரயில் சேவையில் திருத்தம்

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மார்க்கங்களிலான ரயில் சேவை கால அட்டவணையில் எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்த மார்க்கங்களை பயன்படுத்தும் மக்களின் கோரிக்கைகளின் பிரகாரமே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக ரயில்வே போக்குவரத்து அத்தியட்சகர் விஜய சமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

மக்களுக்கான சிறந்த, நெகிழ்வுத் தன்மையுடைய ரயில போக்குவரத்து முறைமையை அறிமுகப்படுத்தும் நோக்கில் கால அட்டவணையில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளதாக ரயில்வே போக்குவரத்து அத்தியட்சகர் கூறினார். (செ-11)


## மனோதத்துவ வைத்தியம்

மனோதத்துவ நிபுணர் (General Psyohotheraphy)

Dr.P.ஆறுமுகம்

T.P :- 0777 569 205

07.10.2015 முதல் 13.10.2015 வரை
7 நாட்கள் மட்டுமே இருப்பார்
பதிவுக் கட்டணம் ரூபா 300/=

மீண்டும் யாழில்



ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்தின் மூலம் யாழ்ப்பாணத்தில் பலருக்கு குழந்தைகிடைத்தமைக்கு எம்மிடம் ஆதாரங்கள் உண்டு.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறப்பில் ஆண்மைக்குறைவை தவிர) எந்தமோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோ தத்துவ ரீதியிலும் மிகத்திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம்.

ஆரம்ப மனநோய், நீரிழிவு நோய், ஆஸ்துமா, மாதவிடாய் கோளாறுகள், தலையிடி, முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு இயற்கை மூலிகை மருந்துகன் மூலம் சிகிச்சை.

இளைஞர்கள் ஞாபகத் திறன் குறைவு கல்வியில் நாட்டம் குன்றி பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளை திருத்தி வாழ்வில் வெற்றிபெற

இவை அனைத்துக்கும் மனோ தத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

(C-2367)

## நாதன் இன்

(பழைய கமல் டொச) 392 / A மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலற்றிக்கல் கடைக்கு அருகில்) பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்.

## பணிப்பெண் தேவை

வயோதிப பெண் நோயாளியை வீட்டில் தங்கியிருந்து பராமரிக்கக் கூடிய பணிப்பெண் தேவை

T.P:- 077-8378597

(1955)

## மிருக வைத்திய சேவை

தாவடிக்கு அண்மையில் நடமாடும் மிருகவைத்திய சேவைகளுக்கு

தொடர்பு : 077 973 8802
021 224 2502

(1948)



ஆசிரியர் தினத்தினை முன்னிட்டு சிறப்புத் தள்ளுபடி

## சரவணா ரெக்ஸ்

நல்லூர்

(வேறு கிளைகள் இல்லை)

கொட்டன் சாறிகள், சில்க் சாறிகள், பன்சி சாறிகள் என்பன எங்கும் இல்லாத விசேட விலைக்கழிவில்...

மூன்று தினங்கள் மட்டுமே..
05,06,07
ஒக்டோபர் 2015 வரை

சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

526, 529, பருத்தித்துறை வீதி, நல்லூர், (பின் வீதி)
(சிவன் கோவில் அருகில்) யாழ்ப்பாணம். தொ.பேசி: 021 222 1723

(C-2376)

## தையல்

இந்தியாவில் 8 வருட கால அனுபவம்வாய்ந்த பெண் ரெய்லரால் சாறி பிளவுஸ், சுடிதார் ஆகியனவை நவீன முறையில் தைத்துக் கொடுக்கப்படும்.

இடம்:- குமாரசாமி வீதியிலிருந்து பிரம்படி வீதி கொக்குவிலுக்கு மாற்றப்பட்டுள்ளது.

தொடர்பு:- 0766399277

## அக்ஷயா

அழகுக்கலை பயிற்சியகம்

- அழகுக்கலை பயிற்சிகள் நடைபெறுகின்றன. சாறி பிளவுஸ் (6) பஞ்சாபி (5)
- கறுப்பு, பிறப்பிலே கறுப்பு, கறைகள், கரும்புள்ளிகள், நாட்பட்ட கறுப்பு வடுக்கள் அனைத்தையும் மாற்றும் கிறீம் விற்பனைக்கு உண்டு.
- உதட்டு கறுப்பு,கண் கருவளையம், கழுத்து கறுப்பு நீக்கும் கிறீம்
- ஒட்டிய கன்னங்களை குண்டுக் கன்னங்களாக மாற்றும் குளிசை
- தலைமுடி வளரச் செய்யும் ஆயுர்வேத எண்ணெய்
- உடல், கை, கால் கருமையான புள்ளிகள் நீக்கும் கிறீம், நாட்பட்ட பித்த வெடிப்பு, அலர்ஜிக்குடன் கூடிய பித்த வெடிப்பு நீக்கும் ஆயுர்வேத கிறீம் விற்பனைக்கு உண்டு.
- மார்பு கூட்டும், குறைக்கும், தொய்வு நீக்கும் கிறீம், குளிசை விற்பனைக்கு உண்டு.
- உடல் எடை கூட்டும், குறைக்கும் பால்மா,குளிசை, டொனிக் விற்பனைக்கு உண்டு.
- கருமை,கறுப்பு நீக்கும் வைத்நிங் பேசியல், அழகு மிளிர வைக்கும் கோல்ட் பேசியல் செய்து கொள்ளலாம்.

தொ.பே :- 0772106155 அக்ஷயா நாவலர் றோட்

(1954)


## அறிவித்தல்

### யா/ யாழ் இந்து ஆரம்ப பாடசாலை நூற்றாண்டு விழா - 2015

நூற்றாண்டு விழாவை முன்னிட்டு எமது பாடசாலையின் வரலாற்றுப் பதிவைப் பூரணமாக தொகுப்பதற்கு வசதியாக தங்களிடம் இருக்கும் பாடசாலை வரலாற்றுடன் தொடர்புடைய ஆவணங்களை (நிழற்படங்கள், பிரசுரங்கள், சஞ்சிகைகள், தகவல்கள்) 10.10.2015ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பாடசாலைக்கு அனுப்பி வைக்குமாறு அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.

(C-2373)

நன்றி

j100jhp@gmail.com
யா/யாழ் இந்து ஆரம்ப பாடசாலை
இல. 224, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0212222119

நூற்றாண்டு விழாக் குழு
யா/யாழ் இந்து ஆரம்ப பாடசாலை

# மாணவி வித்தியா, சிறுமி சேயா கொலைக் குற்றவாளிகளுக்கு மரணதண்டனையை உடன் நிறைவேற்றக்கோரி யாழிலிருந்து கொழும்பு நோக்கி பாதயாத்திரை

## இ.போ.ச. வடக்கு ஊழியர்கள் ஏற்பாடு

**புங்குடுதீவு மாணவி வித்தியா, கொட்டதெனியாவை சேர்ந்த சிறுமி சேயா ஆகியோர் பாலியல் துன்புறுத்தல்களின் பின் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்தும் குற்றவாளிகளுக்கு எதிராக மரணதண்டனை நிறைவேற்றக்கோரியும் இலங்கை போக்குவரத்து சபையின் வடமாகாண ஊழியர்களால் யாழிலிருந்து கொழும்பு வரையான பாத யாத்திரை ஒன்று நடத்தப்படவுள்ளதாக இ.போ.ச. யாழ்.சாலை முகாமையாளர் செ.குணபாலசெல்வம் அறிவித்துள்ளார்.**

இலங்கை போக்குவரத்து சபையின் வடக்கு மாகாண ஊழியர்களால் நடத்தப்படவுள்ள இந்த பாத யாத்திரை நாளை 5 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்.மத்திய பேருந்து நிலையத்திலிருந்து கொழும்பு நோக்கி ஆரம்பமாகவுள்ளது.

இப் பாத யாத்திரையின் விபரம் முறையே,நாளை 5 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி வரை யும், 6 ஆம் திகதி கிளிநொச்சியிலிருந்து வவுனியா வரையும், 7 ஆம் திகதி வவுனியாவிலிருந்து அநுராதபுரம் வரையும்,8 ஆம் திகதி அநுராதபுரத்திலிருந்து மாகோ வரையும்,9 ஆம் திகதி மாகோவாவிலிருந்து குருநாகல வரையும், 10 ஆம் திகதி குருநாகலிலிருந்து வறாக்காப்பொல வரையும், 11 ஆம் திகதி வறாக்காப் பொலவிலிருந்து கம்பகா வரையும்,12 ஆம் திகதி கம்பகாவிலிருந்து கொழும்பு வரையும் இப் பாதயாத்திரை சென்றடையவுள்ளது.

இந்த பாதயாத்திரையில் சமூக அக்கறை கொண்ட அனைவரும் கலந்து கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

சிறுமி சேயா கொலை வழக்கு

## விசாரணை நடத்திய பொலிஸாருக்கு எதிராகவும் விசாரணைகள் ஆரம்பம்

கொட்டதெனியாவ சேயா என்ற நான்கரை வயது சிறுமி கொலை தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸாருக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் பாடசாலை மாணவர் உள்ளிட்ட இரண்டு பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.


இந்த இருவரையும் தாக்கியதாகவும் சித்திரவதைகளுக்கு உட்படுத்தியதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மாணவரை நிர்வாணமாக்கி புகைப்படம் எடுத்துக் கொண்டதாகவும் கொடூரமாக தாக்கியதாகவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த இருவரும் மரபணு சோதனை அறிக்கையின்பின்னர் அண்மையில் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

விடுதலை செய்யப்பட்டதன் பின்னர் குறித்த மாணவர் பொலிஸார் தாக்குதல் நடத்தியதாகக் கூறி கம்பஹா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸார் சந்தேக நபர்கள் மீது சித்திரவதைகளை மேற்கொண்டார்களா என்பது குறித்து விசாரணை நடத்துமாறு பொலிஸ்மா அதிபர் உத்தரவிட்டுள்ளார். (இ-7)



## மகிந்த-கடாபி உறவை கண்டித்தார் மைத்திரி

இலங்கையின் முன்னாள தலைவர்கள் லிபியாவின் முன்னாள் தலைவர் முகமர் கடாபியுடன் கொண்டிருந்த உறவை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கண்டித்துள்ளார்.கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர் மத்தியில் உரையாற்றிய அவர், கடாபி, இலங்கையின் முன்னாள் தலைவரின் தோளில் ஒரு கையை வைத்தநிலையில் உள்ள புகைப்படத்தை நினைவுபடுத்தினார்.

இதன்போது ஜனாதிபதி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபகஷவின் பெயரை குறிப்பிடாத போதும் குறித்த புகைப்படத்தில் கடாபி, மகிந்த ராஜபக்ஷவின் தோளின்மீதே கைவைத்தபடி உள்ளமை குறிப்பிடத்தக்கது. மேற்கத்தேய நாடுகள் கடாபியை சர்வாதிகாரி என்று கூறிவந்த போதும் மகிந்த ராஜபக்ஷ அவருடன் திறந்த உறவை பேணி வந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

## அலுவலக அதிகாரிகளுக்கு அழுத்தம் பிரயோகிக்கும் டளஸ்

நாடாளுமன்றத்தில் எதிர்கட்சி தலைவர் அலுவலகத்தில் செயற்படும் அதிகாரிகளுக்கு முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும தொடர்ந்து பல்வேறு அழுத்தங்களை பிரயோகப்பதாக தெரியவந்துள் ளது.

தான் எதிர்க்கட்சியின் உறுப்பினர் என கூறிபல் வேறு நடவடிக்கைகளை செய்து தருமாறு டளஸ் அழகப் பெரும அழுத்தம் கொடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ் தேசிய கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி மற்றும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி போன்ற கட்சிகளே எட்டாவது நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சியாக சபாநாயகரினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. (இ-7)

## சோதிடக்காரர்களை நம்பாமலிருந்தால் மகிந்தவே ஜெனிவாவுக்கு சென்றிருப்பார்

### ஜனாதிபதி மைத்திரி நக்கல்

(கொழும்பு)

சோதிடக்காரர்களின் பேச்சை கண்மூடித்தனமாக நம்பாமலிருந்தால் மகிந்த ராஜபக்ஷவே நாட்டின் தலைவராக இம்முறையும் ஜெனிவா சென்றிருப்பார் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.



ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை அமர்வில் கலந்து விட்டு நாடு திரும்பிய பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது ஜெனிவா அனுபவங்களை ஊடகவியலாளர்களுடன் பகிர்ந்து கொண்டிருந்தார்.

இதன்போது கருத்து வெளியிட்ட ஜனாதிபதி, மகிந்த ராஜபக்ஷ சோதிடக்காரர்களின் பேச்சைக் கேட்டு இரண்டு வருடங்களுக்கு முனபே தேர்தலை நடத்தாமல் இருந்திருந்தால் இன்றும் அவர் தான் ஜனாதிபதியாக இருந்திருப்பார். அவ்வாறெனில் அவர்தான் இம்முறையும் ஜெனிவா சென்றிருப்பார்.

மறுபுறத்தில் மகிந்த சோதிடக்காரர்களின் பேச்சை நம்பியதால் தான் ஜனவரி எட்டாம் திகதி இந்நாட்டில் ஒரு அரசியல் புரட்சி மலர்ந்தது. அந்த வகையில் நாம் சோதிடக்காரர்களுக்கு நன்றி சொல்ல வேண்டும்.

விடுதலைப் புலிகளை முற்றாக அழித்து விட்டதாக மகிந்த ராஜபக்ஷ பெருமைப்பட்டுக் கொண்டாலும் நாட்டுக்கு வெளியே விடுதலைப் புலிகள் பலமாகவே இருக்கின்றார்கள் என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (இ-7)

## சாட்சியாளராக மாறுவதற்கு சமல் ராஜபக்ஷவும் ஒப்புதல்

மகிந்த ராஜபக்ஷவின் மூத்த சகோதரரான சமல் ராஜபக்ஷ அரசாங்கத்தின் சாட்சியாளராக நீதிமன்ற செயற்பாடுகளில் செயற்படவுள்ளதாக நிதி மோசடி விசாரணைப் பிரிவு தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கிடையில் மகிந்த ராஜபக்ஷவின் நெருங்கியவர்களான சஜின்வாஸ் குணவர்தன மற்றும் துறைமுக அதிகாரசபையின் முன்னாள் தலைவர் பிரியத் விக்ரம ஆகியோர் அரசாங்க சாட்சியாளர்களாக பல ஊழல் மோசடிகளை வெளிப்படுத்தவுள்ளனர்.

ராஜபக்ஷ குடும்பத்திற்கு சொந்தமான CSN தொலைக்காட்சி நிறுவனம் தொடர்பில் இதுவரையில் பொலிஸ் நிதி மோசடி விசாரணை பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் படி. அந்த தொலைக்காட்சி நிறுவனம் ராஜபக்ஷ அறக்கட்டளைக்கு வழங்கிய இடத்தில் நடத்தி செல்லப்படுகின்றமை தொடர்பில் முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது தனக்கு ஒன்றும் தெரியாது அனைத்தும் மகிந்த ராஜபக்ஷவும் அவரது மகன்மார்களினால் மேற்கொண்டதென அவர் குறிப்பிட்டுள்ளதாக விசாரணை பிரிவு தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-7)

## சுவிஸ் பணத்தை வைப்பிலிடுங்கள்

(கொழும்பு)

சுவிட்சர்லாந்து நாட்டின் வங்கிகளில் பணத்தை வைப்புச் செய்துள்ள இலங்கையர்களை, இலங்கை வங்கிகளில் வைப்புச் செய்யுமாறு கோரிக்கை விடுப்பதாக நிதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

சுவிஸ் வங்கிகளில் இருந்து பணத்தை இலங்கைக்கு மாற்றம் செய்யும் போது எவ்வித விசாரணைகளும் நடத்தப்படமாட்டாது எனவும் முழுமையான பாதுகாப்பு வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

வெளிநாட்டவர்களில் வங்கி கணக்குகளை மூட சில சுவிஸ் வங்கிகள் தீர்மானித்துள்ளன. இது இலங்கைக்கு சாதகமாக இருக்கும் எனவும் நிதியமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

## ஜப்பான் விஞ்ஞான தொழில்நுட்ப மாநாட்டில் பிரதமர் ரணில் உரை

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது ஜப்பான் விஜயத்தின் போது, அந்நாட்டின் விஞ்ஞான தொழில்நுட்ப மாநாட்டில் சிறப்புரையாற்றவுள்ளார்.

பிரதமர் இந்த விஜயத்தின் போது, ஜப்பானிய பிரதமர் சின்சோ அபே உட்பட ஜப்பானிய உயர்மட்ட தரப்பினரை சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளார்.

அத்துடன் ஜப்பானிய சக்கரவர்த்தி மற்றும் மகாராணி ஆகியோரையும் பிரதமர் ரணில் சந்திக்க உள்ளார.

இதனையடுத்து, ஜப்பானிய நாடாளுமன்றத்திலும் பிரதமர் உரை நிகழ்த்தவுள்ளார். மேலும் ஜப்பான் மற்றும் இலங்கை வர்த்தக சமூகத்தினருடன் பிரதமர் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளார். (இ-7)

## ஜனாதிபதி மன்னிப்புக்கோர வேண்டும்

### ஜே.வி.பி.வலியுறுத்து

2015ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதியன்று நல்லாட்சி தொடர்பான உறுதியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்னும் கொண்டிருப்பாராக இருந்தால், தமது மகனை ஐக்கிய நாடுகள் அமர்வில் பங்கேற்க செய்தமைக்கு விளக்கமளிக்க வேண்டும்.

அத்துடன் மன்னிப்பும் கோர வேண்டும் என்று ஜே.வி.பி. கோரியுள்ளது.ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க இந்தக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

குடும்ப ஆதிக்கத்துக்கு முடிவைக்கொண்டு வருவதற்காகவே ஜனவரி 8 இல் மக்கள் மைத்திரிபாலவுக்கு வாக்களித்தனர். எனினும் அதனையே ஜனாதிபதி மேற்கொண்டமை வருந்தத்தக்கது.




இந்தநிலையில் தமது தாயாருக்கு பதிலாகவே தந்தையுடன் சென்றதாக தஹாம் கூறியபோதும் ஏன் அவர் ஐக்கிய நாடுகளின் இளைஞர் மாநாட்டில் பங்கேற்றார் என்பதற்கு ஜனாதிபதி விளக்கமளிக்க வேண்டும் என்றும் திஸாநாயக்க கேட்டுள்ளார்.

இந்த விடயத்தில் இலங்கையின் வெளியுறவு அமைச்சும் மன்னிப்புக் கோர வேண்டும் என்று அவர் கோரியுள்ளார். (இ-7)

# ரஜினி, ஐஸ்வர்யா ராய், சச்சின், ரகுமான் கலந்து கொள்ள கோலாகலமாக ஆரம்பமாகியது ஐ.எஸ்.எல் கால்பந்து

## சென்னையை வீழ்த்தியது நடப்பு சம்பியன் கொல்கத்தா



ஐ.எஸ்.எல். கால்பந்து தொடரின் முதல் ஆட்டத்தில் நடப்பு சம்பியன் கொல்கத்தா, சென்னை அணியை எளிதாக வென்றது.

இந்தியன் சுப்பர் லீக் (ஐ.எஸ்.எல்) கால்பந்து போட்டியின் இரண்டாவது சீசன் நேற்று தொடங்கியது. இதில் நடப்பு சம்பியன் அட்லெடிகோ டி கொல்கத்தா, சென்னையின் எப்.சி, டெல்லி டைனமோஸ், கோவா எப்.சி, கேரளா பிளாஸ்டர்ஸ், புனே சிட்டி, மும்பை சிட்டி, நோர்த் ஈஸ்ட் யுனைடெட் (கவுகாத்தி) ஆகிய அணிகள் பங்கேற்கின்றன. 8 அணிகளும் உள்ளூர், வெளியூர் அடிப்படையில் மோத வேண்டும். ஒவ்வொரு அணிக்கும் 14 ஆட்டங்கள் இருக்கும். லீக் முடிவில் புள்ளிகள் அடிப்படையில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் அரை இறுதிக்கு முன்னேறும்.

சென்னை நேரு ஸ்ரேடியத்தில் நேற்று (சனிக்கிழமை) இரவு நடைபெற்ற தொடக்க லீக் ஆட்டத்தில் சென்னையின் எப்.சி. அணி, நடப்பு சம்பியன் அல்டெடிகோ டி கொல்கத்தா அணியுடன் மோதியது.

போட்டியின் தொடக்கம் முதலே கொல்கத்தா வீரர்கள் ஆதிக்கம் செலுத்தினர். 13-வது நிமிடத்தில் அந்த அணியின் ஹெல்டர் போஸ்டிகா அபாரமாக கோல் அடித்தார். இதுவே இந்த சீசனின் முதல் கோல் ஆகும். அதன் பின்னர் எழுச்சி பெற்ற சென்னை அணி, 31-வது நிமிடத்தில் பதில் கோல் அடித்து சமன செய்தது. இந்த கோலை ஜீஜி லால்பெக்குலா அடித்தார்.

ஆட்டத்தின் இரண்டாவது பாதியில் இரு அணி வீரர்களும் முன்னிலை பெறுவதற்கான கோலை பதிவு செய்ய மும்முரம் காட்டினர். இந்த நிலையில் சென்றால் ஆட்டம் சமனில் முடியும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், 70-வது நிமிடத்தில் கொல்கத்தா அணிக்கு மீண்டும் ஒரு கோலை பதிவு செய்தார் ஹெல்டர் போஸ்டிகா. இந்த உற்சாகத்துடன் 76-வது நிமிடத்தில் வால்டோ தலையால் முட்டி அபாரமாக கோல் அடிக்க, கொல்கத்தா அணி 3-1 என வலுவான முன்னிலை பெற்றது.

அதன்பின்னர் இரு தரப்பிலும் கோல் அடிக்கவில்லை. சென்னை அணிக்கு 89-வது நிமிடத்தில் பெனால்டி வாய்ப்பு கிடைத்தது. இதனை சரியாகப் பயன்படுத்திய இலனோ, அபாரமாக பந்தை கோல்கம்பத்துக்குள் செலுத்தினார்.

அதன்பின்னர் இரு தரப்பிலும் கோல்கள் அடிக்கவில்லை. இதனால், 3-2 என கொல்கத்தா அணி வெற்றி பெற்றது. போட்டியின் சிறந்த வீரராக ஹெல்டர் போஸ்டிகா தேர்வு செய்யப்பட்டார். (க)

# வுகான் ஓபன் டெனிஸ் போட்டி வீனஸ் வில்லியம்ஸ் சம்பியன்



வுகான் ஓபன் சர்வதேச டெனிஸ் போட்டியில் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ் சம்பியன் பட்டம் வென்றார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற இறுதிச்சுற்று ஆட்டத்தில், 23-வது தரநிலையில் உள்ள வீனஸ் வில்லியம்ஸ், 8-ம் தரநிலையில் இருக்கும் ஸ்பெயின் வீராங்கனை கார்பைன் முகுருசாவை எதிர் கொண்டார்.

பரபரப்பான இப்போட்டியின் முதல் செட்டை வீனஸ் (6-3) கைப்பற்றினார். அடுத்த செட்டிலும் ஆதிக்கம் செலுத்திய வீனஸ 3 புள்ளிகள் பெற்றிருந்தபோது, முகுருசா போட்டியில் இருந்து விலகினார்.

இதனால் வீனஸ் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார். இது அவருக்கு 47-வது சர்வதேச பட்டம் ஆகும்.


அரையிறுதியில் ஜேர்மனி வீராங்கனை கெர்பரை எதிர்கொண்டு விளையாடிய முகுருசா அந்தப் போட்டியில் நேர்செட்களில் வெற்றி பெற்றார். ஆனால், அந்த போட்டியின்போது கீழே விழுந்ததால் காலில் தசைப் பிடிப்பு ஏற்பட்டது. நேற்றைய இறுதிச்சுற்று ஆட்டத்தின்போது வலி ஏற்பட்டதால் பாதியில் விலகியதாக கூறப்படுகிறது. ஆனால், சோர்வு காரணமாகவே தான் விலகியதாக முகுருசா கூறினார். இதன் மூலம் இந்த போட்டித் தொடரில் இருந்து 5 பேர் ஆட்டத்தின் போது விலகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த வெற்றியின்மூலம் திங்கட்கிழமை வெளியிடப்பட உள்ள தரவரிசைப் பட்டியலில் வீனஸ் மீண்டும் டாப்-20 இடத்தைப் பிடிக்க உள்ளார். தற்போது 23-வது இடத்தில் உள்ளார். (க)



சீனாவில் நடைபெற்ற வுகான் ஓபன் டெனிஸ் போட்டியின் பெண்களுக்கான இரட்டையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் சானியா மிர்சா - சுவிட்சலாந்தின் மார்ட்டினா ஹிங்கிஸ் ஜோடி பட்டம் வென்றது.

# டக்வோர்த் லூயிஸ் முறையில் பாக்கை வென்றது சிம்பாப்வே



76 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை இழந்து தத்தளித்துக் கொண்டிருந்த பாகிஸ்தான் அணியை இறுதிவரிசை துடுப்பாட்ட வீரர்களுடன் இணைந்து தனது அபாயகரமான துடுப்பாட்டத்தினால் கரைசேர்க்க சொகைப் மலிக் போராடிய போராட்டம், சிம்பாப்வேயின் மேகமூட்டங்களால் முறியடிக்கப்பட டக்வோர்த் லூயிஸ் முறையில் 5 ஓட்டங்களால் பாகிஸ்தான் அணி போராடித் தோல்வியடைந்தது.

சிம்பாப்வேக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி அங்கு 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்குபற்றி வருகிறது.

இத்தொடரின் 2ஆவது ஒரு நாள் போட்டி நேற்று ஹராரே விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சிம்பாப்வே கடந்த போட்டியில் விட்ட தவறுகளை சீர்செய்து அபாரமாக துடுப்பெடுத்தாடியது.

இவ்வாறு துடுப்பாடிய சிம்பாப்வே அணிக்கு ஆரம்ப வீரர் சிபாபா, அணித் தலைவர் எல்ரன் சிகும்புராவின் துடுப்பாட்டம் வலுச்சேர்க்க,50 ஓவர்களில் சிம்பாப்வே அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 276 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் சிபாபா 90, அணித் தலைவர் சிகும்புரா 67, ஷாரி 39 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பில் வகாப் றியாஸ் 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

277 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு களமிறங்கிய பாகிஸ்தான் அணிக்கு பன்யங்கார தனது ஆரம்ப ஓவரின் 5 பந்தில் அதிர்ச்சி கொடுத்தார்.

ஆரம்ப இழப்பு பாகிஸ்தான் அணிக்கு நல்லதாக அமையவில்லை. இதன்காரணமாக பாகிஸ்தான் அணியின் விக்கெட்டுக்கள் அடுத்தடுத்து சரிய நிலைமை 7/76 என்றாகியது.

எனினும் சொகைப் மலிக் (90*), பின்வரிசை வீரர்களுடன் இணைந்து அபாரமாக துடுப்பெடுத்தாடி பாகிஸ்தான் அணியை கரைசேர்க்க பாடுபட்டார். சிம்பாப்வேயின் மேகமூட்டங்கள் இவரின் போராட்டத்தை மழுங்கடிக்க பாகிஸ்தான் அணியின் வெற்றி தட்டிப்பறிக்கப்பட்டது.

டக்வோர்த் லூயிஸ் விதிப்படி பாகிஸ்தான் அணி 48 ஓவர்களில் 262 ஓட்டங்கள் எடுத்திருக்க வேண்டும். எனினும் பாகிஸ்தான் 48 ஓவர்களில் 8 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 256 ஓட்டங்களை எடுத்திருந்தது. இதனால் 5 ஓட்டங்களால் போராடித் தோல்வியடைந்தது.

போட்டியின் ஆட்டநாயகனாக சிம்பாப்வே அணித் தலைவர் எல்ரன் சிகும்புரா தெரிவானார். (க)

# என்னை அரசியலிலிருந்து வெளியேற்ற கடும்முயற்சி

## கீதா குமாரசிங்க குற்றச்சாட்டு

அமைச்சர் ஒருவர் என்னை அரசியலிலிருந்து ஒதுக்க முயற்சித்து வருவதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

குறித்த அமைச்சர் நான் அரசியலில் ஈடுபடுவதனை விரும்பவில்லை.நான் பொதுத் தேர்தலுக்காக வேட்பு மனு தாக்கல் செய்த போது சுவிட்சர்லாந்து குடியுரிமை பற்றி கேள்வி எழுப்பியிருக்க வேண்டும்.

உண்மையில் தற்போது எனக்கு சுவிட்சர்லாந்தின் குடியுரிமை கிடையாது.

சுவிட்சர்லாந்து குடியுரிமையை நான் இரத்து செய்து கொண்டேன்.

குடியுரிமையை இரத்து செய்வதற்காக ஆவணங்களை சமர்ப்பித்த தினம் கடுமையான துயரம் ஏற்பட்டது, நான் சாப்பிடாமல் அழுது கொண்டிருந்தேன்.

நான் அரசியலில் ஈடுபடுவது பிடிக்காத அமைச்சர் என்னை எப்படியாவது வெளியேற்ற முயற்சிக்கின்றார் என கீதா குமாரசிங்க சிங்கள ஊடகமொன்றிடம் தெரிவித்துள்ளார். (இ-7)

(1939)
விற்பனைக்கு
பொன்னாலை வீதி, கட்டுடை மானிப்பாயில் வீடும், காணியும் விற்பனைக்கு உண்டு. பாவித்த வீட்டுத்தளபாடங்கள் விற்பனைக்குண்டு. தரகர் வேண்டாம். தொடர்புக்கு: 077 349 8192

யாழ்.நகரில் வீடு விற்பனைக்கு
யாழ்.நகரின் கேந்திர பகுதியில் 20 பேர்ச்சஸ் (2 பரப்பு) காணியில் நான்கு படுக்கை அறைகள், ரைல்ஸ் பதிக்கப்பட்ட இரு மலசலகூடங்கள், குளியல் அறைகள், விசாலமான ஹோல், சாப்பாட்டு அறை கொண்ட சுற்றுமதில் உள்ள அழகிய வீடு விற்பனைக்குண்டு.
யாழ். ரயில் நிலையம், மத்திய பஸ் நிலையம், சுப்பர் மார்க்கெட், ஆஸ்பத்திரி, வங்கிகள், முன்னணி ஆண்-பெண் பாடசாலைகள், வணக்கஸ்தலங்கள் ஆகியவற்றுக்கு மிகவும் சமீபமாக, குடிமனைகள் உள்ள பகுதியில் சகல வசதிகளையும் கொண்டது இந்த வீடு.
வாகனத்தரிப்பிடம், வேலையாள் தங்குவதற்கான தனியான அறை, விசாலமான குடிதண்ணீர் கிணறு வசதிகளும் உள்ளன.
தரகர்கள் இன்றி நேரடித் தொடர்புகளுக்கு
(முற்பகல் 10.30 மணிக்கு பின் தொடர்பு கொள்ளவும்)
077- 387 0487
(1949)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
10 - 01 - 1947



இறப்பு
14 - 10 - 2014

### அமரர். கந்தையா நயினார்

(அம்பாள் பழைய பாட்ஸ் கடை உரிமையாளர்)

குடும்பத்தின் ஒளி விளக்காய்
அன்பின் இருப்பிடமாய் நற்பண்புகளுடன்
நல்வாழ்வுக்கு வழிகாட்டி
எமக்காகவே வாழ்ந்த - எம்
அன்புத் தெய்வமே - உங்கள்
நினைவுடன் என்றும் வாழ்கிறோம்

இல.5. 5ம் ஒழுங்கை,
அரசடி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.


(1941)

இங்ஙனம்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### அமரர் கந்தையா- செல்வகுலசிங்கம்

(சுகந்தினி லொறி உரிமையாளர்- வல்வெட்டி)



வேம்பொடுகேணி பளையைப்பிறப்பிடமாகவும் வல்வெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கந்தையா செல்வகுலசிங்கம் அவர்கள் 2015.10.02 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா செல்லம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான சிவஞானம்- இராசமணி தம்பதிகளின் மருமகனும் சிவமணியின் அன்புக் கணவரும் செல்வரூபன் (கனடா), வசந்தரூபன்(கனடா),சுகந்தினி, ஆனந்த ரூபன்(வாகன உரிமையாளர்),சிவரூபன் (வாகன உரிமையாளர்), பாமினி(செய்முறை காட்டுனர் தாவரவியற்துறை யாழ்.பல்கலைக்கழகம்),சாந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் நித்தியபானு (கனடா),திலீபன் (ஆசிரியர் முல்/பாரதி வித்தியாலயம்),வத்சலா ஆகியோரின் அன்பு மாமனாரும் தனபாலசிங்கம் (மணியம் கராஜ் உரிமையாளர்), காலஞ்சென்ற தவமலர் மற்றும் தருமகுலசிங்கம் (அதிபர் யா/செங்குந்த இந்துக்கல்லூரி), தவமணி செல்வராணி(நெதர்லாந்து),குமாரகுலசிங்கம்(தேங்காய் வியாபாரி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சிவஞானமணி,சிவநாதன்(நெதர்லாந்து),சிவயோகநாதன் (நெதர்லாந்து), ரகுநாதன்(கனடா)ஆகியோரின் மைத்துனரும், கீர்த்திகன், தரணிகா, நேகா, அபினுகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 2015.10.04 ஞாயிற்றுக்கிழமை 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளிற்காக பூதவுடல் வல்வெட்டித்துறை ஊறணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இந்துப் பாடசாலை வீதி
வல்வெட்டித்துறை
077 305 8831

தகவல்
குடும்பத்தினர்

## ராசி பலன்

04.10.2015
(புரட்டாதி 17, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு
சப்தமி முன்னிரவு 8.37 மணிவரை
மிருகசீரிடம் பிற்பகல் 1.36 மணிவரை
இராகுகாலம் 4.32-6.02 மணிவரை
சுபநேரம் 9.02-10.32 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | சந் | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>விசாகம், அனுசம்<br>சமநோக்குநாள் | | |
| | | | குரு,செவ்<br>புத,சுக் |
| | சனி | | ராகு<br>சூரி |

**மீனம்** தாய்வழி உறவினர்களால் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப்பெறுவீர்கள்,பேச்சில் கனிவு பிறக்கும்,மனதில் இனம் புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பயணங்கள் கைகூடும்.

**மேடம்** ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள்,வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காணும் நாள்,கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**இடபம்** அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்,கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் உருவாகும், புதிய முயற்சியொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்** எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்ல படியாக நடைபெறும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்,போசன சுகமுண்டு, கற்பனை மிகுதியான நாள்.

**கும்பம்** புதிய முதலீடுகள் செய்வது பற்றி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள்,பிள்ளைகள் நலனில் அதிக அக்கறை காட்டு வீர்கள்,பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**கடகம்** அன்றாட பணிகள் நன்றாக நடைபெற இறைவனைப் பிரார்த்திப்பீர்கள்,வெளியூர்த் தொடர்புகள் விரும்பும் விதத்தில் அமையும்,அலைச்சல்களால் மனச்சோர்வு ஏற்படலாம்.

**மகரம்** நாவன்மையால் நல்ல பெயர் எடுப்பீர்கள்,கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்,கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், ஆரோக்கியமான நாள்.

**சிம்மம்** உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பீர்கள், தொலைபேசி வழியில் சந்தோசம் தரும் செய்திகளைக் கேட்கலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்,சிறப்பான நாள்.

**தனுசு** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள்,புதிய முயற்சிகள் கைகூடும்,ஆனந்தமான நாள், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும்.

**விருச்சிகம்** எதையும் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது,வரவும் செலவும் சமமாகும்,வேலைச்சுமை கூடும், குடும்பத்தில் சில கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும்.

**துலாம்** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, விட்டுப்போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம்.

**கன்னி** திறமைகள் வெளிப்படும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் செய்து முடிப்பீர்கள்,தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள்,வருமானம் திருப்தி தரும்.

# தமிழருக்கான தீர்வை சர்வதேசம் ஏற்றுள்ளது

## காரணம் கூறுகிறார் சம்பந்தன்

(யாழ்ப்பாணம்)

**வன்முறை முடிவுக்கு வந்ததும் சத்தியம், அஹிம்சை வழியில் தமிழ்ச் சமூகம் செயற்படத்தயாராக இருக்கின்றது என்பதனால்தான் தமிழர் பிரச்சினைக்கு ஒரு தீர்வு கிடைக்க வேண்டும் என்ற கருத்தை சர்வதேசம் ஏற்றுக் கொண்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளாா.**



எமது நாட்டில் தற்போது வன்முறை முடிவுக்கு வந்துள்ளது. இனி வரும் காலங்களில் வன்முறையை ஒருபோதும் ஆதரிக்க முடியாது என எதிர்க்கட்சி தலைவர் இரா. சம்பந்தன தெரிவித்துள்ளார்.

சர்வதேச அஹிம்சை தினம் முதன் முறையாக நேற்று முன்தினம் யாழ். இந்துக்கல்லூரியில் கொண்டாடப்பட்டது. அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மகாத்மா காந்தி பிரார்த்தனை மற்றும் விரதங்களின் ஊடாக வெள்ளையர்களுக்கு எதிராக தீவிரமாக அஹிம்சை வழியில் போராடினார். அவர் பிரிவினையை ஏற்றுக் கொள்ளவில்லை

அவரின் உண்மை, சத்தியம், அஹிம்சை அடிப்படையில் இந்தியா சுதந்திரம் அடைந்தது. அதை உலகம் அனைத்தும் ஏற்றுக் கொண்டது.

அதே போல் தந்தை செல்வா சத்தியத்தையும் அஹிம்சையையும் பின்பற்றியவர். அவர் வன்முறையை விரும்பவில்லை அதை எதிர்த்தவர்.

ஆனால் ஏன் நமது இனம் வன்முறையை கையாண்டது என்பது பெரும் கேள்வியாக இருக்கிறது. பல்வேறு காரணங்கள் இருந்திருக்கலாம் நியாயப்படுத்தக்கூடிய காரணங்கள் இருந்திருக்கலாம் அஹிம்சையை பின்பற்றிய ஒரு தலைவர் இருந்தும் எமது இனம் வன்முறையை பின்பற்றியது அதன் காரணமாக அழிவு ஏற்பட்டது.

இனி ஒருபோதும் வன்முறைக்கு இடமில்லை. உண்மையை முழுமையாக பின்பற்ற வேண்டும் எங்களுக்காகவும் மற்றவர்களுக்காகவும் உண்மையை பின்பற்ற வேண்டும்.


எந்த சந்தர்ப்பத்திலும் சத்தியத்தை கைவிடக்கூடாது. அஹிம்சைக்கு கட்டுப்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

சர்வதேச சமூகத்தில் தமிழ் மக்களுக்கு கணிசமான ஆதரவு ஏற்பட்டதற்கு முக்கியமான காரணம், வன்முறை முடிவுக்கு வந்ததும் சத்தியம், அஹிம்சை என்ற அடிப்படையில் தமிழ்ச் சமூகம் செயற்படத் தயாராக இருக்கின்றது அதை ஊக்குவிக்க வேண்டும், பலப்படுத்த வேண்டும் அதன் மூலம் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்க வேண்டும் என்ற கருத்தை சர்வதேச சமூகம் ஏற்றுக் கொண்ட காரணத்தால் தான் தற்போது இந்த நிலை உருவாகியுள்ளது. அதைநாம புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தியா எமது அயல்நாடு உலகின் பாரிய சக்தி இந்தியாவின் முக்கியத்துவத்தை நாங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். அந்த நாட்டின் உதவி ஒத்தாசையை பெறக்கூடிய வகையில் நாம் செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)




# முதலமைச்சரின் பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டின் மூலம் உதவிகள் வழங்கல்



வருமானம் குறைந்த குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக, வடமாகாண சபை முதலமைச்சரின் 2015ஆம் ஆண்டிற்கான பிரமாண அடிப்படையிலான நிதியிலிருந்து கோழிக்குஞ்சுகள், வளர்ப்புஆடுகள்என்பன வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் நேற்று முன்தினம் யாழில் உள்ள முதலமைச்சரின் அமைச்சில் வைத்து வழங்கப்பட்டன.

இவற்றில் 23 குடும்பங்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான கோழிக்குஞ்சுகளும் 25ஆயிரம் ரூபா பெறுமதியான வளர்ப்பு ஆடுகள் என்பனவும் அவற்றை வளர்ப்பதற்கு தேவையானஉபகரணங்கள்,பொருட்கள் என்பனவும் வழங்கப்பட்டன.

மேலும் வருமானம் குறைந்த குடும்பங்களின் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்காக, மலசலகூடம் அமைப்பதற்கு ஒரு பயனாளிக்கு தலா ஒரு இலட்சத்து 10ஆயிரம் ரூபா வீதம் 23 குடும்பங்களுக்கு காசோலையும் வழங்கப்பட்டன. இதில் சங்கானை பிரதேசத்தில் சங்கானை நகர பகுதியிலிருந்து சுமார் ஒன்றரை கிலோமீற்றருக்கப்பால் இருக்கும் தானாவோடையைச் சேர்ந்த ஒரே இடத்தில் வசிக்கும் 13 குடும்பங்களும் அடங்கும். இக்குடும்பங்களின் கோரிக்கையை இதுவரை காலமும் எவரும் செவிசாய்க்காது இருந்து வந்தநிலையில் வடமாகாண சபை முதலமைச்சரின் கவனத்திற்கு இவர்களது கோரிக்கை முன்வைக்கப்பட்டபோது உடனடியாக இவர்களுக்கான மலசலகூடத்தை தனது நிதி ஒதுக்கீட்டில் இருந்து கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி பணித்ததற்கமைய 13 மலசலகூடங்களும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் முதலமைச்சரின் செயலாளர் இ.வரதீஸ்வரன், அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் த.சர்வானந்தா, யாழ். மாவட்ட பிர தி கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள பணிப்பாளர், கால்நடை வைத்தியர்கள், அலுவலர்கள் மற்றும் பயனாளிகள் கலந்துகொண்டனர். (இ-9)

# விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் அமைந்த அரியாலை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்குவிசர்நோய்த்தடுப்பூசி(A.R.V.) கீழ்வரும் இடங்களில் வைத்து வழங்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

2015.10.06 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மு.ப.11 மணி வரை அரியாலை சனசமூகநிலையம் புங்கன்குளம் வீதி, மு.ப.11.30 மணி தொடக்கம் பி.ப 1.30 மணிவரை பென்ரிகோஸ் லேன், பி.ப. 2.30 மணி தொடக்கம் பி.ப 3.30 மணி வரை ஆசீர்வாதப்பர் வீதி பெரிய பாலத்தடி,

2015.10.07 ஆம் திகதி காலை9 மணி தொடக்கம் மு.ப. 11 மணிவரை அரியாலைசரஸ்வதிசனசமூகநிலையம் கண்டிவீதி,மு.ப. 11.30 தொடக்கம் பி.ப 1.30 மணி வரை மிருக வைத்திய நிலையம் A.V றோட், பி.ப.2.30 மணிதொடக்கம் பி.ப 3.30 மணிவரை இலந்தைக் குளம் வீதி பிரப்பங்குளம் அம்மன் கோவிலடி,

2015.10.08 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மு.ப 11மணிவரை அரியாலை கலைமகள் சன சமூக நிலையம், மு.ப 11.30 மணிதொடக்கம் பி.ப1.30மணி வரை காந்தி சன சமூகநிலையம்ஆசீர்வாதப்பர்வீதி,பி.ப 2.30 மணி தொடக்கம்பி.ப3.30 மணி வரை புவனேஸ்வரி அம்மன் வீதி அரியாலை,

2015.10.09 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மு.ப 11 மணிவரை அருணோதயா சனசமூக நிலையம் A.V. றோட்மு.ப11.30 மணி தொடக்கம் 1.30 மணிவரை அரியாலை திருமகள் சனசமூக நிலையம், பி.ப2.30 மணி தொடக்கம் பி.ப3.30மணி வரை அரியாலைமலர்மகள்சனசமூகநிலையம்.

2015.10.12ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மு.ப 11 மணிவரை பாரதி சனசமூக நிலையம் செம்மணி வீதிநாயன்மார் கட்டு மு.ப.11.30 மணி தொடக்கம் பி.ப 1.30 மணி வரை அம்பாள் சனசமூக நிலையம் பேச்சியம்மன் கோவிலடி, பி.ப 2.30 மணி தொடக்கம் பி.ப.3.30 மணி வரை மகேஸ்வரி பாடசாலை அருகில் நாயன்மார்கட்டு,

2015.10.13ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மு.ப 11 மணிவரை கலைவாணி சனசமூக நிலையம் பொன்னம்பலம்வீதி, மு.ப.11 .30 தொடக்கம் பி.ப 1.30 மணிவரை ஆள்காட்டிவீதி அருள்பலம் வீதிச்சந்தி, பி.ப 1.30 மணி தொடக்கம் பி.ப3.30 மணிவரை குகன் வீதி அரியாலை,

2015.10.14 காலை 9 மணி தொடக்கம் மு.ப. 11 மணிவரை இராஜேஸ்வரி வீதி அரியாலை, மு.ப. 11.30 தொடக்கம் பி.ப1.30 மணிவரை கனகரட்ணம் வீதி நாவலர் வீதி சந்தி அரியாலை, பி.ப 2.30 மணி தொடக்கம் பி.ப 3.30 மணிவரை கனகரட்ணம் மகா வித்தியாலம் அருகில் நாவலர் வீதி,

2015.10.15ஆம் திகதி காலை 9மணி தொடக்கம் மு.ப 11 மணிவரை சுஜா போட்டோ முன்புறம் பாரதிவீதி அரியாலை மு.ப 11.30 மணி தொடக்கம் 1.30 மணிவரை தியாகராசா படிப்பகம் கண்டிவீதி அரியாலை, பி.ப 2.30 மணி தொடக்கம் பி.ப3.30 மணிவரை கச்சேரி நல்லூர் வீதி றக்காவீதி சந்தி என்பவற்றில் வைத்து வழங்கப்படவுள்ளது என யாழ்.மாநகர சபையின் சுகாதார வைத்தியஅதிகாரிஅறிவித்துள்ளார்.(இ

## பரிசளிப்பு விழாவும் ஆசிரியர் தினமும்

யாழ்.நாவாந்துறை ஆர்.சி. வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும் ஆசிரியர் தின விழாவும் நாளை திங்கட்கிழமை காலை 9மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பி.பாலசுந்தரம் பிள்ளை கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்புவிருந்தினராக யாழ். கிடூடெக் பணிப்பாளர் அருட்தந்தை ஏ.யாவிஸ் கலந்து கொள்ளவுள்ளார்.

யாழ்.மத்திய கல்லூரியின் ஓய்வு பெற்ற ஆசிரியர் திருமதி ராஜலக்ஷ்மி பாலசுந்தரம்பிள்ளை மாணவர்களுக்கு விருதுகளை வழங்கிகௌரவிக்கவுள்ளார். (இ-3-5)

## கருத்தரங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் "சமூக வெளி" படிப்பு வட்டம், திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம் ஆகியன இணைந்து நடத்தும் பேராசிரியர் அம்பலவாணர் சிவராஜா வழங்கும் "விழுதுகளிலிருந்து வேர்களை நோக்கி" எனும் தொனிப்பொருளில் அமைந்த கருத்தரங்கம்-11 நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது தொடக்கவுரையினை தெ.மதுசூதனன் வழங்கவுள்ளதுடன் கருத்துரைகளை மா.கணபதிப்பிள்ளை, கலாநிதி.த. கிருஷ்ணமோகன், கலாநிதி. கே.ரி. கணேசலிங்கம்ஆகியோர் வழங்கவுள்ளனர். (இ-5)

## இறுதிப் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியின் இறுதிப் பரீட்சைக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதாக தொழில்நுட்பவியல் கல்லூரி பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

சான்றிதழ் மற்றும் டிப்ளோமா NVQ Level 5 கற்கைநெறிகளுக்கான இறுதிப்பரீட்சைக்கான விண்ணப்பங்களே இவ்வாறு கோரப்பட்டுள்ளன.

பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் எதிர்வரும் 14ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப்படிவங்களை பரீட்சைப் பகுதியில் பெற்று பூர்த்தி செய்து சமர்ப்பிக்கும் படி அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# வாசிப்பு மாதத்தை முன்னிட்டு போட்டிகள் நடத்த ஏற்பாடு

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாணவர்களிடையே வாசிப்பு பழக்கத்தை அதிகரிக்கும் நோக்கில் யாழ்.மாநகர சபையின் நல்லூர் கிளை நூலகம் பல்வேறு செயற்றிட்பங்களைநடைமுறைப்படுத்தவுள்ளது. இதன் ஒரு நிகழ்வாக பிரதேச மாணவர்கள் மற்றும் நூலக அங்கத்தவர்களிடையே போட்டிகளை நடத்தவுள்ளது.

இதற்கமைய முன்பள்ளி மாணவர்களுக்கான கதைகூறல்,வர்ணம் தீட்டுதல்,தரம் 3தொடக்கம் 5வரை உள்ள மாணவர்களுக்கான சித்திரம் வரைதல், தரம்-4 தொடக்கம் 5 வரை உள்ள மாணவர்களுக்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் சொல்வளம், தரம்-6 தொடக்கம் 11ஆம் ஆண்டு வரையுள்ள மாணவர்களுக் கான தமிழ், ஆங்கில கட்டுரை மற்றும் வளர்ந்தோருக்கான பொது அறிவு வினாக்களுக்கு விடையளித்தல் என்பன போட்டிகளாக இடம் பெறும்.

மேற்படி போட்டிகளில் கலந்து கொள்ள விரும்புவோர் தமது பெயர் விபரங்களை நல்லூர் கிளை நூலகத்தில் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளுமாறு நல்லூர் கிளை நூலகர் திருமதி பொற்செல்வி ஸ்ரீரஞ்சன் அறிவித்துள்ளார். (இ-5)

# இந்தியாவை மீறி அமெரிக்கா இங்கு எதையுமே செய்யாது!

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

**இந்து சமுத்திர விவகாரங்களில் இந்தியாவின் ஆலோசனை இல்லாமல் எந்தவொரு தீர்மானத்தையும் அமெரிக்கா கொண்டு வராது. அமெரிக்காவும் இந்தியாவும் ஒன்றாகவே இராஜதந்திரங்களை வகுக்கின்றன என்று சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.**

அமெரிக்காவின் முதலாவது யோசனை காரம் கூடியதாகவே இருந்தது. மனித உரிமை மீறல் தொடர்பில் 48 பேர் பட்டியல் அந்த யோசனையில் இருந்தது. எனினும் புதிய அரசாங்கத்தின் நல்லிணக்க செயற்பாடுகளினால் அதனை முழுமையாக மாற்றியுள்ளோம் என்றும அவர் தெரிவித்தார்.

சமாதானத்திற்கான மக்கள்இயக்கம்கொழும்பில்நேற்று முன்தினம் ஏற்பாடு செய்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

எவராலும் வீழ்த்தவே முடியாது என்று கருதப்பட்ட இராஜதந்திரத்தை நாம் தோற்கடித்தோம். அதேபோன்று போரின் முதற்கட்டத்தை வெற்றிகொண்டு ஓகஸ்ட் 17 ஆம் திகதி இரண்டாம் கட்டத்தையும் வெற்றிகொண்டோம். மேலும்தற்போதுசர்வதேசத்தை வெற்றிகொண்டுள்ளோம்.


முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சர்வதேசத்தை கைக்குள் போடுவதாக கூறி சீனாவை மாத்திரமே அரவணைத்துக் கொண்டு செயற்பட்டார். இலங்கை உற்பத்திகள் அதிகளவில் அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளுக்குமே ஏற்றுமதி செய்யப்படு கின்றன.

ஆனால் சீனாவிற்கு இலங்கை உற்பத்திகள் ஏமு சதவீதமே ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆனாலும்தற்போது சீனா தனது பொருளாதார கொள்கையை மறுசீரமைத்துள்ளது. அதனால் வெளிநாட்டு உற்பத்திகளுக்கு கட்டுப்பாடு விதிக்க போகின்றது.

எனவே மகிந்தவின் மோசமான பொருளாதார கொள்கைகளிலிருந்து மக்களை பாதுகாத்துள்ளோம். இந்தியாவைபகைத்துக்கொண்டே முன்னைய ஆட்சி செயற்பட்டது. மனித உரிமை விவகாரத்தில் இந்தியாவுடன் அமெரிக்காவுடனும் மிகவும் ஆழமான உறவினை மேற்கொண்டோம்.

இந்து சமுத்திர விவகாரங்களில் இந்தியாவின ஆலோசனை இல்லாமல் எந்தவொரு தர்மானத்தையும் அமெரிக்கா கொண்டு வராது. அமெரிக்காவும் இந்தியாவும் ஒன்றாக இராஜதந்திரங்களை வகுக்கின்றன.

இதேவேளை அமெரிக்காவின் முதலாவது யோசனை காரம் கூடியதாகவே இருந்தது. மனித உரிமை மீறல்தொடர்பில் 48 பேர் பட்டியல் அந்த யோசனையில் இருந்தது. எனினும் புதிய அரசாங்கத்தின் நல்லிணக்க செயற்பாடுகளினால் அதனை முழுமையாக மாற்றியுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)




ஐக்கிய நாடுகள் சபையின் 70 ஆவது பொதுச்சபைக் கூட்டத் தொடரில் கலந்து கொள்வதற்காக அமெரிக்கா சென்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெற்றிகரமான விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்று முன்தினம் பி.ப 4.05 மணியளவில் எமிரேட்ஸ் AK 654 விமானம் மூலம் நாடு திரும்பினார்.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை பிற்பகல் வந்தடைந்த ஜனாதிபதியை அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பெருந்திரளான பொது மக்கள் சேர்ந்து மிக கோலாகலமாக வரவேற்றனர்.

## 'ஜனாதிபதிக்கு நன்றி' சுவரொட்டிகள் தெற்கில்

"ஏகாதிபத்திய சக்திகளைத் தோற்கடித்து நாட்டைப் பாதுகாத்த ஜனாதிபதிக்கு எமது நன்றிகள்" என்று தெரிவித்து தெற்கில் பரவலாக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. ஐ.நா.விசாரணை அறிக்கை மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டு இலங்கை மீதான அமெரிக்காவின் தீர்மானம் இலங்கை அரசின் இணை அனுசரணையுடன் ஜெனிவாவில் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றபட்டதைத் தொடர்ந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு நன்றி தெரிவித்து அவரின் படத்துடன் இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. (இ)




## சைவ வித்தியா விருத்திச் சங்கம் பதவி வெற்றிடங்கள்

***திருநெல்வேலி சைவச் சிறுவர் இல்லத்தில் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.***

**1.உப விடுதிக் காப்பாளர்கள்**

**தகைமைகள்**

க.பொ.த. சாதாரண தரத்திற்குக் குறையாத கல்வித் தகைமை

வயதெல்லை30-60

விடுதியில் தங்கியிருப்பது கட்டாயம், உணவும் தங்குமிட வசதியும் இலவசம்

ஊதியத் திட்டம்: 8400-6X225+15X225-13575/=

**2.சமையலாளர்:-பெண்**

சைவச் சிறுவர் இல்லத்துக்கு அனுபவம் வாய்ந்த பெண் சமையலாளர் தேவை.

இல்லத்தில் தங்கியிருப்பது கட்டாயம்

வயதெல்லை 35-55

ஊதியம் பேசி நிர்ணயிக்கப்படும்.

**3.பகல் பாதுகாப்பு உத்தியோகத்தர் (பெண்)**

**தகைமைகள்:**

க.பொ.த. சாதாரண தரத்திற்குக் குறையாத கல்வித் தகைமை

வயதெல்லை 30-60

விண்ணப்பதாரர் தேகாரோக்கியம் உடையவராகவும் இல்லப் பிள்ளைகளைப் [illegible]

ஊதியம் பேசி நிர்ணயிக்கப்படும்.

விண்ணப்பதாரர்கள் தேகாரோக்கியம் உடையவராகவும் இல்லப் பிள்ளைகளைப் பரிவோடு கவனிப்பதிலும் சைவாசாரம் பேணுவதிலும் வழிகாட்டுவதிலும் அர்ப்பணிப்போடு ஈடுபடுபவராகவும் இருத்தல் வேண்டும்.

அண்மையில் பெறப்பட்ட இரு நற்சான்றிதழ் பிரதிகளோடு விண்ணப்பங்கள் கிடைக்க வேண்டிய இறுதி நாள்:- 17.10.2015

தி.செல்வமனோகரன் சைவ வித்தியா விருத்திச் சங்கம்
செயலாளர் (C-2369) கலாசாலை வீதி, திருநெல்வேலி.



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 20<br>உயரம்: 162cm<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்<br>தொ.இ: B/5038 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 34செவ் 7 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:A/L/காசாளர்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/5054 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: காரத்திகை<br>கி.பா: 23சூரிசெவ் 5 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/5041 | பிறப்பு: 1969 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 46செவ் 4 இல்<br>உயரம்: 5'4"தகைமை/தொழில்:BA/ ஆசிரியர்<br>தொ.இ: G/5055 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 24சூரிசெவ் 6 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்<br>தொ.இ: B/5043 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 11சூரிசெவ் 12 இல்<br>தகைமை/தொழில்:BSC, MBA/ அரசதொழில்<br>தொ.இ: G/5058 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 37 உயரம்: 5'3'<br>தகைமை/தொழில் பட்டய கணக்காளர் தென்னாபிரிக்கா<br>தொ.இ: B/5044 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 26 செவ் 8 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L/ அரசதொழில்<br>தொ.இ: G/5061 |

**கல்யாண மாலை**

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# சிறந்த வீட்டுத்தோட்ட செய்கையாளரை தெரிவு செய்யுமாறு அமைச்சர் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண விவசாய திணைக்களத்தின் ஊடாக வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலிருந்தும் சிறந்த வீட்டுத்தோட்டச் செய்கையாளரைத் தெரிவு செய்து கௌரவிக்கும் திட்டத்தின் கீழ் இவ்வருடமும் சிறந்த வீட்டுத் தோட்டச் செய்கையாளர்களை தெரிவு செய்யுமாறு வடமாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் பணிப்புரை விடுத்துள்ளார்.

சிறந்த வீட்டுத்தோட்டச் செய்கையாளர்க ளாக கலந்து கொள்வோர் வடக்குமாகாண விவசாயத்திணைக்களம் நடத்தும் போட்டி நிபந்தனைகளுக்கு அமைவாகவே போட்டிகளில் கலந்துகொள்ள முடியும்.

இதற்கமைய வீட்டுத் தோட்டம் ஒன்று அமைக்கப்படும் காணி 1/16 ஏக்கர் இற்கு கூடிய விஸ்தீரணத்தில் அமைய வேண்டும். வீட்டுத் தோட்டத்தில் பயிரிடப்படும் பயிர்ச் செய்கைகளாக தானியப் பயிர்கள், அவரையினப் பயிர்கள், கிழங்குத்தாவரங்கள், உள்ளூர் மரக்கறிப் பயிர்கள், மேல் நாட்டு மரக்கறி பயிர்கள், வாசனைப்பயிர்கள், மருத்துவப்பயிர்கள், பழப்பயிர்கள், அழுதத் தாவரங்கள் மற்றும் ஏனைய பயன்தரும் மரங்கள் என்பன அமைய வேண்டும்.

அத்துடன் பயிரிடப்படும் பயிர்ச்செய்கை தொடர்ச்சியானதாகவும் வருடம் முழுவதும் வீட்டுத் தேவையை பூர்த்தி செய்யக்கூடிய உற்பத்தியை பெறக்கூடியதாகவும் மனைப் பொருளாதாரத்தை மேம்படுத்தக்கூடிய வகையிலும் இருத்தல் வேண்டும்.

அத்துடன் பயிர்ச் செய்கைகள் சேதன விவசாயமாக அமைய வேண்டும் என்பதுடன் சுற்றுப்புறச்சூழலிருந்து நேசமான பீடை முகாமைத்துவத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

மேலும் ஒருங்கிணைந்த விவசாயம், தேனீ வளர்ப்பு நடவடிக்கை என்பன பற்றியும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

அத்துடன் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் நீரைப்பயன்படுத்தும் தொழில்நுட்பங்களை கொண்டிருத்தல் என்பதுடன் சூழல் முகாமைத்துவமும் சூழல் கழிவுகளை மீள் சுழற்சிக்கு உட்படுத்தல் மற்றும் நிலம் மற்றைய வளங்களின் வினைத்திறனான பயன்பாடு என்பன அமைதல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட போட்டி நிபந்தனைகளின்படி போட்டிகளுக்கு விண்ணப்பிக்கும் வீட்டுத் தோட்டப்பயிர்ச்செய்கையாளர்கள் போட்டிக்கான விண்ணப்பப்படிவங்களை விவசாயப் போதனாசிரியர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

விண்ணப்பப் படிவங்களை உரிய முறையில் பூர்த்தி செய்து கடித உறையில் இட்டு கடித உறையின் இடது புற மேற்பக்கத்தில் சிறந்த வீட்டுத் தோட்ட செய்கையாளருக்கான போட்டி 2014 எனக்குறிப்பிட்டு எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்னர் விவசாயப் போதனாசிரியரிடம் கையளித்தல் வேண்டும்.

இதன்படியே சிறந்த வீட்டுத்தோட்டச் செய்கையாளர்கள் தெரிவு செய்யப்படுவர்.

இதற்கமைய முதற்கட்டத் தெரிவானது மாவட்டத்தின் விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் நடத்தப்பட்டு முதல் மூன்று சிறந்த வீட்டுத் தோட்டச் செய்கையாளர்கள் தெரிவு செய்யப்படுவர்.

அடுத்து விவசாயப் போதனாசிரியர் மட்டத்தில் முதலிடத்தை பெற்றவர்கள் மத்தியில் போட்டிகள் நடத்தப்பட்டு மாவட்ட மட்டத்தில் முதல் மூன்று வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவர். இதற்கான பரிசளிப்பு நிகழ்வு அடுத்த வருடம் தை மாதத்தில் நடத்தப்படும்.

மாவட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெறும் வெற்றியாளர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படுவதுடன் விவசாயப் போதனாசிரியர் பிரிவு மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெறும் வெற்றியாளர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும்.

எனவே பொதுமக்கள் தங்களது வதிவிடங்களில் காணப்படும் வீட்டுத் தோட்டங்களை சிறந்த முறையில் ஸ்தாபித்துக்கொள்வதுடன் ஏற்கனவே உள்ள வீட்டுத் தோட்டங்களை சிறந்த முறையில் பராமரித்து மேற்படி போட்டியில் பங்கு பற்றுமாறு வடமாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை பெற விரும்புவோர் விவசாயப் போதனாசிரியரிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என மேலும் தெரிவித்தார். (இ-5)

# கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

அபீர்ராஜனின் (அன்ரனி பீற்றர்) பார்வைகள் எனும் சமூக விழிப்புணர்வுக் கவிதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். திருமறைக்கலாமன்ற கலைத்தூது கலை நாவாந்துறை றோ. க.வித்தியாலயத்தில் அதிபர் எவ்.எச். அன்ரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன்போது வரவேற்புரையினை யாழ். புனித வின்சென் டிப் போல் மத்திய சபைத் தலைவர் அலெக்ஸ் அமல றெட்ணம் வழங்குவதுடன் வாழ்த்துரைகளை யாழ். வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள் பொ.அருணகிரிநாதன், எஸ்.மாணிக்கராஜா ஆகியோர் வழங்கவுள்ளனர்.

நூல் முதற் பிரதியை பாண்டியன் தாழ்வு பங்குத் தந்தை அருட்தந்தை ஜேக்கப் நீக்கிலஸ் அடிகள் பெற்றுக்கொள்ளவுள்ளார்.

நூல் வெளியீட்டுரையினை தீவக வலய கல்விப் பணிப்பாளர் திருஞான ஜோன் குயின்ரஸ் வழங்குவதுடன் நூல் மதிப்பீட்டுரையினை மாங்குளம் அமைதிக்கரங்கள் இயக்குநர் அருட்பணி செ. அன்புராசா, நயப்புரையினை யாழ். வலய தமிழ்த்துறை முன்னாள் உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி மீரா அருள்நேசன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (இ-5)

## 10.2015 04 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 610 - ஹெராகிளியஸ் ஆபிரிக்காவில் இருந்து கொன்ஸ்டண்டினப்போலை கப்பல் மூலம் அடைந்து பைசண்டைன் பேரரசன் போக்காஸ் மன்னனை ஆட்சியிலிருந்து கவிழ்த்து பேரரசனானான்.
- 1209 - நான்காம் ஒட்டோ புனித ஒரோமப் பேரரசனானான்.
- 1537 - மத்தியூ பைபிள் எனப்படும் முதலாவது முழுமையான ஆங்கில விவிலிய நூல் அச்சிடப்பட்டது.
- 1777 - அமெரிக்கப் புரட்சி: பிலடெல்பியாவின் ஜேர்மண்டவுன் என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் ஜோர்ஜ் வோஷிங்டனின் படைகளை சேர் வில்லியம் ரோவின் பிரித்தானியப் படைகள் தோற்கடித்தன.
- 1824 - மெக்சிகோ குடியரசு ஆகியது.
- 1830 - பெல்ஜியம் நெதர்லாந்து நாட்டில் இருந்து பிரிந்து தனிநாடாகியது.
- 1853 - கிரிமியப் போர்: ஒட்டோமான் பேரரசு ரஷ்யா மீது போரை அறிவித்தது.
- 1883 - ஓரியண்ட் எக்ஸ்பிரஸ் கடுகதி தொடருந்து சேவை ஆரம்பிக்கப்பட்டது.
- 1910 - போர்த்துக்கல் குடியரசு அறிவிக்கப்பட்டது. இரண்டாம் மனுவேல் மன்னன் ஐக்கிய இராச்சியத்துக்கு தப்பினான்.
- 1918 - நியூ ஜேர்சியில் ஷெல் கம்பனியில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு விபத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்கா சொலமன் தீவுகளைக் கைப்பற்றியது.
- 1957 - பண்டா - செல்வா ஒப்பந்தத்திற்கு எதிராக கண்டிக்கு நடைப்பயணம் நடத்தப்பட்டது.
- 1957 - முதலாவது செயற்கைச் செய்மதி ஸ்புட்னிக் 1 பூமியைச் சுற்றி வர விண்ணுக்கு அனுப்பப்பட்டது.
- 1958 - பிரான்சின் ஐந்தாவது குடியரசு அமைக்கப்பட்டது.
- 1959 - லூனா 3 விண்ணுக்கு ஏவப்பட்டது. இது சந்திரனைச் சுற்றி வந்து அதன் தொலைவுப் படத்தை பூமிக்கு அனுப்பியது.
- 1963 - கியூபாவை சூறாவளி தாக்கியதில் 7.000 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.
- 1965 - ஐக்கிய அமெரிக்காவுக்கு சென்ற முதலாவது பாப்பாண்டவர் பாப்பரசர் ஆறாம் போல் நியூயோர்க் வந்தடைந்தார்.
- 1966 - பசூட்டோலாந்து ஐக்கிய இராச்சியத்திடமிருந்து விடுதலை பெற்று லெசோத்தோ எனப் பெயர் மாற்றம் பெற்றது.
- 1992 - மொசாம்பிக்கின் 16 ஆண்டு கால உள்நாட்டுப் போரை முடிவுக்கு வந்தது.
- 1992 - ஆம்ஸ்டர்டாம் நகரில் குடியிருப்பு மனைகள் மீது விமானம் ஒன்று மோதியதில் தரையில் இருந்த 39 பேர் உட்பட 43 பேர் கொல்லப்பட்டனர்.
- 1997 - ஐக்கிய அமெரிக்காவின் வரலாற்றில் இரண்டாவது மிகப் பெரிய வங்கிக் கொள்ளை வட கரொலைனாவில் இடம்பெற்றது. 17.3 மில்லியன் அமெரிக்க டொலர் பணம் கொள்ளையடிக்கப்பட்டது. இவற்றில் 95 விழுக்காடு பணம் திரும்பப் பெறப்பட்டது.
- 2001 - சைபீரியாவில் விமானம் ஒன்றை உக்ரைனின் ஏவுகணை தாக்கியதில் விமானம் கருங்கடலில் வீழ்ந்து 78 பேர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

- 1884 - சுப்பிரமணிய சிவா, இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (இ. 1925)
- 1904 - திருப்பூர் குமரன், இந்திய விடுதலைப் போராட்ட தியாகி (இ. 1932)
- 1936 - கிறிஸ்தோபர் அலெக்சாண்டர், கட்டடக் கலைஞர்
- 1988 - டெரிக் ரோஸ், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்


### இறப்புகள்

- 1669 - ரெம்பிரான்ட், டச்சு ஓவியர் (பி. 1606)
- 1947 - மாக்ஸ் பிளாங்க், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனிய இயற்பியலாளர் (பி. 1858)
- 2000 - மைக்கல் ஸ்மித், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1932)

### சிறப்பு நாள்

உலக வன விலங்குகள் நாள்

# கண்காட்சி நேற்று ஆரம்பம்



நல்லூர் சங்கிலியன் வீதியில் அமைந்துள்ள Trilliam முன்பள்ளியின் மாணவர்சித்திரகைவேலை ஆக்க வெளிப்பாட்டுக் கண்காட்சியானது நேற்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகியுள்ளது.

இக்கண்காட்சியினை வடமாகாண ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரதிப் பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையா திறந்து வைத்தார்.

இக்கண்காட்சியானது மாணவர்களது திறன்களையும் ஆற்றல்களையும் வெளிக்காட்டும் வகையில் அமைந்துள்ளது. இக்கண்காட்சியை இன்று ஞாயிற்றுக் கிழமை காலை. 9.00-பி.ப.5.00 மணி வரை அனைவரும் பார்த்து மகிழலாம். (இ)

## உலக விலங்கு நாள்




உலக விலங்கு நாள் (World Animal Day) ஆண்டு தோறும் அக்டோபர் 4 அன்று கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்நாளில், விலங்குகளின் அனைத்து வாழ்க்கை முறைகள் கொண்டாடப்பட்டு, உலகனைத்தும் முக்கிய நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இயற்கை ஆர்வலரும் விலங்குகளின் தெய்வமாக மதிக்கப்படுபவருமான பிரான்சிஸ் அசிசி என்பவரின் வணக்க நிகழ்வு அக்டோபர் 4 இல் வருவதால் இந்நாள் வன விலங்கு நாளாக கொண்டாடப்பட்டு வருகிறது.

அநேகமான கிறித்தவத் தேவாலயங்கள் அக்டோபர் 4 இற்குக் கிட்டவாக வரும் ஞாயிற்றுக்கிழமையில் விலங்குகளுக்கு ஆசீர்வாதம் வழங்கும் சிறப்பு நிகழ்வுகளை நடத்தி வருகின்றன.

ஆனாலும் இன்று கிறிஸ்தவர்களால் மட்டுமல்லாமல் உலகின் விலங்கு ஆர்வலர்கள் அனைவரினாலும் இந்நாள் கொண்டாடப்பட்டு வருகிறது. விலங்குகள் சரணாலயங்கள் இந்நாளின் பல நிதி சேகரிப்பு நிகழ்ச்சிகளை நடத்துகின்றன.

# கணவாய் பிடிக்கும் தொழிலாளர்களின் தொல்லை அதிகரிப்பு

**வடமராட்சிக் கிழக்கு மாமுனை தொடக்கம சுண்டிக்குளம் வரைக்குமான கடற்பகுதிகளில் குழை போட்டு கணவாய் பிடிக்கும் தொழிலாளர்கள் தொல்லை அதிகரித்துக் காணப் படுவதாக வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.**

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

வடமராட்சிக் கிழக்குக் கடற் பரப்பில் கணவாய் கடற்தொழிலில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்கள் காட்டுமரங்களின் குழைகளை வெட்டி கடலில் போட்டுக் கணவாய் தொழிலை மேற்கொண்டு வரு கின்றனர்.

கணவாய் பிடிப்பதற்கு போடப் படும் இக்குழைகள் சாதாரண கடற்றொழில் செய்வோரின் வலை களைக் கிழித்து நாசம் செய்து வருகின்றன.

இக்குழைகள் கடலில் நிலை யாக நிற்பதால் மீன்பிடிப்பதற்குப் போடப்படும் சாதாரண வலைகள் குழைகளுடன் சிக்கி முற்றாக அல்லது பகுதியாக சேதமடைந்து வருகிறது.

இதனால் ஏனைய கடற்தொழி லாளர்கள் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்குவதுடன் வாழ்வாதார பிரச்சினைகளுக்கும் முகங்கொ டுத்து வருகின்றனர்.

இது தொடர்பாக வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர்கள் கடற் தொழிலுடன் சம்பந்தப்பட்ட அரச, அரச சார்பற்ற பிரதிநிதிகளுக்கு வாய்மொழி மூலமாகவும், எழுத்து மூலமாகவும் பல தடவைகள் பல் வேறு கோரிக்கைகளை முன்வைத் திருந்தனர்.

இதேவேளை குறுகிய காலம் கணவாய் கடற்தொழிலாளர்க ளின தொலலை குறைவடைந்து காணப் பட்டதாகவும் மீண்டும் கண வாய பிடிக்கும் தொழிலா ளர்க ளின் தொல்லை அதிகரித்துக் காணப் படுவதாகவும் வடமராட்சி கிழ க்கு கடற்தொழி லாளர் கள் கவலை தெரிவித் துள்ளனர். (இ-5-64)

# பிரகீத் எக்னெலிகொட கடத்தல் சந்தேகநபர் மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஊடகவியலாளர் பிரகீத் எக் னெலிகொட காணாமற் போன சம்பவம் தொடர்பில் கைது செய் யப்பட்டுள்ள இரா வ புலனாய்வு பிரிவு கேணல் ஒருவர் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் கொலைக்கு காரணமாக இருந்ததாக குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.

எக்னெலிகொட காணாமல் போன சம்பவத்தில் கைது செய் யப்பட்டுள்ள இராணுவ புலனாய்வு பிரிவு கேணல் ஒருவரினாலே ரவிராஜ் கொலைக்கு பயன்படு த்திய துப்பாக்கியை கிழக்கு மாகாண முன்னாள் முதலமை ச்சர் பிள்ளையான் கைக்கு வழ ங்கப்பட்டுள்ளதாக தெரியவந் துள்ளது.

இராணுவத்தினரால் குறித்த கேணலுக்கு கடந்த காலங்களில் கிழக்கு மாகாணத்தில் விசேட பல கடமைகள் ஒப்படைக்கப்பட்டிரு ந்தன.

பாதுகாப்பு சபைக்கு கிடைத்த உத்தரவுக்கமைய கேணல் குறித்த துப்பாக்கியை பிள்ளையானிடம் ஒப்படைத்துள்ள நிலையில், அவர் அதனை சரண் என்ற ஒருவருக் கும் பின்னர் ரவிராஜ்க்கு துப்பா க்கி பிரயோகம் மேற்கொண்ட கடற்படை சிப்பாய் பிரியந்த என் பவருக்கு வழங்கியுள்ளார்.

துப்பாக்கி பிரயோகம் மேற்கொ ண்டதன் பின்னர் கடற்படை சிப்பாய் பிரியந்தவை பாதுகாப் பான இடத்திற்கு பொலிஸ் கான்ஸ்டபிள் மனம்பெரி என்பவர் அழைத்து சென்றுள்ளார்.

பிரியந்த மற்றும் மனம்பெரி ஆகிய இருவரும் குற்றப் புலனா ய்வு பிரிவினரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

அத்துடன் கொலையாளியை முச்சக்கரவண்டியில் அழைத்து வந்த சாரதி மற்றும் துப்பாக்கி பிர யோகம் மேற்கொண்டதன் பின்னர் கொலையாளியை அழைத்து சென்ற மோட்டார் சைக்கிள் செலு த்துநர் தொடர் பில் அனைத்து தக வல்களும் பொலிஸாரினால் வெளி யிடப் பட்டுள்ளது. (இ-7)

# அலரிமாளிகை காவல் கடற்படையினரிடம்

(கொழும்பு)

ஜனாதிபதி செயலகம் மற்றும் அலரிமாளிகையில் வாயில் காவல் பணியில் கடந்த 6 மாதங்களாக பணியாற்றி வந்த இலங்கை இரா ணுவ பொலிஸார் அந்த பணியை இலங்கை கடற்படையினரிடம் கையளித்துள்ளனர்.

இது தொடர்பான உத்தியோக பூர்வ நிகழ்வு கொழும்பு ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது.

கடந்த ஏப்ரல் மாதம் இல ங்கை இராணுவ பொலிஸார் இந்த பொறுப்பை ஏற்ற னர்.

6 மாதங்களின் பின்னர் இந்த பணி கடற்படையினரிடம் ஒப்ப டைக் கப்பட்டுள்ளது.

இதற்கான உட ன்படிக்கையில் கடற்படை மற்றும் இராணுவ அதி காரிகள் கையெழுத்திட்டனர். (செ-12)

# இலங்கையின் தரத்தை உலகிற்கு எடுத்துக்காட்டுவோம் - ரணில்



மனித உரிமை மீறல் கள் தொடர்பில் உள்ளக விசாரணையை உலகிலேயே மிகவும் புதியதொரு பொறிமுறையில் முன்னெடுக்கவு ள்ளோம். தென்னாபிரிக்காவில் அமைக்கப்பட்ட நல்லிணக்க ஆணை க்குழுவினை பார்க்கிலும் சிறப்பா னதொரு பொறிமுறையைக்கொண்டு இலங்கையின்தரத்தை உலகத்திற்கு எடுத்துக்காட்டுவோம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்து ள்ளார்.

நாம் எந்த சந்தர்ப்பத்திலும் இராணுவத்தினருக்கு துரோகம் இழைக்கமாட்டோம். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தூக்கு கயிறிலிருந்து நாமே காப்பா ற்றினோம். மேலும் மனித உரிமை கள் பேரவை நிகழ்ச்சி நிரலி லிருந்து இலங்கையை முழுமை யாக அகற்றிவிட்டோம் என்றும் அவர் தெரிவித்தார். சமாதானத்திற் கான மக்கள் அமைப்பின் ஏற்பாட் டில் கொழும்பில் புதிய நகர மண்டப த்தில் நேற்று முன்தினம் நடைபெ ற்ற கூட்டமொன்றின் போதே பிரத மர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும்உரையாற்றுகையில்,

மனித உரிமை மீறல் விவகாரத் திலிருந்து இலங்கையை பாதுகாக் கும் வகையிலான அமெரிக்காவின் பிரேரணையை இனவாதிகள் எதிர் க்கின்றனர்.சர்வதேச குற்றச்சாட்டுக ளிலிருந்து நாட்டை மீட்க வேண் டும் என்ற தீர்மானத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவோ அல் லது நானோ,அமைச்சரவையோ எடுக்கவில்லை. ஜனவரி 8 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு மக்களே இவ்வாறு ஆணை வழங்கினர்.

நாம் முன்னெடுத்த நல்லிணக்க மற்றும் ஜனநாயகத்தை உறுதிப்ப டுத்தும செயற்பாடுகளை சர்வதேசம் ஏற்றுக்கொண்டுள்ளது. எங்கள் மீது சர்வதேசம்நம்பிக்கை கொண்டுள் ளது. இதற்கமைய ஐக்கிய நாடுக ளின் மனித உரிமை பேரவை நிகழ்ச்சி நிரலில் இருந்து இலங்கை விவகாரத்தை அகற்றியுள்ளோம். இனிமேல் இலங்கை விவகாரம் மனித உரிமை நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## வாரம் ஒரு தகவல்

### வாழ்க்கை

வாழ்க்கையில் கஷ்டங்களே வரக்கூடாது என்று சிலர் எதிர்பா ர்ப்பார்கள். இந்த நினைப்பு குழந்தைத்தனமானது. இவர்கள் தினந்தோறும் தீபாவளியாகவே இருக்காதா? என்று ஏங்கு கின்ற, எதிர்பார்க்கின்ற மத்தாப்பு மனசுக்காரர்கள்: சின்னப் பிள்ளைகள். கஷ்டமே இல்லாத வாழ்க்கை என்பது யாருக்குமே அமைந்ததில்லை.

ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள்தான் இன்பமும் துன்பமும். துன்பம் என்பது வாழ்வின் ஒரு நிலை.. ஒரு நிகழ்ச்சி.. ஒரு நேரக் கட்டாயம்... விதிப்படியும் இயற்கை நியதிப்படியும் நடந்தாக வேண்டிய நடப்பு. அந்தக் கஷ்டங்களை எதிர் கொள்வ தும் வெல்வதும் தான் வாழ்வின் சுவை... சுகம் சுவாரஸ்யம்... சவால்கள்... வாழ்க்கையை வளப்படுத்தும் வழி வகைகள்...

எல்லாமே நமக்குச் சாதகமாக அமைந்து விட்டால் வாழ்க்கை யில் சிக்கல் இல்லைதான். ஆனால் பாதகமான நிகழ்ச்சிகள் ஏற்படாமலேயே வாழ்க்கை நடத்த யாரால் முடிகிறது? அதை விதி என்று விபரிக்கின்றது நமது சமயம். ஆனால் அந்தப் பாதகமான ஒவ்வொரு நிகழ்விலும் நமக்குச் சாதகமான ஏதோ ஒன்று இருக்கின்றது என்று உறுதியாக எடுத்துக் கொண்டால் இரு க்கத்தான் செய்கிறது. அர்ச்சுனனை பேடியாகக் கடவது என்று ஊர்வசி சபித்தாள். பாதகமான அதனை மறந்து வாழும் சந் தர்ப்பத்தில் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டான் அவன்.

உண்மை பேசுவது என்பது மருந்து மாதிரி. அறவழியில் வாழ்வது பக்திமயமான உணவு மாதிரி. இரண்டும் இணைந்து நிகழ வேண்டுமே ஒழிய உண்மை மட்டும் பேசி அறவழியில் நாம் நடக்காவிட்டால் அடி உதைதான் கிடைக்கும்.

# மீன்தொட்டியில் வீழ்ந்து குழந்தை உயிரிழப்பு

காவத்தை, பனாவென்ன பகுதியிலு ள்ள வீடொன்றின் மீன்தொட்டியில் வீழ்ந்து குழந்தையொன்று உயிரிழந் துள்ளது.

ஒரு வருடமும், 2 மாதங்களும் நிரம்பிய குழந்தையே மீன்தொட்டியி னுள் வீழ்ந்து உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தனது வீட்டிலிருந்து 500 மீற்றர் தூரத்திலுள்ள உறவினர் வீட்டிலுள்ள மீன்தொட்டியிலேயே குழந்தை நேற்று முன்தினம் மாலை வீழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறிப்பிட்ட வீட்டில் குழந்தையின் பாட்டன் மற்றும் பாட்டி ஆகியோர் வசித்து வந்துள்ளனர்.

பிரேத பரிசோதனையின் பின்னர் குழந்தையின் உடலை பெற்றோரிடம் ஒப்படைப்பதற்கு பொலிஸார் நடவ டிக்கை மேற்கொண்டுள்ளனர். (இ-7)

# மாணவனை நிர்வாணப்படுத்தி பொலிஸார் புகைப்படம் எடுத்தனர்

கம்பஹா கொட்டதெனியாவவில் 5 வயது சிறுமி கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப் பட்ட தம்மை, பொலிஸார் தடுப்பின் போது, தாக்கியதாக 17 வயது மாணவன் தெரிவித்துள்ளான்.

சுமார் 12 நாட்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த தம்மை பொலி ஸார் நிர்வாணமாக புகைப்படம் எடுத்ததாகவும் மாணவன் குறிப்பிட் டுள்ளான்.

குறித்த சிறுமி மரணமான பின்னர் தமது வீட்டுக்கு வந்த சீருடையற்றபொலிஸார், தம்மையும்தமது நண்பரையும் பொலிஸ் நிலை யத்துக்கு அழைத்து சென்றனர்.

பின்னர் தாம் தனிமைப்படு த்தப்பட்டு முழங்காலில் இருக்க வைக்கப்பட்டதாக மாணவன் தெரி வித்துள்ளான்.

அத்துடன் இரவு நேர சாப்பா டும் தமக்கு தரப்படவில்லை என் றும் மாணவன் தெரிவித்துள்ளான்.

தமது தாயாருக்கும் தம்மை பார்க்க அனுமதி கிடைக்கவில்லை என்றும் மாணவன் தெரிவித் துள்ளான்.

தம்மை நிர்வாணப்படுத்தி புகைப்படம் எடுத்தபோது பிரதிபொலிஸ் அதிகாரி ஒருவரும் அங்கிருந்தார்.

தாம் சிறுமியின் கொலையில் சம் பந்தப்படவில்லை என்றுகூறியபோதும் தம்மை கொல்லப்போவதாக பொலி ஸார எச்சரித்தனர்என்றும்மாணவன் தெரிவித்தான்.

இதேவேளை விடுதலை செய்ய ப்பட்ட மாணவனின் தாயார், தமது மகன் படிப்பில் கவனம் செலுத்த வேண்டியுள்ளமையால் எவரும் அவரை குற்றவாளியாக பார்க்க வேண்டாம் என்று கோரிக்கை விடுத்துள்ளார். (இ-7-10)










# நீதிகோரி மீண்டும் யாழில் போராட்டம்

## பாலியல் குற்றவாளிகளுக்கு விசேட நீதிமன்றம் ஊடாக தண்டனை வழங்கவும் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

**தென்னிலங்கையில் பாலியல் வன்புணர்விற்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட முன்பள்ளிச் சிறுமிக்கு நீதி கோரியும் பாலியல் குற்றவாளிகளுக்கு விசேட நீதிமன்றம் ஊடாக தண்டனை வழங்கக்கோரியும் யாழ்.நகரில் நேற்றைய தினம் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.**

சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு, பெண் விடுதலைச் சிந்தனை அமைப்புக்களினால் முன்னெடுக்கப்பட்ட இப்போராட்டத்தில் பெருமளவிலான சிறுவர்கள் மற்றும் பெண்கள் கலந்து கொண்டு தமது எதிர்ப்புக்களினை வெளியிட்டிருந்தனர்.

பாலியல் குற்றங்களுக்குத் தனி நீதிமன்றம் அமைத்து விசாரி, படுகொலை செய்யப்பட்ட சேயாவிற்கு நீதி வழங்கு, பெண்கள் மீது தொடரும் பாலியல் வல்லுறவை நிறுத்து, நேற்று வித்தியா, இன்று சேயா, நாளை ?, என எழுதப்பட்ட சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இப்போராட்டம் குறித்து மேற்படி போராட்டத்தை ஒழுங்கமைத்த அமைப்புகள் தெரிவித்துள்ளதாவது,

இன்று நாட்டின் பல பாகங்களிலும் இப்படியான கொடுமைகள் நடந்த வண்ணம் உள்ளன.

மாணவி வித்தியாவின் கொலைக்குப் பின்னர் இச் சிறுமியின் பாலியல் வன்புணர்வுக்கொலை அரங்கேறியுள்ளது.

அத்துடன் வாள்வெட்டுகளும் வன்முறைகளும் அடிதடிகளும் வழிப்பறிச் சம்பவங்களும் பெருகி வருகின்றன.

இவற்றில் அதிகமாக இளைஞர்களே பங்கெடுத்து வருவதைப் பார்க்கக்கூடியதாக உள்ளது. இவைகளுக்கு ஊக்கியாக போதைப் பொருள், மதுபாவனை என்பன இருந்து வருகின்றன.

பண்பாட்டுப் பெருமை பேசப்படும் எமது நாட்டில் இத்தகைய அவல நிலை ஏற்பட்டுள்ளமை ஏன்? என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டிய தாகும்.

எமது நாட்டில் ஏற்பட்டுவரும் சமூக, பொருளாதார, கலாசார, அரசியல் மாற்றங்கள் இதுபோன்ற குற்றச்செயல்களும் வன்முறைகளும் பெருகிவருவதற்கு காரணமாக அமைகின்றன.

எனவே இவற்றை வெறுமனே ஏட்டில் உள்ள சட்டங்களாலும் தண்டனைகளாலும் மட்டும் தடுத்தி நிறுத்தி விட முடியாது.

பொதுமக்கள் மத்தியில் குறிப்பாக இளைஞர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மத்தியில் சமூக அறிவியல், பண்பாட்டு, விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலமே இதுபோன்ற கொடூரச் செயல்களை கட்டுப்படுத்தும் வாழ்க்கைச் சூழலை ஏற்படுத்த முடியும்.

இவற்றை முன்னெடுக்க சமூக மட்டங்களில் செயற்படுகின்ற அமைப்புக்கள், அரசியல் கட்சிகள், அரச ஸ்தாபனங்கள் இன, மத மொழி பேதங்கள் இன்றி அனைத்து மக்களின் நன்மைக்காகவும் மிகுந்த பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும். இதன் மூலமே சிறுவர்கள், பெண்களுக்குரிய பாதுகாப்பை உத்தரவாதப்படுத்த முடியும் என தெரிவித்துள்ளன.

இதேவேளை பாலியல் வன்புணர்வில் ஈடுபடுவோரை உடனடியாக கைது செய்து தண்டனை வழங்கக் கோரி நாடளாவிய ரீதியில் போராட்டங்கள் வலுப்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-4)

# மாடு வெட்டியவர் வசமாக மாட்டினார்

(கரணவாய்)

சட்டவிரோத முறையில் வடமராட்சி வேரூண்டி மயானத்தில் இருந்து மாடு ஒன்றினை இறைச்சிக்காக வெட்டிய நபர்களில் ஒருவர் நெல்லியடிப் பொலிசாரினால் நேற்றைய தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

எவ்வித அறிவித்தலுமின்றி அனுமதி பெற்றுக்கொள்ளாமல் கால் நடை வளர்ப்பு சங்கத்தினால் பதிவு செய்யப்பட்டு காதடையாளமிடப்பட்ட மாடு ஒன்றினையே இறைச்சிக்காக குறித்த மயானத்தில் இருந்து வெட்டியுள்ளனர்.

அது தொடர்பாக நெல்லியடி பொலிசாருக்கு கிடைத்த இரகசிய தகவலின்படி பொலிசார் அவ்விடத்தை சுற்றி வளைத்தனர்.

இதேவேளை மாடு வெட்டிய நபர்கள் இவ்விடத்தை விட்டு தப்பியோடியதோடு ஒரு நபர் மட்டும் பொலிசாரிடம் அகப்பட்டுக்கொண்டார்.

அத்துடன் வெட்டப்பட்ட மாட்டு இறைச்சியும் பொலிசாரினால் கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்ட நபர் பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டு பொலிஸ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

நாளை திங்கட்கிழமை நீதிமன்றத்தில் குறித்த நபர் ஆஜர் படுத்தப்படலாம் எனவும் தெரியவருகிறது. (இ-5-60)

# துவிச்சக்கரவண்டி திருட்டு

(கரணவாய்)

பல்பொருள் வர்த்தக நிலையம் ஒன்றின் முன் நிறுத்திவிட்டு பொருட்கள் வாங்கச் சென்ற பெண் ஒருவரின் துவிச்சக்கரவண்டி திருடப்பட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் குறித்த பெண்ணினால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி திருட்டுச் சம்பவம் கரணவாய் இமையாணன் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

சம்பவதினத்தன்று குறித்த பெண் கரணவாய் இமையாணன் பகுதியில் உள்ள பல்பொருள் வர்த்தக நிலையம் ஒன்றிற்கு முன் தனது துவிச்சக்கர வண்டியை நிறுத்திவிட்டு பொருட்களை வாங்கச்சென்றுள்ளார்.

அதேவேளை பொருட்களை வாங்கிவிட்டு வெளியில் வந்த பெண் தனது துவிச்சக்கரவண்டியை காணாது தேடியுள்ளார்.

இதனையடுத்தே பொலிஸ் நிலையம் சென்று தனது முறைப்பாட்டினை அந்தப் பெண் பதிவு செய்துள்ளார். (இ-5-60)

# யாழ்ப்பாண பொதுசன நூலகம் நடத்தும் சிறுவர், மாணவர்களுக்கான போட்டிகள்

(கொழும்புத்துறை)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சிறுவர்கள் மற்றும் மாணவர்களுக்கான போட்டிகள் யாழ். பொது சன நூலகத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கமைய ஒக்டோபர் 17 ஆம் திகதி சனிக்கிழமை 4 தொடக்கம் 5 வயது வரைக்குட்பட்டோருக்கான கதை கூறல், ஆங்கில எழுத்துகளுக்குரிய சொற்களை அமைத்தல் தொடர்பான போட்டியும் 6 தொடக்கம் 7 வயது வரைக்குட்பட்டோருக்கான சித்திரம் வரைதல் போட்டி, 24 ஆம் திகதி சனிக்கிழமை 8 தொடக்கம் 10 வயதுக்குட்பட்டோருக்கான பேச்சுப் போட்டி, 11 தொடக்கம் 14 வயதுக்குட்பட்டோருக்கான கட்டுரைப் போட்டி என்பனவும் நடைபெறவுள்ளன.

மேற்படி போட்டிகளில் பங்குபெற விரும்புவோர் ஒக்டோபர் 10 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். பொது சன நூலகத்தில் திங்கள் மற்றும் போயா விடுமுறை தவிர்ந்த ஏனைய நாட்களில் முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

மேற்படி போட்டிகளுக்கான தலைப்புகளை பொது நூலகத்தில் தமது பதிவுகளை மேற்கொண்டு பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5-51)

# சர்வதேச அஹிம்சை தின நிகழ்வு



யாழ். இந்தியத் துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் சர்வதேச அஹிம்சை தினம் நேற்றுமுன்தினம் யாழ். இந்துக்கல்லூரியில் கொண்டாடப்பட்டது.

யாழ். இந்தியத்துணைத்தூதுவர் ஆ.நடராஜன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் எதிர்க்கட்சி தலைவர் ஆர். சம்பந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

மேலும் இந்த நிகழ்வில் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜய கலா மகேஸ்வரன், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வி.கே. சிவஞானம், நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய கே.என். டக்ளஸ் தேவானந்தா, ஈ.சரவணபவன், வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.தவராசா, யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு அரச அதிபர்கள், வடமாகாண ஆளுநரின் செயலாளர் உள்ளிட்ட பல அரச உயர் அதிகாரிகள், காந்தி சேவா சங்க அங்கத்தவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் கவிஞர் சோ. பத்மநாதன், செஞ்சொற் செல்வன் ஆறுதிருமுருகன், பேராசிரியர் என். சண்முகலிங்கன் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழக மாணவி. ரீதயாளினி ஆகியோரின் சிறப்புரைகளுடன் மாற்றுத்திறனாளிச் சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (இ-9)

# வடக்கு மாகாண நீர் வழங்கல் திட்டத்தை 2020ம் ஆண்டில் அதிகரிக்க நடவடிக்கை

## நகரத்திட்டமிடல், நீர்வழங்கல்துறை அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

(குருமன்காடு)

வடக்கு மாகாண நீர்வழங்கல் நடவடிக்கையை 2020 ஆம் ஆண்டு 20 சதவீதமாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நகரத்திட்டமிடல், நீர்வழங்கல் துறை அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று காலை நகர திட்டமிடல், நீர் வழங்கல்கள் மற்றும் வைத்திய சேவை தொடர்பாக ஆராய்வதற்கான கலந்துரையாடல் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துக் கூறும்போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நீர்வழங்கலைப் பொறுத்தவரை நாட்டினுடைய முழு நீர்ப்பாசன தேவைகளில் 45 சதவீதத்தைப் பூர்த்தி செய்துள்ளோம். அதை 2020 ஆம் ஆண்டு 60 சதவீதமாக உயர்த்துவதற்கான பாரிய நீர்ப்பாசன வேலைத் திட்டங்களை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளோம்.

இந்த நிலையில் வடமாகாணத்தில் குடிநீர் வழங்கல் திட்டத்தில் 9 சதவீதம் தற்போது பூர்த்தியாகியுள்ளது. இதனை 2020 ஆண்டு 20 சதவீதமாக கூட்டுவதற்கு திட்டமிட்டுள்ளோம்.



இதைவிட வவுனியாவைப்பொறுத்தவரை இப்போதைக்கு 4 சதவீதமான பிரதேசத்தில் தான் குடிநீர் வழங்கல் திட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இதனை 2020 இல் 40 சதவீதமாக அதிகரிப்பதற்கான செயற்திட்டங்களை அறிமுகப்படுத்தி வருகின்றோம்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் எமது நாட்டில் நீர் வழங்கலுக்கென தனியான வாவி அமைக்கப்பட்டு அதற்கான அணைக்கட்டு வேலைகள் எல்லாம் பூர்த்தியாகி பேராறு நீர் வழங்கல் திட்டம் தயாராகி வருகின்றது.

இதேபோல் மல்வத்து ஓயா நீர் வழங்கல் திட்டமும் அமுல்படுத்தப்படுகின்ற போது நாங்கள் எதிர்பார்க்கின்ற 40 சதவீதத்தை 2020 ஆம் ஆண்டு எட்டுவதற்கான நடவடிக்கைகள் முழுமை பெறும். முழு நாட்டிற்கும் 15 சதவீதமாக கூட்ட திட்டமிட்டுள்ள நீர்வழங்கல் திட்டம் வடமாகாணத்தைப் பொறுத்தவரை 9 சதவீதத்தில் இருந்து 20 சதவீதம் வரை அதாவது இருமடங்காகவும் வவுனியா மாவட்டத்தைப் பொறுத்தவரை 4 சதவீதத்தை 40 ஆக கிட்டத்தட்ட 10 மடங்காகவும் அபிவிருத்தி செய்வதற்கான முயற்சி 2020 ஆண்டு எட்டப்படும்.

இந்த ஆட்சி நாங்கள் திட்டமிட்டபடி 5 வருடங்கள் தொடருடமாக இருந்தால் இந்த இலக்கை நாங்கள் அடையலாம். அதற்கான அனைத்து வேலைகளும் ஒழுங்கமைக்கப்பட்டு வருகிறது.

இன்று விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அவர்களிடம் இருந்து நீர் வழங்கலுக்காக பெறப்பட்ட காணிகள், அதற்கான மாற்றுக் காணிகள் வழங்கல், நீர்ப்பாசன திட்டங்களை கிராம மட்டத்திற்கு வழங்குதல் தொடர்பாக பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கும் நாம் தீர்வுகளை வழங்கியுள்ளோம் என்றார். (2-250)










வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் கண்டாவளை பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்திய கலாசார விழா கடந்த முதலாம் திகதி கண்டாவளை தட்டுவன் கொட்டி பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கண்டாவளை பிரதேசத்தில் கலை இலக்கிய பொதுப்பணிகளில் சேவையாற்றியவர்களுக்கு கலை ஒளி விருது வழங்கி வைக்கப்பட்டது. அத்துடன் கண்டாவளையின் மகிமை கூறும் வளை ஓசை நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

(படங்கள்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)

## மக்கள் குடியேறாத வீடுகளில் சமூக விரோத செயற்பாடுகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கோணாவில் யூனியன்குளம் புதிய குடியிருப்பு பகுதிகளில் வன்னி யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்தியன் வீட்டுத்திட்டத்தினூடாக வீடுகள் வழங்கப்பட்டன.

இவ்வாறு வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டு கட்டி முடிக்கப்பட்ட வீடுகளில் சில குடும்பங்கள் மட்டுமே குடியிருப்பதாகவும் சில குடும்பங்கள் வீடுகளை விட்டு வெளிமாவட்டங்களில் குடியேறி வாழ்ந்து வருவதாகவும் அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

குடியேறாமல் பற்றைகள் சூழ்ந்து காணப்படுகின்ற வீடுகளில் தற்போது கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் நடைபெறுவதோடு சமூக விரோத செயற்பாடுகளும் நடைபெற்று வருவதால் அப்பகுதி மக்கள் அச்சத்துடன் பொழுதைக் கழிப்பதாக தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

குறித்த குடியிருப்பு பகுதிகளில் மக்களுக்கு என காணிகள் வழங்கப்பட்டு இந்திய வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டு மக்கள் குடியேறி வாழ்ந்து வரும் நிலையில் சில குடும்பங்கள் இன்றுவரை தங்களுக்கு வழங்கப்பட்ட காணிகளைத் துப்புரவு செய்யாது வீடுகள் கட்டி முடிக்கப்பட்டும் குடியேறாத நிலை காணப்படுகின்றது. வாழ்வாதார முன்னேற்றம் கருதி இம்மக்களுக்கு வழங்கப்பட்ட கால்நடைகள் அவ்விடங்களுக்கு செல்லும்போது அவை திரும்பி வருவதில்லை என பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தெரிவிக்கின்றன.

எனவே கிராம அபிவிருத்தி சங்கங்கள், கிராம அலுவலர், பொது அமைப்புக்களின் பிரதிநிதி ஆகியோர் இணைந்து வீடுகள் வழங்கப்பட்ட பெயர் பட்டியலின் ஊடாக உரிமையாளர்களை கண்டறிந்து அவர்களை அங்கு குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-27)

## சமுதாயம் சார் சீர்திருத்துதல் குறித்து நடைபெற்ற கருத்தரங்கு

(பனிக்கன்குளம்)

சமுதாயம் சார் சீர்திருத்துதல் கட்டளைக் குட்படுத்தல் தொடர்பான விழிப்புணர்வுக்கருத்தரங்கு நேற்று முன்தினம் கிளிநொச்சி சமுதாயம் சார் சீர்திருத்தத் திணைக்களத்தின் மாவட்ட அலுவலகத்தில் சமுதாயம் சார் சீர்திருத்த உத்தியோகத்தர் கே.எம்.நஜிம் தலைமையில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற வளாகத்தில் இயங்கிவரும் சமுதாயம் சார் சீர்திருத்தத் திணைக்களத்தின் மாவட்ட அலுவலகத்தின் ஊடாக நூற்றுக்கும் மேற்பட்டோர் சமுதாயம்சார் சீர்திருத்தக் கட்டளைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் சர்வதேச சிறுவர், முதியோர் தினத்தையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கில் இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் கிளிநொச்சி மாவட்ட உத்தியோகத்தரும் சட்டத்தரணியுமான வி.பிரசாந்தன் மற்றும் சட்டத்தரணி நாசீர் உள்ளிட்டோர் கலந்துகொண்டு கருத்துக்களை வழங்கினர். சமுதாயம் சார் சீர்திருத்தத் திணைக்களமானது நீதிமன்றங்களில் இயங்கும் ஒரு பரந்துபட்ட சேவையை வழங்கும் ஒரு திணைக் களம் ஆகும்.

இதன் செயற்பாடுகளில் விசேடமாக ஒவ்வொரு குடும்பத்தையும் நாட்டையும் காக்கும் 1999 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க சமுதாயம் சார் சீர்திருத்த கட்டளைச்சட்டம் ஆகும். நீதிமன்றங்களினால் சிறு குற்றச் சாட்டுக்களு க்காகத் தண்டனை பெற்ற ஒருவர் மீண்டும் அக்குற்றத்தை செய்யாது இருக்க பல்வேறு செயற்றிட்டங்களைச் சமுதாயம் சார் சீர் திருத்த திணைக்களம் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-28)

## “பாரிசவாத நோயை தவிர்த்தல்” தேசியமட்டத்தில் சித்திரப்போட்டி

(மல்லாவி)


இலங்கை சுகாதார கல்விப்பணியகம், சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சு ஆகியவற்றின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிமனையின் ஒழுங்கமைப்பில், பாரிசவாத நோயைத் தவிர்த்தல் பற்றிய தேசிய மட்டத்திலான சித்திரப்போட்டி பாடசாலை மாணவர்கள் மட்டத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம்-9 இல் கல்வி பயிலும் மாணவர்கள் இப்போட்டியில் பங்கேற்க முடியும். ஆரோக்கிய வாழ்க்கை முறைகளின் மூலமாக பாரிசவாதத்தை தடுப்போம் எனும் தொனிப்பொருளில் ஏ3 அளவுள்ள தாளில் பென்சில் வர்ணம் தவிர்ந்த ஏனைய வர்ணங்களைப் பயன்படுத்தி சித்திரம் வரைய ப்பட வேண்டும்.

ஓவியத்தின் பின்புறம் மாவட்டம், மாணவர் பெயர், வகுப்பு, பாடசாலை ஆகியவற்றைக் குறிப்பிட்டு அதிபரின் சிபார்சுடன் மாணவர்கள் கல்வி பயின்று வருகின்ற பாடசாலைகளுக்கு அண்மையாக அமைந்துள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் (முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, மல்லாவி, ஒட்டுசுட்டான்) நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ நாளை திங்கட்கிழமைக்கு முன்பாக கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்க வேண்டும் என அவர் கேட்டுள்ளார். (2-15)

## க.பொ.த (சா/த) பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு இருநாள் கருத்தரங்கு



(முள்ளியவளை)

இந்த வருடம் க.பொ.த (சா/த) பரீட்சைக்கு தோற்றவிருக்கும் முல்லை கல்வி வலயத்திற்குட்பட்ட முள்ளியவளை புதுக்குடியிருப்பு பிரதேச மாணவர்களிற்கான கணித, விஞ்ஞான பாடங்களிற்கான இரண்டு நாள் கருத்தரங்கு டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனியின் அனுசரணையுடன் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சரசவி மித்துரோ ஒழுங்குபடுத்தலில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியிலும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியிலும் நேற்று காலை 8.30 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வித்தியானந்தாக் கல்லூரியில் நடந்த ஆரம்ப வைபவத்தில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் கலந்து கொண்டார். விருந்தினர்களாக முல்லை வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி உ.முனீஸ்வரன், கல்லூரி அதிபர் க.சிவலிங்கம், டேவிட் பீரிஸ் கம்பனியின் இலங்கையின் பொது முகாமையாளர் ஜெயந்த ரத்நாயக்கா, பிராந்திய முகாமையாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். இரண்டு பாடசாலைகளிலும் 600 மாணவர்கள் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

கலந்துகொண்ட மாணவர்களுக்கு பரீட்சைக்கான கணித, விஞ்ஞான பாடங்களிற்கான மாதிரி வினாத்தாளும் கடந்த நான்கு வருட பரீட்சை வினா விடைகளும் தாங்கிய புத்தகமும் காகிதாதிகளும் வழங்கப்பட்டன. (2-302)

யாழ்.மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 01

### எம்மை மாற்றிக்கொள்ள...

குழந்தைகளுக்கு குளிப்பாட்டிய பின் சாம்பிராணி புகை காட்டும் முறையானது குளிக்கப் போய் சேறு பூசிக்கொள்வதற்கு ஒப்பானது. இது அவர்களிலே பல சுவாசம் சம்பந்தமான பிரச்சினைகளை தோற்றுவிக்கும் அபாயம் இருக்கிறது. அத்துடன் வளிமண்டலத்தையும் மாசுபடுத்துகிறது. இந்த முறையை மாற்றிக் கொள்ள எம்மால் முடியுமா?

அகத்தியா

## இடுப்பு நோ ஏற்படுவதை தடுப்பது எப்படி?

பொதுவாக பலருக்கு இப்பிரச்சினை உள்ளது. இதற்கு தொடர்ச்சியாக நோ மருந்துகளை பாவிப்பது நல்லதன்று. நீங்கள் தினமும் இருக்கும்போதும், நடக்கும்போதும்.நித்திரை கொள்ளும் போதும் வேலை செய்யும் போதும் , வாகனம் செலுத்தும் போதும் உங்கள் உடலை சரியான நிலையில் வைத்திருந்தால் இடுப்பு வலி குறையும்.

### நான் எவ்வாறு கதிரையில் அமரவேண்டும்?

◆ இருக்கும்போது ஒருபோதும் தொடையில் பாரம் தாங்கி இருக்கக்கூடாது.


◆ ஒருமணித்தியாலத்துக்கு மேல் தொடர்ந்து அமரக்கூடாது.


◆ கதிரை உங்கள்கீழ் இடுப்பிற்கு ஆதரவாக இருக்க வேண்டும்.

◆ நீங்கள்குனியவேண்டி இருப்பின் ஒருபோதும் கழுத்தையோ அல்லது முதுகையோ வளைத்து குனிய வேண்டாம். இடுப்பை வளைத்து குனியவேண்டும்.

◆ ஒருபோதும் கதிரையில் இருந்து கொண்டுதூங்க கூடாது.

◆ கால்களைகுறுக்காக போடுவது கால்களுக்கான குருதியோட்டத்தை பாதிக்கும்.



### எவ்வாறுநடக்கவேண்டும்?

◆ ஒருபோதும் உடலை முன்னோக்கி நகர்த்த கூடாது.

◆ கால்கள்முன்னோக்கி நகர்த்தி நகர வேண்டும்.

◆ தோள்பட்டை, கைதளர்வாக இருக்க வேண்டும்.

### எவ்வாறு தூங்கவேண்டும்?

◆ ஒருபோதும் குப்புறத்தூங்கக்கூடாது.

◆ கைகளை பிடரியில் கட்டிய படிதூங்கக்கூடாது.


◆ ஒரு பக்கமாக கால்களை மடித்துக் கொண்டு கைகளை தளர்வாக வைத்துக்கொண்டு தூங்க வேண்டும்

◆ நேராக படுப்பதாயின் முழங்காலுக்கு கீழே தலையணையை வைத்துக்கொண்டு தூங்க வேண்டும்

◆ மெத்தை இறுக்கமானதாக இருக்கவேண்டும்.

◆ நித்திரையால்எழும்பும்போது உடனடியாக எழும்பக் கூடாது. முதலில் மெத்தையின் ஓரத்துக்கு வரவேண்டும். பின்கால்களை நிலத்தில் ஊன்ற வேண்டும். பின் கைகளின் உதவியுடன் எழுந்து அமரவேண்டும். பின்மெதுவாக எழும்ப வேண்டும்.






### எவ்வாறு நிற்க வேண்டும்?

◆ நிமிர்ந்துநேராகநிற்கவேண்டும்.

◆ நின்றுகொண்டுவேலைசெய்வதாயின்ஒருசிறு குற்றியின் மேல் காலை உயர்த்திவைத்துக்கொண்டு நிற்க வேண்டும்.



Good Posture

### எவ்வாறு வாகனம் செலுத்த வேண்டும்?

◆ இருக்கையை முழங்கால் சிறிதளவு மடித்திருக்க கூடியவகையில் முன்னோக்கி சரி செய்ய வேண்டும்.

◆ உங்கள் இடுப்புக்கும் இருக்கைக்கும் இடையில் குஷன் வைத்திருத்தல்.




### எவவாறு பாரங்களை தூக்கவேண்டும்?


◆ ஒருபோதும் முழங்காலை மடிக்காமல் இடுப்பை வளைக்கக்கூடாது.

◆ இடுப்பை நேராக வைத்துக்கொண்டு முழங்காலை மடித்து பொருளை தூக்கவேண்டும்.

◆ தூக்கிய பொருளை உடலுக்கு அருகாக பிடித்துக் கொண்டே கொண்டு செல்லவேண்டும்.



### கணனி பாவிக்கும் போது....



### சிந்தனைக்கு...

புதிய மருத்துவ ஆய்வுகள் ஒவ்வொருவரினதும் சுகாதாரக்கவனிப்பு முறைகள், அவர்களின் கலாசாரம், பாரம்பரியம், நம்பிக்கைகள், மொழி , இனம், சுற்றாடல், உணவுமுறை போன்ற பல விடயங்கள் சார்ந்ததாக அமைய வேண்டும் என்பதை உறுதிப்படுத்தியிருக்கிறது. மேலைத்தேய சுகாதாரக் கவனிப்பு முறைகள் அனைத்தையும் அப்படியே கண்மூடித்தனமாக நாம் கடைப்பிடிக்க முடியாது.அது சரியானதாகவும் அமையாது. எனவே எமது சொந்த சுகாதாரக் கவனிப்பு முறைகளில் நாம் தன்னிறைவு பெற்று ஆக வேண்டும். எமது மக்களுக்கு ஏற்ற வகையில் மருத்துவக் கவனிப்புக்கள் அமைய வேண்டும்.

சி.சிவன்சுதன்
பொதுமருத்துவ நிபுணர்

## உங்கள் கருத்து

ஒருவர் கடுமையான ஒரு நோயினால் பீடிக்கப்பட்டிருக்கும் பொழுது அவரின் நோய்நிலை சம்பந்தமான உண்மையான தகவல்களை நோயுற்றவருக்கு தகுந்த முறையிலே தெரியப்படுத்தப்பட வேண்டும் என்பது ஒருபொது மருத்துவவிதி. உங்களுக்கு கடுமையான ஒரு நோய்நிலை ஏற்பட்டால் அது சம்பந்தமான உண்மைத்தகவல்களையும், சிகிச்சை முறைகளையும்

A) உங்களுடன் நேரடியாக பேசுவது நல்லது.
B) உங்களுடன் நேரடியாக பேசாது உங்கள் குடும்பத்தவர்களுடன் அல்லது நண்பர்களுடன் பேசுவது நல்லது.
C) யாருக்கும் தெரியப்படுத்தாது மருத்துவரே பொருத்தமான வைத்தியமுறைகளை தொடர்வது நல்லது.

A,B,C என்பவற்றில் உங்கள் தெரிவை 0782075424 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.

> தண்டு தடிகள் பொல்லு கொண்டு வருதல் கண்டால்
> பெண்டில் பின்னால் நின்று சண்டித்தனங்கள் செய்யும் வீராதி வீரர்
> - நாட்டார் பாடல்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஆயுதப் போராட்டம் நடத்திய தமிழினம் சோர்ந்து போவதோ!

ஒரு மனிதன் மூன்று வலகயான சோர்வு நிலைக்கு உட்படலாம் என்பது பொது விதி.

உடற்சோர்வு, உளச்சோர்வு, உயிர்ச்சோர்வு என்பனவே அந்த மூன்றும் ஆகும்.

குறித்த மூன்று சோர்வில் எது மனிதனைப் பாதித்தாலும் அது அவனின் வாழ்வியலுக்கு இடையூறாகவே இருக்கும்.

பாரதப் போர்நடைபெறப் போகிறது. கௌரவர் தரப்பில் தன் குருநாதர்களும், நண்பர்களும் நிற்பதை அருச்சுனன் பார்க்கிறான்.

இவர்களைக் கொல்வதா? என்று நினைத்து அருச்சுனன் மனம் சோர்கிறான். போர்க் களத்தில் உளச்சோர்வுக்கு உட்பட்ட அருச்சுனனை அதிலிருந்து மீட்டு யுத்தத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு கண்ண பரமாத்மா கீதோபதேசம் செய்தார். அருச்சுனனின் உளச்சோர்வுக்கு குருசேத்திரத்தில் நடந்த சிகிச்சை தான் கீதோபதேசமாகும்.

இன்றைய மருத்துவ மொழியில் இதனைக் கூறுவதாயின், போர்க்களத்தில் அருச்சுனனுக்கு சீர்மியம் செய்யப்பட்டது. இங்கு ஆற்றுப்படுத்துபவராக கண்ணன் இருந்தான்.

சிலப்பதிகாரத்தில் கோவலன் கொல்லப்பட்டது கண்டு வீறுகொண்டெழுந்த கண்ணகி, பாண்டிய மன்னனின் அரண்மனைக்குச் சென்று நீதி கேட்கிறாள்.

அந்தோ! தான் வழங்கிய தண்டனை தவறு என்று பாண்டிய மன்னன் உணர்ந்ததும் அவனுக்கு உயிர்ச்சோர்வு ஏற்பட்டு விடுகிறது. உடனடியாகவே அவன் கீழே விழுந்து இறந்து போகிறான்.

உயிர்ச்சோர்வு ஏற்பட்டால் உயிர் பிரிந்து விடும். குருசேத்திரத்தில் அம்பு பட்டு வீழ்ந்து கிடக்கும் பீஷ்மர் உத்தராயண காலம் வரும் வரை தன் உயிரை பிரிய விடாது தடுத்து நின்றார். இது உயிர் வலிமையாகும்.

இராமாயணத்தில் தன் தலை முடியின் நரை கண்ட தசரதன் ஆட்சியிலிருந்து ஓய்வுபெற நினைத்தான் அல்லவா? இதுதான் உடற்சோர்வு.

ஆக, மேற்குறிப்பிட்ட உடல், உள, உயிர்ச்சோர்வு என்பது மிகவும் மோசமானவை. இச்சோர்வில் இருந்து ஒவ்வொரு மனிதரும் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

எனினும் துரதிர்ஷ்டவசமாக ஈழத் தமிழினம் யுத்தம், பொருளாதார நெருக்கடி, நாளாந்த சீவனோபாயத்துக்கான ஏக்கம் என்பவற்றால் மூன்று நிலைச் சோர்வுக்கும் ஆளாக வேண்டியதாயிற்று.

எங்கள் வாழ்வுக்கு மற்றவர்களின் நிவாரணம் தேவை என்று நினைப்பது எங்கள் இனத்தின் மிகப் பெரிய வீழ்ச்சியாகும். எனினும் அதுவே நடைமுறையில் உள்ளது.

மிகப்பெரிய ஆயுதப் போராட்டத்தை நடத்தி உலகத்தையே தன்பால் திசை திருப்பிய தமிழினம் இன்று யுத்தம் என்றால் நடுங்கிப் போகிறது. அந்தளவிற்கு யுத்தத்தின் இழப்பு மூன்று நிலைகளிலும் எங்கள் இனத்தை சோர்வுப்படுத்தி விட்டது.

இதன் காரணமாகத்தான் ஐ.நா தீர்மானம் எமக்குப் பாதகமானது என்று கூறுவதற்குக் கூட தமிழ் மக்கள் தயங்குகின்றனர்.

எதென்றாலும் நடந்து முடியட்டும் என்ற வெறுப்பு நிலை எங்கள் இனத்தின் எழுச்சிக்கும் எதிர்கால ஆரோக்கியத்துக்கும் பேராபத்தானது.

ஆகையால் எங்கள் மக்களின் மனங்களில் உத்வேகத்தை ஏற்படுத்துவது மிகவும் அவசியமானது இல்லையேல், தனிநாடு கேட்ட தமிழினம் கட்டியிருந்த கோவணம் பறிபோனாலும் கவலை கொள்ளாது; பற்றற்ற நிலையில் எல்லாவற்றையும் இழந்து போகும். ஆகையால் யுத்தத்தின் இழப்பிலும் நாங்கள் வீறு கொண்டெழுந்து எங்கள் உழைப்பில், எங்கள் முயற்சியில் வாழ்வோம் என்ற மனத்தைரியத்தை ஊட்டுவது அவசியம்.

என்றைக்குத் தமிழினம் தனது சொந்தக்காலில் நிற்கிறதோ? அன்றுதான் இனத்தின் பெருமை - உரிமை அடையப்படும்.

## விளையாட்டு விழா இன்று

(யாழ்ப்பாணம்)


வடமராட்சி சமரபாகு அறவழி மழலைகள் கல்விப்பூங்காவின் விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சமரபாகு நியூட்டன் விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

சமரபாகு அறவழி மழலைகள் கல்விப்பூங்கா முகாமைத்துவ குழுவின் தலைவர் க.தவச்செல்வம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் வே. சிவயோகம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளதுடன் சிறப்பு விருந்தினராக யாழ். கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை அதிபர் கை.திருமுருகன், சமரபாகு கிராமஉத்தியோகத்தர் கு.சந்திரமோகன், சமரபாகு அபிவிருத்தி உத்தியோகத்தர் ப.இளங்கீரன், சமரபாகு சமுர்த்தி உத்தியோகத்தர் திருமதி நி. சிறிநாதன் ஆகியோர் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினர்களாக கரவெட்டி பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் திருமதி க.பாலகிருஸ்ணன், பருத்தித்துறை பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் திருமதி சு.சுரேஸ், குடும்பநல உத்தியோகத்தர் சி.சறோஜினி, சமரபாகு நியூட்டன் சனசமூக நிலையத் தலைவர் கி.வெள்ளிமலை சமரபாகு மழலைகள் கல்விப்பூங்கா ஸ்தாபகர் கா. செல்வச்சோதி சல்லியவத்தை சிறிமுத்துமாரி அம்மன் ஆலயத்தலைவர் செ.ஜெயம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

## ஐ.நா பிரேரணை குறித்து அனைத்துக் கட்சி மாநாடு!

### ஜனாதிபதியினால் அழைப்பு



ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் இலங்கை தொடர்பில் முன்வைத்த பிரேரணை குறித்து கலந்துரையாடல் மேற்கொள்வதற்காக அனைத்து கட்சி மாநாடொன்று அவசியம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா விஜயம் நிறைவடைந்து இலங்கையை வந்தடைந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் இரவு ஊடகத்திடம் விசேட உரையாற்றினார்.

இலங்கையில் அரசியலமைப்பு திருத்தச்சட்டத்திற்கமைய தற்போதைய அரசாங்கம் செயற்படும் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து தரப்பினரின் கருத்து மற்றும் ஆலோசனைகளை கருத்தில் கொள்வதற்காக அனைத்து கட்சி மாநாடொன்று அவசியம் என ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

அதற்காக நாட்டில் ஏற்றுகொள்ளப்பட்ட அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இப்பிரேரணைக்காக அனைத்து மத தலைவர்களின் ஆலோசனைகளை பெற்றுகொள்வதற்காக அனைத்து மத தலைவர்கள் மாநாடொன்றை ஏற்பாடு செய்யவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்துள்ளார். (செ-12)

## ஆசிரியர் தின நிகழ்வு

யாழ்.இடைக்காடு மகா வித்தியாலய ஆசிரியர் தின நிகழ்வு நாளை முற்பகல் 11.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் சிரேஷ்ட மாணவ தலைவன் க.மிசாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

சிறப்பு விருந்தினராக தமிழ் ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.ஆர்.டேவிட் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

## திருமண வாழ்க்கையில் நீயா? நானா? என்ற கேள்வியை நிறுத்தி நாமாகுவோமா?

இன்று எமக்கு தரப்படும் பைபிள் பகுதியில் இயேசுவின் கருத்து வழியாகக் குற்றம்காணலாம், என்கிற குறுகிய நோக்குடன் பரிசேயருள் ஒருசிலர் "மணவிலக்கு" குறித்து கேட்பதற்காக அவரண்டையில் கூடிவருகின்றனர்.

இக்கேள்விதான் இன்றைய பைபிள் பகுதியின் பின்னணி. பரிசேயர் இயேசுவிடம் கேட்கும் கேள்வி இது: "கணவன் தன் மனைவியை விலக்கிவிடுவது முறையா?" மனைவியை ஏதோ ஒரு பொருள் போலவும், அந்தப்பொருளை ஆண்கள் திருப்பிக் கொடுப்பது போலவும் இக்கேள்வி தென்படுகிறது. இயேசுவைச் சோதிக்கவே இந்தக் கேள்வி கேட்கப்பட்டது

### பரமபிதா காட்டிய பாதை

என்பது எமக்கு நன்கு தெரியும். இக்கேள்வி கேட்கப்பட்ட காலத்தில் ஏரோது அந்திபாசு தனது முதல் மனைவியை விலக்கி வைத்துவிட்டு, ஏரோதியாவை மணந்து கொண்டிருந்தான். இயேசுவின் பதிலை பொறுத்து ஏரோதுவின் கோபத்திற்கு இயேசு ஆளாக நேரிடும். அரசருக்கு எதிராகப் பழித்துப் பேசுகிறான் என, அவர் மீது குற்றம் சாட்டி திருமுழுக்கு யோவானைப் போலவே இயேசுவையும் நிரந்தரமாக ஒழித்துக் கட்டிவிடலாம் என்று அவர்கள் கபட சிந்தனையுடன் கேட்ட கேள்வியிது. கேட்பவர்கள் எந்தக் கோணத்தில் கேட்டாலும் இயேசுவுக்குக் கவலையில்லை. சமுதாயம் நல்ல உண்மைகளைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதில் எப்போதும் குறியாய் இருந்த இயேசு, இத்தருணங்களை எல்லாம் பயன்படுத்திக் கொண்டார். பெண்கள் பொருட்களைப் போலவே நடத்தப்பட்டனர். அன்று மக்கள் மத்தியில் பெண்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த சமூக நிலை சரியானது அல்ல என இயேசு கோடிட்டுக்காட்டுகிறார். இதே அவலம் இன்றும் பல நிலைகளில், பல வடிவங்களில் நம் சமுதாயத்தில் இல்லையா?

இங்கு ஒரு சம்பவத்தை குறிப்பிடுவது சாலப்பொருத்தம்: 80 வயது நிறைந்த ஒரு முதியவர் 8.30 மணிக்கு மருத்துவமனைக்கு அவசரமாக வந்து தன் கையில் போடப்பட்ட இழைக் கட்டை தாமதமின்றி அவிழ்க்குமாறு கேட்டுக்கொண்டார். சிறிது நேரம் அவரை காத்திருக்கச் சொன்ன தாதியரிடம் அவர் 9 மணிக்கு ஒரு அவசர வேலை உள்ளதென்றும், தனக்கு உடனே உதவும்படி கேட்டுக் கொண்டார். தாதியர் அவரதுகட்டை அவிழ்த்துக் கொண்டிருக்கும்போது, அவருடைய அவசர வேலையைப்பற்றி கேட்டார். "அருகிலிருக்கும் மற்றொரு மருத்துவமனைக்குச் சென்று, தன் மனைவியுடன் காலையுணவு அருந்தவேண்டும் என்றார்அவர்." "நீங்கள் தாமதமாகச் சென்றால், மனைவி கோபித்துக் கொள்வாரோ என்று தாதி கேட்டதும்", முதியவர் சிரித்தார். பின் "என் மனைவி மறதி என்ற நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். எனவே, கடந்த ஐந்து ஆண்டுகளாக அவருக்கு நான் யார் என்பது கூடத் தெரியாது" என்றார். தாதி "நீங்கள் யாரென்றே தெரியாமல் இருக்கும் உங்கள் மனைவியை ஒவ்வொரு நாளும் பார்க்கச் செல்கிறீர்களா?" என்று தன் ஆச்சரியத்தை வெளியிட்டார். அதற்கு அந்த முதியவர், தன் புன்னகை மாறாமல், "மனைவிக்குத்தான் என்னைத் தெரியாது, ஆனால், எனக்கு அவரை நன்கு தெரியும்" என்று கூறினார். கண்களில் பொங்கிய கண்ணீரை அடக்கிக்கொண்டு தாதி அந்த முதியவருக்கு உதவிகள் செய்து அனுப்பினார்.

நவீனத்துவ இன்றைய உலகில் பல திருமண உறவுகள் தொடர்ந்தும் விவாகரத்துக்கள் என விரிந்து கொண்டே செல்கின்றன. திருமணங்களின் முறிவு மனித வாழ்வின் சீரழிவின் அடையாளம். ஆணும் பெண்ணும் திருமணத்தில் இணைந்தபின், இறுதிவரை இணைந்து வாழும்போது மனித சமுதாயம் வாழும். திருமண முறிவு, விவாகரத்து தொடருமாயின், ஒரு தலைமுறை அத்துடன் இல்லாது வாழ்ந்து அழிந்து விடுகிறது. திருமணத்தில் இணைந்தவரைப் பிரிக்கும் முயற்சி. தலைமுறையை அழிக்கும் முயற்சி.



கடவுளின் அன்புக்கு தகுந்த சான்றாக இருக்கும் மண வாழ்க்கை, நலமான தொரு மனித சமுதாயத்தின் அடித்தளம். கணவன், மனைவி இரு வருக்கும் இடையே உள்ள நிலையான உறவே உறுதியான குடும்பத்தையும், சமுதாயத்தையும் உருவாக்கும். தலைமுறையை வாழவும் வளரவும் வைக்கும்.

இன்று நாம் சந்திக்கும் பல விவாகரத்துக்களின் வேர்களைத் தேடிப்போனால் அங்கு உறவுகளின் பிரச்சினைகளை நாம் பார்க்கலாம். இந்தப் பிரச்சினைகளுக்கு ஆணிவே

**ம. பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திரப் பத்திரிகையாளர்**

ராக இருப்பது நீயா?, நானா? யார் பெரியவர்? என்ற கேள்விதான். "ஆணுக்குப் பெண் சரி நிகர் சமம்" என்று ஆணித்தரமாய் இயேசு சுட்டிக் காட்டுகிறார். விவாகரத்து சம்பந்தமாக பைபிள் சட்டப்படி இயேசு கூறும் மிக முக்கியமான விடயம்: "இல்லற வாழ்க்கையில் இணைந்திருக்கும் கணவனும் மனைவியும் எக்காரணத்தைக் கொண்டும் பிரிந்து விடக்கூடாது. விவாகரத்துப் பண்ணக் கூடாது. மரணம் வரும் வரை இணைந்திருக்க வேண்டும்" என்பதுதான். ஆணா, பெண்ணா, நீயா, நானா யார் பெரியவர் என்ற கேள்வியை எழுப்பாமல், இருவரும் இணை என்று உணரும் போது, திருமண வாழ்க்கைப் பிரச்சினைகள் தீர வழியுண்டு: "இன்பத்திலும் துன்பத்திலும், உடல் நலத்திலும் நோயிலும் ஒருவருக்கொருவர் பிரமாணிக்கமாக இருப்போம் என இறை சமூகத்தின் முன் உறுதிமொழி எடுக்கப்பட்டு இன்பமாக தொடங்கப்படும் இல்வாழ்க்கையில் இறுதி வரை பிரியாது இன்பத்துடன் வாழ்வோம்'

# மரண தண்டனைக்கு தடைவிதிக்க வேண்டும்

## சுவிஸ் தீர்மானத்தை ஏற்றது ஐ.நா சபை

**சர்வதேச நாடுகளில் மரண தண்டனையை இரத்து செய்வதற்கு சுவிட்சர்லாந்து அரசு கொண்டு வந்த தீர்மானத்திற்கு ஐ.நா.மனித உரிமைகள் பேரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.**



சர்வதேச நாடுகளில் மரண தண்டனை விதிப்பதை தடை செய்வது தொடர்பாக சுவிஸில் உள்ள ஜெனிவா நகரில் கடந்த 3 வாரங்களாக நடைபெற்று வந்த ஆலோசனை கூட்டம் நேற்று முன்தினம் நிறைவு பெற்றுள்ளது.

இந்த ஆலோசனை கூடடத்தில், மரண தண்டனைக்கு எதிராக சுவிஸின் வெளியுறவு அமைச்சகம் தீர்மானம் கொண்டு வந்தது.

இந்த தீரமானத்திற்த ஆதரவாக 26 நாடுகள் வாக்களித்துள்ள நிலையில், 13 நாடுகள் இந்த தீரமானததை ஏற்றுக்கொள்ள மறுத்துள்ளன.

மேலும், 8 நாடுகள் வாக்கெடுப்பை புறக்கணித்துள்ளன. எதிர்வரும் 2025ஆம் ஆண்டிற்குள் உலகம் முழுவதும் மரண தண்டனையைதடைசெய்ய வேண்டும் என்பதே சுவிஸ் முன்மொழிந்துள்ள தீர்மானத்தின் முக்கிய நோக்கமாகும்.

இது தொடர்பாக பேசிய சுவிஸின் வெளியுறவுத்துறை அமைச்சரான டிடியர் பேர்ஹால்டர், மரணதண்டனையை நிறைவேற்று வது என்பது சர்வதேச சட்டங்கள் மற்றும் மனித உரிமைகளுக்கு முற்றிலும் எதிரானது ஆகும்.

ஒவ்வொரு நாடும் மனித உரிமைகளை காப்பதில் அதிக அக்கறை செலுத்துவதுடன், மரண தண்டனையை விதிப்பதை முற்றிலுமாக தடை செய்ய வேண்டும் என அவர் உலக நாடுகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளார். ஐ.நா மனித உரிமைகள் பேரவை ஒப்புதல் அளித்துள்ள இந்த் தீர்மானம் தொடர்பாக எதிர்வரும் மார்ச் மாதம் விரிவான ஆலோசனை மேற்கொள்ளவுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நிலச்சரிவில் சிக்கி 30பேர் உயிரிழப்பு

மத்திய அமெரிக்காவின் கவுதமாலாவில் கடந்த வியாழக்கிழமை ஏற்பட்ட நிலச்சரிவில் 30க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். மேலும், 600 இற்கும் மேற்பட்டோரை காணவில்லை என்று தெரிய வந்துள்ளது. தலைநகர் கவுதமாலா சிட்டிக்கு மிக அருகிலுள்ள எல்கம்பிரே தோஸ் என்கிற மலைக் கிராமத்தில், பெய்த கனமழையால் அங்கிருந்த பெரிய பாறைகள் வெள்ளத்தில் சகதியுடன் அடித்துச் செல்லப்பட்டு, குடியிருப்புகளின் மீது சரிந்து விழுந்தது.

இதனைத் தொடர்ந்து, மீட்பு பணியாளர்கள் விரைந்து வந்து மண்ணுக்கு அடியில் சிக்கியவர்களை மீட்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இதுவரை முப்பதுக்கும் அதிகமான உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. மேலும், சுமார் 50 பேர் இடி பாடுகளிலிருந்து உயி ருடன் மீட்கப்பட்டு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். எனி ஹும், சுமார் 600 இற்கும் மேற்பட்டோர் இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளதாக அஞ்சப்படுகின்றது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 90-110 | 100 |
| பச்சைமிளகாய் | 140 | 150 | 160 |
| தக்காளி | 60 | 110 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 40 |
| கோவா | 60 | 60 | 60 |
| கரட் | 80 | 80 | 100 |
| பூசணி | 30 | 30 | 40 |
| புடோல் | 80 | 50 | 60 |
| வாழைக்காய் | 80 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 110 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 90-100 | 120 |
| பாகற்காய் | 100 | 120 | 160 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 100 |
| கருணைக் கிழங்கு | 70 | 80 | 100 |
| பயற்றங்காய் | 60 | 60 | 120 |
| லீக்ஸ் | 60 | 80 | 80 |
| பீற்றூட் | 50 | 40 | 50 |
| கறிமிளகாய் | 100 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 100 | 80 | 80 |
| போஞ்சி | 120 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | 40 | 40 | 40 |
| கீரை – 1 பிடி | 20 | 20 | 30 |
| தேசிக்காய் | 240 | 250 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 40-50 |
| இராசவள்ளி | 160 | — | — |
| வெங்காயப்பூ | 200 | — | 200 |
| முள்ளங்கி | 40 | 50 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 30 | 30 |
| வல்லாரை | 10 | 20 | 20 |


HURRY HURRY CALL TODAY

ملتي ميك - الدوحة

MULTI MECH DOHA WLL

URGENT VACANCY IN THE STATE OF QATAR



| TRADE | QUANTITY | SALARY IN QATAR RIYALS |
|---|---|---|
| HEAVY EQUIPMENT MECHANIC | 10 | 1500-2000 QAR |
| HEAVY DUTY ELECTRICIAN | 10 | 1500-2000 QAR |
| HYDRAULIC MECHANIC | 10 | 1500-2000 QAR |
| LIGHT DUTY DRIVER | 05 | 1500-1800 QAR |
| HEAVY DUTY DRIVER | 05 | 1800-2000 QAR |
| FORKLIFT OPERATOR | 10 | 1200-1800 QAR |
| FEMALE CLERK | 02 | 1800-2000 QAR |
| AUTO TECHNICIAN CUM ELECTRICIAN | 10 | 1500-1800 QAR |
| EXCAVATOR | 20 | 2000-2100 QAR |



CV COLLECTION ONLY

NO CHARGES WILL BE TAKEN

TERMS AND CONDITIONS

PERIOD OF EMPLOYMENT : TWO YEARS AND EXTENDIBLE
PLACE OF EMPLOYMENT : DOHA QATAR
ACCOMMODATION : PROVIDED BY THE COMPANY
TRANSPORTATION : PROVIDED BY THE COMPANY
FOOD ALLOWANCE : 200QR PROVIDED BY THE COMPANY
TRIAL PERIOD : 6 MONTHS
WORKING HOURS : 08 HOURS
WEEKLY LEAVE : 01 DAY PER WEEK AVAILABLE
OVERTIME ALLOWANCE : OVER TIME PROVIDED BY THE COMPANY
AIR PASSAGE : ONLY RETURN AIR PASSAGE PROVIDED BY THE COMPANY
MEDICAL : PROVIDED BY THE COMPANY
OTHER TERMS AND CONDITIONS AS PER QATAR LABOR LAW

AFTER INTERVIEW SLBFE APPROVED CHARGES ONLY WILL BE TAKEN

WWW.SIOJOBS.COM

CALL TODAY FOR REGISTRATION

SIO INTERNATIONAL RECRUITMENT AGENCY
NO 77 PEOPLES PARK SHOPPING COMPLEX COLOMBO 11
TP 0115330032 FAX-0112332977
HOT LINE 0727977977/0722364651
CONTACT IN JAFFNA 0722269874

LL NO- 1216

# இராமேஸ்வரம் மீனவர்கள் வேலைநிறுத்த போராட்டம்

(இராமேஸ்வரம்)

இலங்கை கடற்படை கப்பல் மோதியதால் கடலில் மூழ்கி உயிரிழந்ததாகக் கூறப்படுகின்ற மீனவரின் உடலை மீட்கக் கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் நேற்று சனிக்கிழமை முதல் காலவரையறையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் போராட்டத்தின் காரணமாக சுமார் 800 படகுகள் கடலுக்குச் செல்லவில்லை.

கடந்த செப்டம்பர் 26ஆம் திகதி கடலுக்குச் சென்ற ஒரு படகும் இலங்கைக் கடற்படையைச் சேர்ந்த ஒரு கப்பலும் கச்சதீவுக்கு அருகில் மோதியதாகவும், அதில் படகில் இருந்த 4 பேரில் 3 பேரை கடற்படை மீட்டதாகவும் ஒருவர் அந்தப் படகோடு சேர்ந்து மூழ்கி உயிரிழந்ததாகவும் கூறப்படுகின்றது.

அவரது உடலை மீக வேண்டுமெனக் கோரியே இந்த வேலை நிறுத்தத்தை நடத்துவதாக தமிழ் நாடு கடலோர விசைப்படகு உரிமையாளர்கள் சங்கத்தின் மாவட்ட தலைவர் ஜேசுராஜா தெரிவித்தார்.

அப்போதுதான் அவர்களது குடும்பத்தினருக்கு இழப்பீடு கிடைககுமென அவர் கூறினார்.

**மீனவர் விடுதலை கோரி ஜெயலலிதா கடிதம்**

இதனிடையே, இலங்கைச் சிறைகளில் உள்ள தமிழக மீனவர்களை விடுதலை செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்படி கோரி தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

கடந்த அக்டோபர் முதலாம் திகதியன்று நாகபட்டினத்தைச் சேர்ந்த 7 மீனவர்கள் அவர்களது படகோடு கைதுசெய்யப்பட்டு காங்கேசன்துறையில் அடைக்கப்பட்டிருப்பதாக ஜெயலலிதா குறிப்பிட்டுள்ளார்.

இந்த 7 மீனவர்களையும் ஏற்கெனவே இலங்கைச் சிறைகளில் இருக்கும் 28 மீனவர்களையும் இலங்கை வசம் இருக்கும் 31 மீன்பிடிப் படகுகளையும் விடுவிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் ஜெயலலிதா தனது கடிதத்தில் கோரியிருக்கிறார்.

இராமேஸ்வரத்தில் மீனவத் தொழிலாளர்கள் சுமார் 4000 பேர், மீன்பிடி சார்ந்த தொழிலில் ஈடுபட்டிருக்கும் 20,000 பேர் என சுமார்24,000பேர்கடல்தொழிலையே வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## இலங்கையைத் தீவிரமாக...

இந்தக் கூட்டறிக்கையை மனித வுரிமைகள் கண்காணிப்பகம், மனிதவுரிமைகளுக்கான சர்வதேச சேவை, ஆட்டிக்கல் 19 - மனித வுரிமைகள் மற்றும் அபிவிருத்திக்கான ஆசிய அமைப்பு, மனித வுரிமை கற்கைக்கான கெய்ரோ நிறுவனம், சிவிகஸ், ஈஸ்ட் அன்ட் ஹோர்ன் ஆபிரிக்க மனிதவுரிமைகள் பாதுகாப்புத் திட்டம், மனித வுரிமைகள் சட்ட நிலையம், மனித வுரிமைகளுக்கான சர்வதேச கூட்டமைப்பு மற்றும் சித்திரவதைகளுக்கு எதிரான உலக அமைப்பு ஆகிய அமைப்புகள் இணைந்து வெளியிட்டுள்ளன.

அவ் அமைப்புக்கள் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில்,

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து ஐ.நா தொடர்ந்தும் தனியான கவனத்தை கொண்டிருக்க வேண்டும்.

இதன் மூலமே இலங்கை மீது நிறைவேற்றப்பட்ட நம்பத்தகுந்த நீதி விசாரணையைக் கோரும் ஐ.நாவின் ஜெனிவா தீர்மானத்தை வலுக்கொள்ளச் செய்ய முடியும்.

இத் தீர்மானத்தை இலங்கை அரசு அணுகுகின்ற நடைமுறைகளில் சர்வதேச சட்ட நிபுணர்கள் நெறிப்படுத்த வேண்டும்.

அதன் மூலமே பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி வழங்கும் பொறிமுறையை உறுதியாகவும் நம்பிக்கை உடையதாகவும் காண்பிக்க முடியும்.

மேலும் இலங்கையின் யுத்த மீறல்கள் தொடரிலான உறுதியான நிலைப்பாட்டினை வெளிப்படையாக பகிரங்கப்படுத்திய ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் சயிட் அல்ஹுசைன்மற்றும் அவரது குழுவினருக்கு பாராட்டுக்களையும் ஊக்கத்தையும் அளிக்கிறோம்.

ஐ.நா பேரவையின் தலைமைத்துவம், துணிச்சல், உறுதி ஆகியவற்றுக்கு இது நல்லதொரு முன்னுதாரணமாக அமையும் என்றும் அந்த கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## ஜனாதிபதி...

பகுதியில் தெனனைப் பயிர்ச்செய்கையை சம்பிரதாய பூர்வ மாக ஆரம்பித்து வைப்பதுடன், பொதுக் கூட்டம் ஒன்றிலும் உரையாற்றவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து யாழ்ப் பாணத்துக்கும் அவர் வருகை தருவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (ந)

## உண்மைகளை...

நடத்தி போரில் இடம்பெற்ற சம்பவங்கள் என்ன என்பது குறித்த உண்மைகளை அறிந்து கொள்வது, நல்லிணக்கத்துக்கு வழிவகுக்கும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே இவ்வாறான ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் எனவும், தாம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்த போது, இந்த விடயத்தை வலியுறுத்தியதாகவும் அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (எ-12)

## மதுபானம், சிக...

5 வீதத்திற்கும் அதிகமான அல்கஹாலைக் கொண்டுள்ள பியர் ஒரு லீற்றருக்கான விலை 60 ரூபாயாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, உள்ளூரில் தயாரிக்கப்படும் மதுபானம் ஒரு லீற்றர் 110 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதற்காக உள்ளூரில் தயாரிக்கப்படும் மதுபானம் ஒரு லீற்றர் 160 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் நிதி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சிகரட் ஒன்றின் விலை 3 ரூபாயினால் அதிகரிக்கபட்டுள்ளதாக அறிக்கை யொன்றினூடாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது. (செ-12)

## ஜெனிவா...

எதிர்வரும் 14-ம் திகதி இந்த போராட்டம் நடத்தப்படவுள்ளது.

விமல் வீரவன்ச, தினேஸ் குணவர்தன, உதய கம்மன்பில மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகியோரும் அவர்களது கட்சி உறுப்பினர்களும் போராட்டத்தை நடத்தவுள்ளனர்.

தேசிய சுதந்திர முன்னணி, மஹஜன எக்சத் பெரமுன, பிவித்துரு ஹெல உறுமய மற்றும் ஜனநாயக இடதுசாரி முன்னணி ஆகிய கட்சிகளின் தலைவர்கள் போராட்டம் குறித்து அண்மையில் பேச்சுவார்த்தை நடத்தி, எதிர் வரும் 14-ம் திகதி போராட்டம் நடத்துவது என தீர்மானித்துள்ளனர்.

லங்கா சமசமாஜ கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட மேலும் சில கட்சிகளையும் இணைததுக் கொள்வது குறித்து பேச்சுவார்த்தை நடத்திவருவதாக தெரிவிக்கப்படுகிறது. (செ-12)

# வெளுத்தது இலங்கையின் சாயம்...

ஐநா தீர்மானம் தொடர்பாக பா.ம.க. நிறுவனர் மருத்துவர் ராமதாஸ்வெளியிட்டுள்ள அறிக்கை, கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு என்பார்கள்... ஆனால், போர்க்குற்ற விசாரணை தொடர்பான விவகாரத்தில் இலங்கையின் சாயம் ஒரே நாளில் அப்பட்டமாக வெளுத்து விட்டது.

போர்க்குற்றங்கள் பற்றி பன்னாட்டு நீதிபதிகளைக் கொண்டு இலங்கை நீதிமன்றம் விசாரணை நடத்த வேண்டும் என ஐநா மனித உரிமை ஆணையத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், அத்தகைய விசாரணை நடத்த முடியாது. உள்நாட்டு விசாரணை தான் நடத்த முடியும் என இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

இந்த விசாரணையில் பன்னாட்டு வழக்கறிஞர்களை அனுமதிக்க முடியாது என இலங்கை கூறியுள்ளது.

ஜெனிவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமை பேரவையில் இலங்கை மீதான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட அதே நேரத்தில், நியூயோர்க்கில் நியூயோர்க் டைமஸ் நாளிதழுக்கு அளித்த நேர்காணலில் தான் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவரது உண்மையான முகத்தை காட்டியுள்ளார்.

இலங்கையில் மனித உரிமை மீறல்களும், போர்க்குற்றங்களும் நடந்தது உண்மை தான் என்று ஐ.நா. மனித உரிமை ஆணைய விசாரணையில் உறுதி செய்யப்பட்டிருந்தது.

இலங்கை மீதான இந்த குற்றச்சாட்டுகள் மீது பன்னாட்டு நீதிமன்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதில் தமிழர்கள் உறுதியாக இருந்தனர். பன்னாட்டு நீதிபதிகள் மற்றும் சட்ட வல்லுனர்களைக் கொண்டு கலப்பு விசாரணை நடத்தலாம் என ஐ.நா. மனித உரிமை ஆணையம் பரிந்துரைத்திருந்தது.

ஆனால், இவற்றையெல்லாம் ஏற்க மறுத்துவிட்ட அமெரிக்காவும், அதன் நட்பு நாடுகளும், இலங்கை மீதான போர்க்குற்றச்சாட்டுக்கள் குறித்த விசாரணை இலங்கை நீதிமன்றத்தில் தான் நடத்தப்படும். அந்த விசாரணையில் பன்னாட்டு நீதிபதிகள், சட்ட வல்லுனர்கள் பங்கேற்பர் என்று கூறியது.

இது தொடர்பாக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் கொண்டு வந்த தீர்மானமும் ஐ.நா. மனித உரிமை பேரவையில் இந்தியாவின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

இலங்கைக்கு சாதகமான நிலைப்பாட்டை எடுத்ததற்காக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் தெரிவித்த காரணம் இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு அங்கு நிலைமை தலைகீழாக மாறிவிட்டது என்பது தான்.

கடந்த 26 ஆம் திகதி நியூயோர்க்கில் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் சந்தித்து போர்க்குற்ற விசாரணை பற்றி பேசினர்.

அதன்பின் செய்தியாளர்களிடம் பேசிய இந்திய செய்தித் தொடர்பாளர், இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு போர்க்குற்றங்களை விசாரிப்பது குறித்த அந்நாட்டின் அணுகுமுறையில் கடலளவு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று பாராட்டு மழை பொழிந்தார்.

இது தொடர்பான செய்திகள் வெளிவந்த நாளிதழ்கள் கசங்குவதற்கு முன்பாகவே, போர்க்குற்ற விசாரணையில் பன்னாட்டு நீதிபதிகளை அனுமதிக்க முடியாது என்று மைத்திரிபால சிறிசேன கூறியதில் இருந்தே உலக நாடுகளுக்கு அவர் எந்த அளவுக்கு மரியாதை தருகிறார் என்பதை உணர முடியும்.

அதுமட்டுமின்றி, போர்க்குற்ற விசாரணை என்பது இலங்கையின் சட்டத்திற்கு உட்பட்டதாகத்தான இருக்கும். விசாரணை அமைப்பு எத்தகைய தன்மை கொண்டதாக இருக்கும் என்பதை இலங்கையின் இராணுவ அதிகாரிகள், பௌத்த மதத் தலைவர்கள் ஆகியோருடன் கலந்து பேசி முடிவு எடுப்போம் என்று அவர் கூறியிருப்பதிலிருந்தே இலங்கை நிர்வாகத்தில் ஆதிக்கம் செலுத்துவது யார் என்பதையும் அறிய முடியும்.

ஒன்றரை லட்சம் அப்பாவித் தமிழர் படுகொலை செய்யப்பட்டது குறித்த விசாரணையில் இலங்கை நீதி வழங்கும் என உரக்கக் கூறி வந்த இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் இப்போது என்ன பதில் சொல்லப்போகின்றன? என்பது தான் உலககெங்கும் உள்ள தமிழர்கள் எழுப்பும் வினா.

இப்போது தான் என்றில்லை... 50 ஆண்டுகளுக்கு முன்பு ஈழத்தமிழர் பிரச்சினை உருவெடுத்த நாளில் இருந்தே இலங்கை அரசு அளித்த எந்த வாக்குறுதியும் நிறைவேற்றப்பட்டதில்லை.

அவை அனைத்தும் அந்த நேரத்தில் தமிழர்களை ஏமாற்றுவதற்கான அறிவிப்பாகவே இருக்கும். அப்படிப்பட்ட இலங்கையிடம் பன்னாட்டு சமுதாயம் ஏமாறுவது இதுவே கடைசி முறையாக இருக்க வேண்டும்.

இலங்கை மீதான போர்க்குற்றச்சாட்டுகள் பன்னாட்டு நீதிபதிகளைக் கொண்டு முறையாக விசாரித்து பாதிக்கப்பட்டவர் களுக்கு நீதி வழங்க இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் முன்வர வேண்டும்.

ஒரு வேளை நேர்மையான போர்க்குற்ற விசாரணைக்கு இலங்கை ஒத்துழைக்க வில்லை என்றால், அந்நாடு இன்னும் திருந்தவில்லை என்பதை உலக சமுதாயம் புரிந்து கொள்ள வேண்டும்.

இப்படிப்பட்ட நாட்டில் தமிழர்கள் நிம்மதியாகவும், கண்ணியமாகவும் வாழ முடியாது என்பதால், அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில், உலகெங்கும் உள்ள ஈழத்தமிழர்களிடையே ஐ.நா. மூலம் பொதுவாக கெடுப்பு நடத்தி வடக்கு - கிழக்கு மாநிலங்களை தனித் தமிழீழமாக அறிவிக்க வேண்டும் என ராமதாஸ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (செ-12)

## ஐ.நா தீர்மானத்தை...

வாசுதேவ நாணயக்கார கூறியுள்ளார்.

அமெரிக்காவின் முன்னெடுப்பில் நிறைவேற்றப்பட்ட இந்த தீர்மானம் ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையை அடிப்படையாக வைத்து கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த ஒட்டுமொத்த செயற்பாடுகளும் அமெரிக்காவின் தேவையை முன்னிலைப்படுத்தி முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தான். அந்த நடவடிக்கையின் விளைவாக நிறைவேற்றப்பட்டுள்ள இந்தத் தீர்மானத்தையும் நாங்கள் எதிர்க்கின்றோம்.

மகிந்த ராஜபக்ஷ காலத்தில் உருவாக்கப்பட்ட எல்எல்ஆர்சி ஆணைக்குழு முன்வைத்த அறிக்கையை அடிப்படையாகக் கொணட பொறிமுறை ஒன்றையே தாம் ஆதரிப்பதாகவும் அவர் தெரிவித்தார். இம்முறை ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தின் மூலம், அடுத்து நேரவிருந்த பேராபத்திலிருந்து இலங்கையை மீட்டுள்ளதாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கூறியிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நாட்டின் அரசியலமைப்புக்கு உட்பட்ட பொறிமுறையின் கீழேயே விசாரணைகள் நடத்தப்படும் என்றும் கூறியிருந்தார்.

அடுத்த கட்டமாக சகல கட்சிகளையும் சர்வமதத் தலைவர்களையும் அழைத்து பேச்சுநடத்த இருப்பதாகவும் மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார்.

ஆனால், நல்லிணக்க ஆணைக்குழு முன்வைத்த பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்ட பேச்சுவார்த்தைகளிலேயே தாம் கலந்து கொள்ள முடியும் என்று வாசுதேவ நாணயக்கார் கூறினார். (செ-12)

## இலங்கை மீதான தீர்மா...

போலந்து, ருமேனியா, இலங்கை மற்றும் மசிடோனியா உள்ளிட்ட 12 நாடுகள் இணை அனுசரணை வழங்கியிருந்தன.

எனினும், இத்தீர்மானம் தொடரபில் எதிர்வரும் 16ஆம் திகதி வரை இணை அனுசரணை நாடுகள் புதிதாக இணைந்து கொள்ள முடியும் என்று ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகம் அறிவித்திருந்த நிலையில், நேற்று முன்தினம் மேலும் 24 நாடுகள் இத்தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்க முன வந்துள்ளன.

இதன்படி பிரான்ஸ், எஸ்தோனியா, அயர்லாந்து, ஜப்பான், தென் கொரியா, சியராலியோன், ஒஸ்ரியா, பொஸ்னியா ஹெர்செகோவினா, கனடா, சைப்பிரஸ், செக் குடியரசு, டென்மார்க், பின்லாந்து, ஜோர்ஜியா, ஹங்கேரி, இத்தாலி, லிச்ரென்ஸ்ரெய்ன், லக்ஸ்சம் பேர்க், மால்டா, நோர்வே, ஸ்லோவாக்கியா, ஸ்லோவேனியா, ஸ்பெய்ன், சுவீடன் மற்றும் சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகளே புதிய இணை அனுசரணையாளர்களாக இணைந்துள்ளன.

இதனையடுத்து, ஐ.நா மனித வுரிமைகள் ஆணைக்குழுவில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானத்துக்கு இதுவரை 38 நாடுகள் இணை அனுசரணை வழங்கியுள்ளன. (செ-12)

## அன்று தற்கொலை...

வடக்குக்கு 3 நாள் பயண மொன்றினை மேற்கொண்டு புகையிரதம் மூலம் நேற்றைய தினம் யாழ்.வந்தடைந்த போக்குவரத்துத் துறை அமைச்சர்,

யாழ் புகையிரத நிலையத்தில் வைத்து ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் தற்போது பல்வேறு வகையில் அபிவிருத்தி அடைந்து வருகின்றது. மக்களுக்கு அபிவிருத்தி யென்பது மிக அவசியமாகும்.

இதனை தற்போது உள்ள புதிய அரசு சிறந்த முறையில் மேற்கொண்டு வருகின்றது.

கொழும்பிலிருந்து யாழ்பபாணத்துக்கு குறுகிய நேரத்தில் புகையிரதம் மூலம் பயணம் செய்ய முடிகின்றது.

இப் புகையிரத சேவையினை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு நாம் தீர்மானித்துள்ளோம்.

குறிப்பாக ஓமந்தையிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான புகையிரத பாதை புதிதாக நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவிலிருந்து மாகோ வரையிலான புகையிரத பாதையினை புனர்நிர்மாணம் செய்வதற்கு தீர்மானித்துள்ளோம்.

இப்புகையிரத பாதை புனர் நிர்மாணம் செய்யப்படுவதன் மூலம் மேலும் வேகமாக பயணித்து குறுகிய நேரத்தில பயணம் செய்ய முடியும். விசேட தேவை உடையவர்கள் பயணம் செய்வதற்கென விசேட ரயில் பெட்டிகளை அமைப்பதற்கு தீர்மானம் செய்துள்ளோம்.

எனினும் இவற்றினை சிறிது காலம் தாழ்த்தியே செய்யவேண்டிய நிலையுள்ளது.

1996ஆம் ஆண்டு நான் வீடமைப்பு அமைச்சராக யாழ்ப்பாணம் வந்த போது என்னை தற்கொலைக்குண்டுதாரிகளே வரவேற்றனர். தற்போது நான் யாழ்ப்பாணம் வந்த போது பலதரப்பட்ட அரசி யல்வாதிகள் என்னை வரவேற்றுள்ளனர்.

இந்த இடைப்பட்ட காலப்பகுதிக்குள் காலம் நல்லபடியாக மாற்றமடைந்துள்ளது. நல்லிணக்கம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இதனை நான் வரவேற்கின்றேன் மக்களிடத்தே பழைய ஒரு மைப்பாடு வரவேண்டும் என்றார் அமைச்சர்.

அதேவேளை போக்குவரத்து அமைச்சருடன் சிறுவர், விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்ரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன், டக்ளஸ் தேவானந்தா மற்றும் அமைச்சின் உயர் அதிகாரிகள் பலரும் இணைந்து கொண்டனர்.

முன்னர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா 1996ஆம் ஆண்டு யூலை மாதம் 4 ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்த போது தமிழீழ விடுதலைப்புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் யாழ் நகர தளபதி பிரிகேடியர் ஆனந்த கமான்கொட, பொலிஸ் அத்தியட்சகர் டயஸ் ஆகியோா கொல்லப்பட்டதோடு அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா காய மடைந்து இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (செ-4)

## மலக்குழி...

வதற்காக துப்புரவு செய்த போதே இக் குண்டுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இதயனையடுத்து பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதும் சம்பவ இடத்துக்கு விரைந்த வல்வெட்டித்துறை பொலிஸார் குண்டுகளை மீட்டதுடன் விசாரணை களை மேற்கொண்டுவருகின்றனர். (செ-12,60)

A/L 2016 Day Classes
பௌதிகவியல்
பிரிவு II
(திங்கள் - வெள்ளி)
R.துகன்
ஆரம்பம் :- 05.10.2015 திங்கள்
11.30 am-1.30 pm
NEW SCIENCE WORLD
Navalar Road -Brown Road Junction. Jaffna.
(C-2370)

கார் விற்பனைக்கு
Toyota Starlet EP82-1990
64 - XXXX வெள்ளை நிறம்
Manual gear உடன் தரமான நிலையில் உள்ளது
தொடர்புகட்கு : 0777808625
(1951)

லெவல் சீற் வேலைகள்
உங்கள் வீடுகள் அலுவலகங்கள் வியாபார நிலையங்களுக்கு
அழகிய வடிவங்களில்
குறைந்த செலவில்
துரிதமான தரமான வேலைகள்
Gypsum,Plastic,Malasian மற்றும் பல வகையான Sheets
1 சதுர அடிக்கான மொத்தச்செலவு 115 ரூபாயிலிருந்து
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னாரில்
தொடர்புகளுக்கு
Gopi
0773672796 / 0767020389
(C-2368)

வாடகைக்குண்டு
நாள்,மாத அடிப்படையில் கார்கள் வாடகைக்கு உண்டு.
(Axio, Nishan Sunny, hybrid)
தொடர்புகளுக்கு:
0779961250
(1947)

பணிநிலை வேண்டுகை
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தளபாட காட்சி அறைக்கு
1. விற்பனை பிரதிநிதி (Sales Representative) ஆண்/பெண்
கல்வித்தகைமை : க.பொ.த உயர்தரம் சித்தியடைந்தவர்கள்
2.தளபாடங்கள் பொருத்துவதற்கு (Furniture Fittings) ஆண்,
கல்வித்தகைமை : க.பொ.த சாதாரண தரம் சித்தியடைந்தவர்கள் தொடர்பு கொள்ளவும்
3.கணக்குபதிவாளர்
SMART KINGS PVT (LTD)
NO. 12, POINT PETRO ROAD, JAFFNA
021- 454 6699
(C-2375)

கற்கை நெறியில் இணைந்து 3 மாதத்தில் தொழில் ஏற்பாடு &
இது வரை பயிற்சியில் இணைந்த 13 பேருக்கு வெளிநாட்டு விசா ஏற்பாடு
O/L உடன்
UK, Australia, New Zealand, Switzerland, Canada, France, Germany, Singapore, Malaysia
மாதம் 3 இலட்சத்துக்கு மேல் உழைக்கக்கூடிய
Business & Hotel Management
யாழ்ப்பாணத்திலேயே ஆரம்பித்து 6 மாதங்களில் விரும்பிய நாடு செல்லும்
100% விசா உத்தரவாதம்!
SEGi | B.H.M.S. | nmit | Angliss
அனுமதிகளுக்கு 077 3616 798 021 222 0011
கற்கைநெறி ஆரம்பம் 15-10-2015 வியாழன் 10 மணி
SIKARAM
FREE ENGLISH COURSE
Sikaram Institute of Hospitality & English
இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்தில் இருந்து 100m
(C-2377)



CNR World Wide Express & Travels
அனுப்பும் பொதிகளுக்கு விசேட விலைக்கழிவு
✔ வெளிநாட்டு / உள்நாட்டு துரித தபால் பொதிகள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி சேவை
✔ அனுப்பும் பொதிகளுக்கான பாதுகாப்பு மற்றும் காப்புறுதி உத்தரவாதம் (உங்கள் வீட்டில் இருந்தவாறு அனுப்பும் வசதி)
✔ சர்வதேச விமான பயணச் சீட்டுக்கள் (Air Ticket) மீள் உறுதிப்படுத்தல். திகதி மாற்றம் (Date Change) செய்து கொள்ளலாம்.
✔ கடல்/ஆகாய மார்க்க பெரிய பொதிகள் மற்றும் கார்கோ சேவை (Bulk Cargo)
சி.என்.ஆர்.எக்ஸ்பிரஸ் பொதிகள் சேவை
401, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (பெருமாள் கோயிலடி)
Hot Line : 0772931062
Tel : 021 5674145
(C-2365)




A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான தரம் வாய்ந்த ஆங்கில கற்கை நெறிகள் ஆரம்பம்
SPOKEN ENGLISH WITH GRAMMAR 120 Hours / 3 Months
சரளமாக பேச பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட கற்கை நெறி
CIMA, ACCA, CA, AAT, HND, Banking
International & Local Universities, College of Education
ஆகியவற்றின் கற்கை நெறிகளை தொடர ஆங்கிலம் உங்களுக்கு தடையா???
சகல கற்கை நெறிகளுக்குரிய ஆங்கில அறிவினை 100% வழங்குகிறோம்.
DIPLOMA IN ENGLISH 200 Hours (4 Months)
Benifits of Dip in English
• Cambridge English இன் KET, PET, First பரீட்சைகளுக்கு தோற்றுவதன் மூலம் சர்வதேச அங்கீகரிக்கப்பட்ட முதந்தர சான்றிதழ்களை பெறமுடியும்.
• IELTS Life Skills பரீட்சைக்கு தோற்ற முடியும்.
New Batches start on :
B1 : 07-10-2015 at 9am B3 : 10-10-2015 at 9am B5 : 12-10-2015 at 9am
B2 : 07-10-2015 at 2pm B4 : 10-10-2015 at 2pm B6 : 12-10-2015 at 2pm
Study IELTS at CIL & Get 6+ Band
SPOKEN SINHALA CLASSES
BI : Sat & Sun - 9.30-11.30am
B2 : Sat & Sun - 3.00 - 5.00pm
CIL Cambridge Institute of London
NO : 17, 3rd Lane, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
(புதிய HNB, ராசி சில்க்ஸ் அருகாமையில்)
Tel : 021 2217774, 0777382108
(C-2375)

யாழ்ப்பாணத்தில் காண்டம் வாசிக்கப்படுகிறது
ஸ்ரீ கௌசிக அகஸ்திய நாடி சோதிட நிலையம் (PVT) LTD
P.ஜெய்சங்கர்
கொழும்பில் கடந்த 25 வருடங்களாக, கௌசிக அகஸ்திய முனிவர்களால் எழுதப்பட்ட ஏட்டுச் சுவடிகள் மூலம், தங்களின் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம், கல்வி, திருமணம், குழந்தைகள், தொழில் வாய்ப்புகள், வெளிநாட்டு பயணம் போன்றவற்றைக் கூறிப் புகழ்பெற்ற சோதிடர்களால், தற்போது யாழ்ப்பாணத்தில் பலருடைய வேண்டுகோளுக்கு இணங்கி கீழ்க்கண்ட முகவரியில் காண்டம் வாசிக்கப்படுகிறது.
தொடர்புகளுக்கு:-384, A, நாவலர் வீதி, (கைலாச பிள்ளையார் கோயில் அருகில் நல்லூர்)
தொலைபேசி:-021 221 7944
கொழும்பு முகவரி:
19, 1/1, கொத்தலாவல மாவத்தை, பம்பலப்பிட்டி,
தொலைபேசி:-011 258 6180/ 011 258 6208
(1953)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.10.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி
# சங்குநாதம்
Sankunatham
வள்ளுவர் ஆண்டு 2046 04.10.2015 தொலைபேசி : 021 222 3378
நாதம் 34








# நீங்கள் ஜெனிவா சென்றதால் எங்களுக்கு என்ன நன்மை?

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

ஜெனிவாவில் நடந்த மனிதவுரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் இலங்கை குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டதையடுத்து ஆலடி மாநாடும் கூடியது. மாநாட்டில் அனைத்து உறுப்பினர்களும் பிரசன்னமாகியிருந்தனர். எனினும் எவருடைய முகத்திலும் ஈ ஆடவில்லை. பண்டிதர் மாநாட்டை ஆரம்பித்து வைத்தார்.

**பண்டிதர்:** இறைவணக்கத்தோட ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம்.

(பண்டிதரின் அறிவிப்போடு அனைவரும் எழுந்து நின்றனர். வாத்தியார் வைத்திலிங்கம், நாமே நமக்கு பகையும் நாமே நமக்கு நட்பும் என்ற பாடலைப்பாடினார். அதைத் தொடர்ந்து மூப்பர் திருச்செபம் செய்தார். எல்லாம் வல்ல இறைவா உம்மோடு இருந்த யூதாசுகள் எங்களோடும் இருக்கின்றனர். யூதாசின் காட்டிக் கொடுப்பால் நீர் எங்ஙனம் சிலுவையில் அறையப்பட்டீரோ அதுபோல நாங்களும் வலிப்படுகிறோம். உம்மைக் காட்டிக்கொடுத்த யூதாஸ் வெள்ளிக்காசுக்காக அந்தக் கொடுமையைச் செய்தான்.

இங்கோ கோடிகளுக்கும் பதவிகளுக்குமாக யூதாசுகள் எங்களுக்கு நடந்த அநீதிகளை மறைக்க மாற் றானுக்கு உதவுகின்றனர். இறைவா! இவர்கள் செய்யும் பாவங்களுக்கான பழியை நீரே கொடுத்துக்கொள்ளும்... மூப்பரின் திருச்செபத்தோடு அனைவரும் ஆலடியில் அமர்ந்து கொண்டனர்.

**பண்டிதர்:** ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையின்ர கூட்டத்தொடரில் இலங்கை குறித்த தீர்மானம் ஒருமுகமாக நிறைவேறியிருக்குது. அந்தத் தீர்மானம் எந்த வகையிலும் எங்களுக்கு நீதியைத் தரப்போவதில்லை என்பது மட்டும் உண்மை. இலங்கை அரசு செய்யவேண்டியதைச் செய்துபோட்டு ஜெனிவாவிலும் வெற்றி பெற்றுக்கொண்டு வந்திட்டுது.

**விதானையார்:** இலங்கையில் நடந்தது இன அழிப்பு இல்லை என்று நாங்களே சொன்னால் சர்வதேச விசாரணை தேவையில்லை தானே!

**வாத்தியார்:** அது சரி அமெரிக்காவின்ர தீர்மானம் நிறைவேறினது பற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் என்ன சொல்லுகினம்.

**விதானையார்:** அவையள் ஒன்றும் சொல்லவில்லை. தங்களுக்கும் இதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்ற மாதிரி இருக்கினம். ஆக, எங்கட தர்மலிங்கம் அண்ணற்ற மகன் சித்தார்த்தன் எம்.பி. மட்டும் இலங்கை அரசுக்குச் சாதகமான தீர்மானம் என்று கூறியிருக்கிறார்.

**மூப்பர்:** எங்கட சம்பந்தர் என்னவாம்.

**கங்காணி:** அவர் தானே சொல்லிப்போட்டார். நாங்கள் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்க முடியாது என்று.

**விதானையார்:** ஏன்? இவ்வளவு காலமும் இவரோ போராடினவர் அல்லது இவற்ற பிள்ளையள் போராடி



## வடக்கு முதல்வரை சந்திக்காத எதிர்க்கட்சித் தலைவர்

மாவீரர் ஆகினவியளோ.

**கங்காணி:** பதவியளை எடுக்கிறதுக்காக ஒவ்வொரு கதையளை விடுகிறதுதானே. எங்கட சனங்களும் சம்பந்தர் சொல்லுறதை ஏற்பினம். யுத்த காலத்தில இருந்த நிலைமையைவிட இப்ப பரவாயில்லை தானே! கரன்ட் இருக்குது, நினைத்த உடனே கொழும்புக்கும் போகலாம், வம்சம் தொடர் நாடகம் பார்க்கிறதில ஒரு இன்பம், ஏகப்பட்ட சாராயக் கடைகள், போதாக்குறைக்கு போதைவஸ்தும் கிடைக்குது. குழுக்களாகச் சேர்ந்து ரவுடித்தனம் செய்தாலும் பொலிஸார் பார்த்துக் கொண்டிருப்பினம். அப்ப நல்ல சூழ்நிலை தானே இது. ஏன் இனிப் போராட வேணும் எண்டு சனங்களும் நினைத்திருப்பினம்.

**பண்டிதர்:** ஓமோம் தங்கட பிள்ளைகளைப் பறிகொடுத்தவியள், காணாமற்போனவர்களின்ர குடும்பங்கள் இவர்களுக்குத் தானே துன்பமும் வலியும்.

எனக்குத் தெரியும். இன்றைக்கும் எத்தனையோ தாய்மார் காணாமற்போன தங்கட பிள்ளைகள் உயிரோட இருக்கினம் என்று நினைத்துக்கொண்டு கோயில் கோயிலாக நேர்த்திவைச்சு விரதம் இருந்து தங்களை மெழுகாக உருக்குகினம்.

என்ன செய்யிறது நாங்கள் எதிர்க்கட்சித் தலைமைப் பதவியை எடுத்துக் கொண்டு தொடர்ந்து போராடிக்கொண்டிருக்க ஏலாது எண்டு சொல்லுறம்.

**வாத்தியார்:** அது சரி பண்டிதர் சம்பந்தர் அப்படிச் சொல்லுறார். ஆனால் தேர்தல் காலத்தில கூட்டமைப்பைச் சேர்ந்த சிலர் யாழ்ப்பாணத்தில பேசும்போது இனியும் பொறுக்கமாட்டோம் போராட்டம் வெடிக்கும் என்று சொன்னவியள் அல்லோ. அப்ப அது என்ன மாதிரி.

**கங்காணி:** அது பாருங்கோ ஒரு வகையான உணர்ச்சியில சொல்லுறது. அதையெல்லாம் ஒரு பொருட்டாக எடுக்கக்கூடாது.

**விதானையார்:** அதுசரி இந்த நாட்டின்ர எதிர்க்கட்சித் தலைவர் யாழ்ப்பாணத்திற்கு வந்தவராம். என்ன திடீரென்று ஒரு வருகை. என்ன சங்கதி.

**வாத்தியார்:** ஜெனிவாவில அமெரிக்கா எடுத்த தீர்மானம் தொடர்பில யாழ்ப்பாணத்தார் எதிர்ப்புக்காட்டுவினம் என்று நினைத்த கூட்டமைப்பின்ர பிரதான உறுப்பினர் ஒருவர், சனத்தின்ர மனநிலையை மாற்றுவதற்காக, ஐயா! நீங்கள் ஒருக்கா யாழ்ப்பாணம் போயிற்று வாங்க எல்லாம் சரியாப் போயிடும் என்று சொன்னவராம்.

அட தம்பி, என்னால நடக்க ஏலாதடா எண்டு ஐயா சொல்ல, இப்படியெல்லாம் சொல்லாதீங்க ஐயா எதிர்க்கட்சித் தலைமையை எடுத்துப்போட்டு நடக்க ஏலாது என்றால் மற்றவர்கள் சிரிப்பினமல்லோ. எங்கட பிரதமர், ஜனாதிபதி இவைவள எத்தனையோ தடவை சந்தித்து இந்தப் பதவியை எடுத்தனாங்கள் இதற்குக் கைமாறாக ஜெனிவாவில விட்டுக்கொடுத்தனாங்கள். இப்ப நீங்கள் யாழ்ப்பாணத்திற்குப் போகாவிட்டால் திருகோணமலை இராஜவரோதயத்தின்ர மகன் வன்னியில போராடின எங்கட பிள்ளையளின்ர தியாகத்தைக் குழி தோண்டிப் புதைத்துப் போட்டார் என்று இந்த யாழ்ப்பாணத்தார் சொல்லுவினம். அதால எனக்காக ஒருக்கா யாழ்ப்பாணம் போயிற்று வாங்கோ என்று சொல்ல, சரியடா தம்பி நீதானே! என்ர இடத்துக்கு வரப்போற உனக்காக நான் ஒருக்கா யாழ்ப்பாணம் போயிற்றுவாறன் எண்டு ஐயா சொன்னவராம்.

**மூப்பர்:** அட சங்கதி அப்படியோ.

**வாத்தியார்:** அதுமட்டுமல்ல. யாழ்ப்பாணத்திற்கு நான் சும்மா போறதோ தம்பி என்றும் ஐயா கேட்டிருக்கிறார்.

**கங்காணி:** அதுக்கு அவர் என்ன சொன்னவராம்.

**வாத்தியார்:** இதென்ன கேள்வி ஐயா. நயினாதீவு நாகபூஷணி, மாவிட்டபுரம் முருகன், சென்.பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, நல்லூர் முருகன் என்று போயிற்றுவாங்க.

மறக்காமல் வலி.வடக்கில் வளலாய், ஒட்டகப்புலம் இந்த இடங்களுக்கும் போயிற்று வாங்க என்று ஆலோசனை கூற, அட தம்பி வளலாய், ஒட்டகப்புலம் இதெல்லாம் உயர் பாதுகாப்பு வலயமல்லோ. இங்க போகலாமோ என்று ஒரு மாதிரியாகக் கேட்க,

ஐயா! நீங்கள் என்னை மட்டும் மாட்டிவிடுவியள் போல என்று அவர் கூற, ஏனடா தம்பி அப்படிச் சொல்லுற என்று ஐயா வினவினாராம்.

**மூப்பர்:** அதற்கு அந்தாள் என்ன சொன்னவர்.

**வாத்தியார்:** நீங்களும் நானும்தானே அரசோட கதைத்தனாங்கள். எங்களுக்குரிய சலுகைகள் உங்களுக்கும் எனக்கும் தானே தெரியும். பிறகென்ன கேள்வி. உங்கட வாகனத்தைக் கண்ட உடன இராணுவ உயர்பாதுகாப்பு கதவு ஒட்டமற்றிக் காகத் திறக்கும். இப்படி அவர் சொல்ல ஐயா ஹஹஹா என்று சிரித்துக் கொண்டு,

நான் தந்தை செல்வநாயகத்தைவிடப் பெரியவன். நீ தளபதி அமிர்தலிங்கத்தை விட உயர்ந்தவன் என்று சொல்லிப் போட்டு ஐயா யாழ்ப்பாணத்திற்கு வந்திட்டார்.

**பண்டிதர்:** என்ர முருகா எதிர்க்கட்சித் தலைமைப் பதவியை ஏற்று ஒரு மாதம் கடந்த நிலையில 01.10.2015 இல் ஐயா யாழ்ப்பாணம் வந்து உயர் பாதுகாப்பு வலயம் பற்றிக் கதைத்தது அமெரிக்கத் தீர்மானத்தை மழுங்கடித்து மக்களைத் திசை திருப்பவோ.

**விதானையார்:** இன்னுமொரு சங்கதி இருக்குது.


**கங்காணி:** என்ன சங்கதி விதானையார்.

**விதானையார்:** யாழ்ப்பாணம் வந்த இராஜவரோதய சம்பந்தே வடக்கின் முதலமைச்சரை சந்திக்கவேயில்லையாம்.

**வாத்தியார்:** என்ர கடவுளே! பிரதமரும் அது எதிர்க்கட்சி தலைமையும் அது. மா புளிக்கிறது அப்பத்துக்கு நல்லம்.

இப்படி வாத்தியார் கூற பிள்ளையார் கோயில் மணியும் அடிக்க மாநாட்டில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்




# பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணம் எதிர்க்கட்சித் தலைமைப்பதவி



ஐ.நா.மனிதவுரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் திருவிழா முடிந்து விட்டது.

சர்வதேசம் எங்களைக் காப்பாற்றும் என்ற எங்களின் நம்பிக்கைக்கு மண் போடப்பட்டாயிற்று.

இனிமேல் சர்வதேசம் என்ற பிரமைப்பேய் தமிழர்களின் நம்பிக்கையாக இருக்காது என்பதும் உண்மை.

2009 ஆம் ஆண்டு வன்னியில் நடந்த பேரவலங்கள், மனிதப் பேரழிவுகள், இன அழிப்பு நடவடிக்கைகள் என மிகப்பேரிடியைத் தமிழினம் சந்தித்த போது- வெறுமனே பார்த்துக்கொண்டிருந்த சர்வதேச சமூகம்,

போர்க்குற்ற விசாரணையையாவது நியாயமான முறையில் நடத்தி பாதிக்கப்பட்ட தமிழினத்திற்கு நீதியைப் பெற்றுத் தரும் என்று நம்பியிருந்தோம். அந்த நம்பிக்கையும் 01.10.2015 இல் தகர்ந்து போயிற்று.

ஆக, தந்தை செல்வநாயகம் கூறியது போல தமிழர்களைக் கடவுள்தான் காப்பாற்றவேண்டும் என்ற தத்துவத்தைக் கூறிவிட்டு இருப்பதைத் தவிர எமக்கு வேறு வழி ஏதுமில்லை.

ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் கடந்த வருடம் நடந்த போது இலங்கையில் நடந்த போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை தேவை என்று வலியுறுத்திய அமெரிக்கா இந்த ஆண்டில் அடியோடு தன்னை மாற்றிக் கொண்டது. இந்த மாற்றத்தை ஏற்படுத்திய பெருமை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த இரு முக்கிய புள்ளிகளையே சாரும்.



மகிந்த ராஜபக்ஷவை தோற்கடிப்பதில் சந்திரிகா, ரணில், மைத்திரி என்ற கூட்டு மிகவும் இரகசியமாகச் செயற்பட்டது. இந்நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரியை ஆதரிப்பது என்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு அறிக்கை விட தமிழர்களின் வாக்கால் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியானார்.

ஜனாதிபதித் தேர்தலில் தோல்விகண்டிருந்தால் தனக்கும் தனது குடும்பத்திற்கும் மகிந்த ராஜபக்ஷ என்ன செய்திருப்பார் என்பது எனக்குத் தெரியும் என்று ஜனாதிபதி மைத்திரிபால கூறியிருந்தார்.

தேர்தலில் தோல்வியுற்றிருந்தால் தனக்கு என்ன நடந்திருக்கும் என்பது நன்கு தெரியும் என்று கூறிய ஜனாதிபதி மைத்திரி தனக்காக வாக்களித்த தமிழ்மக்களுக்கு மகிந்த ராஜபக்ஷ முன்பு என்ன செய்தார் இப்போது என்ன செய்திருப்பார் என்பதைக் கூறத் தவறிவிட்டார்.

பரவாயில்லை. தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றவர்கள் தமிழ்மக்களுக்குத் துரோகம் செய்ததான வரலாறுகளே அதிகம் என்பதால் ஜனாதிபதி மைத்திரி தமிழ்மக்களை மறந்தது பற்றி ஆச்சரியப்பட வேண்டியதில்லை.

இது ஒரு புறம் இருக்க, ஜனாதிபதித் தேர்தலில் அமெரிக்காவின் வழிப்படுத்தலோடு சந்திரிகா- ரணில்- மைத்திரி என்ற முக்கூட்டுச் சக்தி மகிந்தவை வீட்டுக்கு அனுப்பியது.

இதன்மூலம் மேற்குறிப்பிட்ட மூன்று சிங்களத் தலைவர்களும் புலிகளைத் தோற்கடித்த மகிந்த ராஜ பக்ஷவைவிட சிங்கள தேசத்துக்குப் பேருதவி புரிந்தனர்.

அதாவது சர்வதேச விசாரணை என்பதில் இருந்தும் மகிந்த ராஜபக்ஷவின் குடும்ப ஊழலில் இருந்தும் இவர்கள் நாட்டைக் காப்பாற்றினர்.

இதனைச் செய்வதற்காக அவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொழும்புத் தலைமையை நல்ல முறையில் பயன்படுத்தினர் என்பதையும் கூறித்தானாக வேண்டும்.

ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவை ஆணையாளரின் பரிந்துரை, தமிழ்மக்களின் பாதிப்புகளை, இழப்புகளை மிகத் துல்லியமாகக் கூறியிருந்த போதிலும் அவை எதுவும் எடுபடாமல் போகுமளவில் ரணில், மைத்திரி, சந்திரிகா மற்றும் கூட்டமைப்பின் முக்கிய புள்ளிகள் இருவர் செயலாற்றினர்.

ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவைக்கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பில் முன்வைக்கப்படும் தீர்மானம் இலங்கை அரசுக்குச் சாதகமானதாக அமையும் என்பதை முன்கூட்டியே தெரிந்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொழும்புத் தலைமை எல்லாவற்றையும் இரகசியமாக வைத்திருந்து தீர்மானம் வெற்றிகரமாக நிறைவேறுவதை உறுதிசெய்தது.

இதற்காகக் கூட்டமைப்பைச் சேர்ந்த சிலர் ஜெனிவாவில் களமிட்டிருந்தனர். இவர்கள் பலர் ஜெனிவாக் கூட்டத் தொடரில் எடுக்கப்படும் தீர்மானம் உள்ளகப்பொறிமுறையுடன் கூடியது என்பதை ஏலவே தெரிந்திருந்தாலும்,

அடுத்த தேர்தலின்போது; நாங்கள் ஜெனிவாவுக்குச் சென்று எங்கள் மக்களின் பாதிப்புக்களை எடுத்துரைத்தோம். ஆனால் சர்வதேசம் எங்களை ஏமாற்றி விட்டது என்றவாறான பிரசாரத்தைச் செய்வதற்காக ஜெனிவா சென்று காட்டாப்பு காட்டினர்.

என்ன செய்வது முப்பது வருடகால ஆயுதப் போராட்டம்; அதன் தியாகங்கள்; தமிழ்மக்கள் சந்தித்த பயங்கரங்கள் என அனைத்தும் தோல்வியில் முடிந்து போனமை முள்ளிவாய்க்கால் தந்த வேதனையின் அளவையும் தாண்டி விட்டது.

ஆக, இழந்தவர்களுக்கே நட்டம்- பாதிப்பு என்ற உண்மையை மட்டுமே இப்போதைக்குச் சொல்லமுடியும்.

இனிமேல் ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையில் இலங்கை விவகாரம் பற்றி யாரும் கதைக்கப்போவதில்லை. உள்ளக விசாரணை நடந்தாலென்ன நடக்காமல் விட்டாலென்ன எவரும் கேள்வி கேட்கவும் மாட்டார்கள். இருந்தும் உள்ளக விசாரணை ஒன்று நடந்தேறும். அந்த விசாரணையை நடத்துகின்ற குழுவில் அரச சார்புடைய தமிழர் ஒருவரும் இடம் பெறுவார்.

தீர்ப்பு; போர் நடந்த பகுதியில் தமிழ் மக்கள் இருந்ததே பிழை என்பதாக இருக்கும். மாறாக புலிகளைவென்ற மகிந்த ராஜபக்ஷ, அன்றிருந்த இராணுவத்தளபதி சரத்பொன்சேகா, போரில் ஈடுபட்ட படையினர் அனைவரும் இலங்கை நாட்டின் மகாவீரர்கள் என்பதாகப் புகழப்படுவர்.

எனினும் தமிழர்கள் போரில் ஒரு சில கஷ்டங்களை அனுபவித்தனர் என்பது உண்மை. இருந்தும் அந்தத் துன்பத்தையும் விடுதலைப்புலிகளே கொடுத்தனர்.

தமிழ்மக்கள் பட்ட துன்பங்களை ஆராய்ந்த இந்த நாட்டின் ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தருக்கு எதிர்க் கட்சித் தலைவர் பதவியை வழங்கினர். இது இந்த நாட்டில் இன ஒற்றுமைக்கான மிகப்பெரும் அடையாளம்.

வன்னியிலும் அதற்கு முன்னரும் தமிழ்மக்கள் சந்தித்த இழப்புகளுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி என்பது மிகப்பெரிய சன்மானம். இது உங்களுக்குப் போதுமானது. இதைத்தான் சர்வதேசமும் எங்களிடம் கூறியது. இப்படியாகக் கதை முடிந்து போகும்.

உறவுகளை இழந்தவர்களின் கண்ணீர் மட்டும் வற்றாத ஆறாக ஓடும். அவ்வளவுதான்.

விதுரன்



# சிறுவர் அரங்கம்

## தண்டனை...?

போலிச்சாமியார் ஒருவன் விஜய நகரத்துக்கு வந்துசேர்ந்தான். அவன் மக்களுக்கு போதை மருந்தை விற்று பணத்தை ஏராளமாக சம்பாதித்துக் கொண்டிருந்தான். போதை மருந்தை உட்கொண்ட மக்கள் பலர் பைத்தியம் ஆனார்கள். பலர் மாண்டார்கள்.

இச்செய்தி தெனாலிராமனுக்கும் எட்டியது. ஆகையால், போலிச்சாமியாரைத் தொலைத்துக்கட்ட முடிவு செய்தான். அதன்படியே சாமியாரை சந்தித்து அவனுடன் நட்புக்கொண்டான். தகுந்த சமயம் பார்த்து சாமியாரைக் கொன்றுவிட்டான்.

இச்செய்தி மன்னனுக்கு எட்டியது. தெனாலிராமனுக்கு ஆள் அனுப்பி அழைத்து வரச்செய்தார் தெனாலியை. "ஏன் சாமியாரைக் கொன்றாய்" என்று கேட்டார். அதற்குப் "போதை மருந்தால் பலர் பைத்தியம் பிடித்து மாண்டனர். ஆகையால்தான் போலிச்சாமியாரைக் கொன்றேன்" என்றான்.

"போலிச்சாமியார் தவறு செய்திருந்தாலும் அவனைக் கொல்ல உனக்கு ஏது அதிகாரம்? அதை என்னிடமல்லவா தெரிவித்திருக்க வேண்டும். அப்படி தெரிவித்திருந்தால் நானே அந்தப் போலிச்சாமியாருக்குத் தண்டனை வழங்கியிருப்பேன்.

இவ்விடயத்தில் நீ தன்னிச்சையாக செயற்பட்டதற்கு உனக்கு மரணதண்டனை விதிக்கிறேன்" என தீர்ப்புக் கூறினார்.





உடனே தன் ஆட்களை அழைத்து ஊருக்கு ஒதுக்குப் புறத்தில் ஒரு குழியை வெட்டி, அதில் தெனாலிராமனை கழுத்தளவு புதைத்து, யானையை விட்டு தலையை இடறுமாறு பணித்தார்.

அவ்வாறே தெனாலிராமனும் குழியில் கழுத்தளவு புதைக்கப்பட்டான். பின்பு, யானையைக் கொண்டுவருவதற்கு பணியாளர்கள் சென்றுவிட்டார்கள். அப்பொழுது சில கழுதைகளை ஓட்டிக் கொண்டு முதுகில் கூன்விழுந்த ஒரு தொழிலாளி, வந்துகொண்டிருந்தான்.

ஒரு மனிதன் பூமிக்குள் கழுத்தளவு புதையுண்டு இருப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டான். பின்பு தெனாலிராமனிடம் வந்து... "ஐயா, தாங்கள் ஏன் இவ்வாறு புதையுண்டு இருக்கிறீர்கள்" என்று கேட்டான். அதற்குத் தெனாலிராமன், "எனக்கு மிக நீண்ட நாட்களாகவே முதுகு கூன் விழுந்துவிட்டது. அதனால், மிகவும் சிரமப்பட்டு நடந்து வந்தேன். நேற்று ஒரு வைத்தியரை ஆலோசனை கேட்டேன். அவர்தான், ஒருநாள் முழுவதும் இவ்வாறு இருந்தால், கூன் நிமிர்ந்துவிடும் என்று சொன்னார். நான் குழியில் புதையுண்டு ஒருநாள் ஆகப்போகிறது. ஆகையால் மண்ணைத் தோண்டி என்னை மேலே எடு" என்றான்.

அப்படியே அந்தத் தொழிலாழியும் மண்ணைத் தோண்டி தெனாலிராமனை மேலே தூக்கிவிட்டான். அப்பொழுது தெனாலிராமனைப் பார்த்தான். அவன் முதுகு கூன் இல்லாமல் நேராக நிமிர்ந்து நின்றான். இதை உண்மை என்று நம்பிய கூனுடையவன் அதே குழியில் அவனைக் கழுத்தளவு புதைக்கச் சொன்னான். தெனாலிராமனும் கூனுடைய அந்தத் தொழிலாழியை அவ்வாறே செய்தான்.

உடனே தெனாலிராமன் அவ்விடத்தை விட்டு ஒரே ஓட்டமாக ஓடிவிட்டான். சிறிது நேரத்தில் பணியாட்கள் யானையுடன் அங்கு வந்தனர். யானையை ஏவி குழியில் புதையுண்ட மனிதனின் தலையை இடறச் செய்தனர். கூனுடையவனின் தலை சின்னாபின்னமாகியது.

அச்சமயத்தில் அரண்மனையில் அதிகாரிகளும் "போலிச்சாமியாரைக் கொன்றது நியாயம்தான் அதனால், தெனாலிராமனைக் கொல்லவேண்டாம்" என்று கேட்டுக்கொண்டனர்.

அந்நேரத்தில் பணியாட்களும் அங்கு வந்து "தெனாலிராமனின் தலையை, யானையை ஏவிவிட்டு இடறிவிட்டோம்" என்று தெரிவித்தனர்.

தெனாலிராமனின் மரணத்துக்கு மன்னர் வருந்திக்கொண்டிருக்கையில் மன்னர்முன் தெனாலிராமன் தோன்றினான். தெனாலியைக் கண்ட மன்னர் மகிழ்ந்தார். "நீ யானையால் இறந்ததாகப் பணியாட்கள் தெரிவித்தார்களே... பின் எப்படி உயிரோடு வந்தாய்?" என்று வினவினார்.

அதற்கு தெனாலிராமன் நடந்தவற்றை விபரமாகக் கூறினான்... மன்னர், "பிறகுமா... தெனாலிராமா, பிறிதொருவரை மாட்டிவிட்டாயா...?" என்று சிரித்து, அவன் சாமர்த்தியத்தை உள்ளுக்குள் மெச்சிக்கொண்டார்.

## பளபளக்கும் வெள்ளித்துகள் நல்லதா...கெட்டதா...?

வெள்ளி அழகானதும் பளபளப்பானதும், நாம் எல்லோரும் மிகவும் விரும்பும் பொருளும் கூட. எமது அணிகலன்களிலும் சமையல்கட்டிலும் அலங்காரப்பொருட்களிலும்தான் நாம் வெள்ளியை அதிகமாகப் பார்த்திருக்கிறோம்.

ஆனால், வெள்ளியானது ஒரு கிருமிகொல்லியாக மருத்துவத்தில் நீண்டகாலமாகப் பாவிக்கப்பட்டுவருவதை நம்மிற்பலர் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

வெள்ளியானது மருத்துவத்தில் கட்டுத்துணிகளிலும் (பண்டேஜ்) பூச்சுமருந்துகளிலும் பயன்படுத்தப்பட்டு வருவதுடன் திரவங்களாகவும் பயன்படுத்தப்பட்டுவருகிறது. அத்துடன் சுவாசம் சம்பந்தமான நோய்களுக்குப் பயன்படும் மூச்சுக்குழாய்களிலும் பயன்படுத்தப்படுகிறது.

இத்தகைய பாவனையில் எமது கண்ணுக்குத் தெரியக்கூடிய அளவில் வெள்ளி இருப்பதில்லை. இவ்வாறு மருத்துவத்தில் கலக்கப்படும் வெள்ளியானது மிகச்சிறிய துகள்களாக- நனோ துணிக்கைகளாக ($10^{-9}$ மீற்றர்) பயன்படுத்தப்படுகின்றன.

இத்தகைய நனோ துணிக்கைகள் மனித உடலில் நன்மையைமட்டும் விளைவிக்கவில்லை பெருங்கெடுதியையும் விளைவிக்கிறது என்பதை அண்மையில் கனடா விஞ்ஞானிகள் தமது அறிக்கையில் வெளியிட்டுள்ளனர்.

2005 இன் பின்னர் சில்வர் ஸ்டைல் என்ற நாகரீக மோகம் ஒன்று உலகளாவிய ரீதியில் வர்த்தகக் கம்பனிகளால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இது பல பாவனைப் பொருட்களில் வெள்ளி நனோ துகள்களை கலந்துள்ளது. உதாரணமாக பல்துலக்கி, கால்மேஸ், சலவை இயந்திரம், வைக்கியூம்கிளினர் உட்பட 400 இற்கு மேற்பட்ட எமது பாவனைப் பொருட்களில் நனோ வெள்ளித் துகள்கள், கலக்கப்பட்டுள்ளன.


### கிருமிகொல்லியாக...

நனோ வெள்ளித்துகள்கள், உடற்கலங்களில் பாதிப்பை ஏற்படுத்துவதற்கு மிகமுக்கிய காரணங்கள் இரண்டு உள்ளன.

ஒன்று இவை மிகச்சிறியனவாக இருப்பதால், கலங்களுக்குள் இலகுவில் செல்லக்கூடியதாக உள்ளது.

இரண்டாவது அவை புகுந்துகொள்வதற்கு எமது உடலில் மிகப்பெரிய பரப்புகாணப்படுகிறது.

நனோ வெள்ளித்துகள்கள் வளியின் ஈரப்பதத்துடன் தாக்கம் புரிந்து வெள்ளி அயனைச் சிந்துகிறது. இந்த வெள்ளி அயன் நுண்ணங்கிகளின் கலமென்சவ்வினை உடைக்கிறது அல்லது துவாரமிடுகிறது. இதன் மூலம் இது ஒரு பற்றீரியா, பங்கஸ் கொல்லியாக தொழிற்பட்டாலும் இதனால், வைரசுவை அழிக்க முடியாது. ஏனெனில் அவை பெரும்பாலும் பளிங்குவடிவில் காணப்படுகின்றன.



### மனிதனில் ஏற்படும் விளைவுகள்...

மருத்துவத்துறையில் பயன்படுத்தப்படும் மூக்குத் துளிமருந்தை 92 வயதுடைய ஒரு முதியவர் நீண்டகாலமாகப் பயன்படுத்தி வந்துள்ளார். இம்மருந்து கிருமிகளை அழிப்பதற்காக, நனோ வெள்ளித்துகள்களைக் கொண்டுள்ளதாகும். இதனால், இவரது தோல் நிரந்தரமாக நீலநிறமாக்கப்பட்டு, ஆர்ஜிரியா என்ற நோய்க்கு உட்பட்டுள்ளார்.

இதுமட்டுமல்ல மேலும்பல விளைவுகளை மனிதரில் ஏற்படுத்தியுள்ளதை கனடா ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். ஆய்வாளர்கள், இந்த நனோ வெள்ளித் துகள்கள் பெரிய, சிறிய விலங்கில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகிறது என அறிந்துகொள்வதற்காக, நனோ வெள்ளித்துகளின் செறிவூட்டப்பட்ட நீரை பெரிய விலங்குக்கும் சிறிய விலங்கான எலிகளுக்கும் ஊட்டினர்.

இதற்கான விளைவு பாரதூரமானதாக இருந்ததுடன் இரண்டிலும் ஒரே மாதிரியான விளைவையே ஏற்படுத்தியது.

### புற்றுநோய்த்தாக்கம்

நனோ வெள்ளித்துகள்களின் குறித்த செறிவூட்டப்பட்ட நீரை உட்கொண்ட இருவிலங்கினதும் என்புமச்சையிலும், அவற்றின் இளம் விலங்கான முளையத்திலும் புற்றுநோய்த் தாக்கம் இருக்கக் காணப்பட்டது.

என்புமச்சைகள்தான், குருதியில் காணப்படும் செங்குருதிச்சிறுதுணிக்கை (RBC), வெண்குருதிச் சிறுதுணிக்கை (WBC), குருதித்தட்டுக்களை உருவாக்குவதில் பங்காற்றுகின்றன.

நனோ வெள்ளித்துகள்கள் என்புமச்சைக் கலங்களின் கருவில் காணப்படும் DNA இல் பாதிப்பை ஏற்படுத்துவதன் மூலம் இத்தகைய பொருத்தமில்லாத சிவப்பு அணுக்கள் உற்பத்தி செய்யப்படுதல் சாத்தியமாகியுள்ளது.




இத்தகைய புற்றுநோய் லியுக்கிமியா (Leukemia), லைம்போமா (lymphoma) என்ற இருவகைப் புற்றுநோய்களாக இனங்காணப்பட்டுள்ளன.

நேரடியான நோய்த்தாக்கம் மட்டுமல்ல, சூழலை மாசுபடுத்தலிலும் நனோ வெள்ளித்துகள்கள் பங்காற்றுவதாக கனடாவின் ஒன்றாரியோ ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

இத்துகள்கள், வளிமண்டலத்தின் ஈரப்பதனுடன் தாக்கம் புரிந்து, வெள்ளி அயன்களை சிந்துவதால், இவ்வெள்ளி அயன்கள், மண்ணுக்கும் வளிமண்டலத்துக்கும் நன்மை புரியும் பற்றீரியாக்களை கொன்றொழித்துவிடுகின்றன. காபன், நைதரசன், பொஸ்பரசு ஆகியவற்றின் வட்டத்தில் பங்குகொள்கின்ற பற்றீரியாக்கள் இவ்வாறு கொல்லப்படுவதால், இத்தகைய சூழல் மாசுதல் நிகழ்கிறது.

புதிய தொழில் நுட்பங்கள் உலகை எங்கே கொண்டுசெல்கின்றன என்ற கவலை பல விஞ்ஞானிகளிடத்தில் என்றோ தோன்றத் தொடங்கிவிட்டது.

தமிழில்: பாமா.







# வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல. 3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்) 021 567 1532



## கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்றால்?

## தியாகங்கள் வீண் போனதுண்டா?

## சின்னத்திரை மோகத்தால் சிலர் உறவுகளையே மறக்கிறார்களே?

**நரேன் — வல்வெட்டி**

**தற்கால இளைஞர் யுவதிகள் காதலபற்றி ஏதாவது?**

பழைய கால இளைஞர்களின் காதல் மோதகம் போல பண்பாடு, கலாசாரம் என்ற மாவின் உள்ளேதான் காதல் என்ற உள்ளீடு (பயறு, சீனி, தேங்காய்ப்பூ) இருக்கும். தற்கால இளைஞர் காதல் பயறு, மா, தேங்காய்ப்பூ கலந்து பிசைந்த பிடிக்கொழுக்கட்டை போல. பண்பாடு கலாசாரம் எல்லாம் பிசைந்து காதல் வெளியில் பிதுங்கும் அவ்வளவுதான்.

**சயந்தன் — யாழ்ப்பாணம்**

**தியாகங்கள் வீண் போனதுண்டா?**

வீரம்மிகு சிங்கங்கள் வாழும் காட்டில்தான் குழிபறிக்கும் குள்ளநரிகளும் வாழ்கின்றன. இந்த நரிகளால் தியாகங்களை வீணடிக்க முடியும். இதற்கு உதாரணம் நடந்து முடிந்த ஜெனிவா கூட்டத் தொடர்.

**நீலவன் — அரியாலை**

**இன்றைய சமுதாயம் எங்கே போய் கொண்டிருக்கு?**

பக்கத்து வீட்டுக்காரரின் தாய் இறந்ததை பத்திரிகையில் பார்த்துத் தெரிந்து கொண்டயோகன் பக்கத்து வீட்டுக்காரனின் தொலைபேசி இலக்கத்தை தன் டயரியில் தேடிக் கொண்டிருந்தான். உங்கள் அம்மாவின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றேன் என தனது தொலைபேசியில் SMS Type செய்து கொண்டு.

**மயூரன் — யாழ்ப்பாணம்**

**சின்னத்திரை மோகத்தால் சிலர் உறவுகளையே மறக்கிறார்களே?**

அன்பார்ந்த பெண்ணினமே! ஒரு உயிரை உருவாக்கி அன்பு, இரக்கம், பணிவு, சொந்தம், பந்தம், சுற்றம் என அத்தனைக்கும் ஆணிவேராய் இருப்பவள் நீ. அதனால் தான் யாருக்கும் கொடுக்கமுடியாத தாய் என்ற அடைமொழி உனக்கு கிடைத்திருக்கிறது. சின்னத்திரை என்ற சின்னத்தனத்தில் மூழ்கி கிடப்பதை நீ உணர்ந்து கொள்.



**குரு — சுன்னாகம்**

**இனப் பிரச்சினை தீருமா?**

உலகில் அடிமைப்பட்ட இனத்தவர்கள் எல்லாம் சேர்ந்து கடவுளை சந்தித்தார்கள். ஒவ்வொருவரும் தமக்கு எப்போது சுதந்திரம் கிடைக்கும் என கடவுளைக் கேட்க கடவுளும் 50, 100 வருடங்கள் என கூற அவர்களெல்லாம் தமது நாடு சுதந்திரம் பெறுவதை தாம் பார்க்கமாட்டோமே என கண்ணீர் விட்டனர்.

கடைசியாகத் தமிழன் சுவாமி எமக்கு எப்போது தீர்வு? உடனே கடவுள் ஓ... வென்று அழுதார். தமிழன் திகைத்துப் போய் ஏன் சுவாமி? கடவுள் அதைப் பார்க்க நான் உயிருடன் இருக்கணுமே?

**(நமது கூற்று : தமிழனில் பிழையில்லை தலைமையில் ஏதோ பிழை இருக்கிறது போல)**

**சமிதரன் — நயினாதீவு**

**கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்றால் ?**

விக்னேஸ்வரன் - முதல்வனுக்கும் பொருந்தும் முதல்வருக்கும் பொருந்தும்.




**அன்பு வாசகர்களே!**

நீங்களும் வியாசர் பகுதிக்கு உங்கள் கேள்விகளை எழுதி அனுப்புங்கள். அரசியல், ஆன்மீகம், சமூகம், பொழுதுபோக்கு சார் கேள்விகளை மிக சுருக்கமாக உங்கள் பெயர், முகவரியுடன் அனுப்பி வையுங்கள்.

**குறுந்தகவல் (SMS) 021 567 1532**

**நிஷானா — யாழ்ப்பாணம்**

**சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்பவர்களை வீதியில் வைத்து கல் எறிந்து கொல்ல மாட்டார்களா?**

இலங்கை சட்டம் அதற்கு அனுமதித்தால் முதல் கல்லை எடுக்க நான் தயார் !

**கோபி — மந்திகை**

**யாழ்ப்பாணத்து பெண்களின் உடைகள் பற்றி?**

எங்களின் கலாசாரம் மேலைத்தேயத்திற்கும் மேலைத்தேயக் கலாசாரம் எங்களுக்கும் என பண்டமாற்று நடக்கிறது.

**தவசேகரம் — கோப்பாய்**

**முயற்சி திருவினையாக்கும் என்பது?**

பத்தாவது முறை கீழே வீழ்ந்தவனைப் பார்த்து பூமித் தாய் சொன்னாள் மகனே நீ ஒன்பது தடவைகள் கீழே வீழ்ந்து எழுந்து நின்றவன் வீழ்ந்ததை எண்ணி அஞ்சாதே எழு வெற்றி நிச்சயம் என்று.

**அபிவர்மன் — மானிப்பாய்**

**ஜோக் சொல்லுங்க பாஸ்?**

சிறுவன் ஒருத்தன் 'அப்பா பஸ்சில ஒரு அன்ரி அடிச்சிட்டா' என அழுதுகொண்டுவந்தான். தந்தை ஏன் என விசாரித்தார். 'பஸ்ஸில் ஒரு அன்ரி நல்லா தூங்கிட்டிருந்தா அவர் சுடிதார் துப்பட்டா கீழே விழுந்திட்டு நான் அதை எடுத்து அவ தோளில போட்டேன் அவ முழுச்சு பாத்திட்டு அடிச்சிட்டா' என்றான். சரி இனி அப்படிச் செய்யாதே என தந்தை கூறினார்.

சில நாட்கள் கழிந்து மீண்டும் ஒரு அன்ரி அடித்துவிட்டதாக அழுது கொண்டு வந்தான். தந்தை விசாரித்தார். 'பஸ்ஸில ஒரு அன்ரி தூங்கிட்டிருந்தா அவ துப்பட்டா கீழே விழுந்துட்டு என்னோட பிரெண்ட் அதை எடுத்து சரி செய்தான் நான் அவனை பேசிட்டு துப்பட்டாவை இழுத்துக் கீழே போட்டேன். அன்ரி முழுச்சுப்பாத்திட்டு அடிச்சிட்டா' என்றான் கண்ணைக் கசக்கியபடி.

**தர்ஷிகா — யாழ்ப்பாணம்**

**நீ சூரியனை சுட்டுவிடும் தாமரையா இந்தப் பாடலின் ஆரம்பவரியை சொல்ல முடியுமா?**

உனைநான் உனைநான் உனைநான் கண்டவுடன் கண்டவுன் கண்டவுடன் நெஞ்சுக்குள்ளே நெஞ்சுக்குள்ளே நெஞ்சுக்குள்ளே இலட்சம் சிறகுகள் முளைக்கிறதே! நீ சூரியனை சுட்டுவிடும் தாமரையா எனை மெல்ல மெல்ல கொல்ல வரும் மோகினியா! ஜே ஜே

# கவிதைக் கலசம்



## கருவறைகளின் படைப்புக்கள்

படைப்புக்களை வளர்த்தெடுத்து
உருக்கொடுத்து உணர்வு ஊட்டி
பாதுகாத்து பிறப்பிப்பது கருவறைகள்
ஜனன நோக்கம் அனைத்தும் ஒன்றே
பரிமளம் கமழும் நிலையில் இருப்பது
பல்லாயிரத்தில் பலகோடியில் சிலவே
கர்ப்பக்கிரக மூலமூர்த்தியை கருவறை தாங்கி
இச்சகத்தில் ஏதிலியர் நல்லெண்ணம் ஈடேற்றி
எத்திசையும் இறையருள் மெய்யருளாய் துலங்க
சித்திநிறை முத்திபெற அருளும் கருவறை
வித்தகரும் சித்தர்களும் பக்தர்களும் முனிவர்களும்
பக்தியுடன் பணிந்தேக சக்திகொடுக்கும் கருவறை
கருவறை சுமக்கும் பெண்மையில் தாய்மை
உயிர்வரை எண்ணும் உலகிற்கு நன்மை
பிறப்புக்கள் ஒவ்வொன்றும் கருவிலுருவானதே
பிறழ்வுகள் உருவாக்கம் சமூகச் சுற்றுச்சூழலே
கம்பனின் கருவறையில் இராமாயணம்
இளங்கோ கருவறையில் சிலப்பதிகாரம்
சாத்தனார் கருவறையில் மணிமேகலை
திருத்தக்கதேவர் கருவில் சீவகசிந்தாமணி
வள்ளுவர் கருவறையில் திருக்குறள்
பாவலன் பாரதி கருவறையில் புதுக்கவி
இத்தனையும் புலமைச்சிப்பி முத்துக்கள்
என்றதன் இலக்கு சமூக சீர்திருத்தமே
த.பவானி, கரவெட்டி மத்தி



## நிலைமாறும் விதிகள்

எண்ணத்தில் தோன்றி எழுத்தாய்
வருவதெல்லாம் ஒரு பாட்டுமில்லை
பல வண்ணங்கள் சேர்ந்து
வரைவதெல்லாம் ஒரு படமுமில்லை
நெல்லுடைத்துச் சமைப்பதெல்லாம்
ஒரு சோறுமில்லை கருங்
கல்லுடைத்து வடிப்பதெல்லாம்
ஒரு சிலையுமில்லை
பிறக்கும் குழந்தையெல்லாம்
பேர் சொல்லி வாழ்வதில்லை
சிறகிருக்கும் பறவையெல்லாம்
பறந்து சென்று சேர்வதில்லை
வீசும் காற்றெல்லாம்
தென்றலாய் குளிர்வதில்லை
காசும் பணமும் கட்டையில்
வந்து சேர்வதில்லை
மண்விழும் நீரெல்லாம்
வேர் சென்று சேர்வதில்லை
விதைக்கும் விதையெல்லாம்
விண்பார்த்து எழுவதில்லை
பெண்பார்த்துச் செய்வதெல்லாம்
பெருங்குலமாய் வளர்வதில்லை
கண்பார்த்துக் கற்பதெல்லாம்
தமிழ்மொழிபோல் இனிப்பதில்லை
குலனையூர் பாவரன், வவுனியா

## இமயம் தொட

உன் உணர்வுகளை யாரும்
புரிந்துகொள்ளவில்லையெனின்
நீ என் செய்வாய்?
அது உன் பிழையன்றி
அவர்தம் பிழையே!
வில்லை உடைத்த
இராமன் வாழ்விலும்
சூர்ப்பனகை வந்தாளே!
இருப்பினும் சீதை இராமனை
நம்பிக்கையுடன் நாதன் என்றாளே!
மாவை. நா.கஜேந்திரன்

## உன்முகம் பார்க்க

தியாகத்திற்கு கொடுக்கும் மரியாதை
எழுச்சியின் பாதைவழிசெல்ல
பாதைகள் பிரிந்து சென்றாலும்
நோக்கங்கள் மட்டும் குலையவில்லை
காதவழி தூரம் சென்றபின்தான்
வீழ்ச்சியின் வடுக்களின் உணர்ச்சிகள்
தொலைத்து எல்லாம் தூரம் என்றாலும்
தொலைக்கவேண்டியதையும் நம்மிடமே
கறைபடுத்தப்பட்ட உள்ளங்களிடை
உண்மையை தேடிய பயணங்கள்
கண்டறியவேண்டியது கட்டாயமாயினும்
விதியென்று விளம்பவில்லை
வெறும் வியாபாரத்திற்காக
போலிகளின் விலைகளுக்கும் கேள்விகள்
அத்தனையும் நீ உணர்ந்தவைதான்
எனக்குத் தெரியும் உன் தேடல்கள்
இன்னும் விடை பெறவில்லை
ஆயினும் நீ அகமலர்ந்துவிட்டாய்
உன்முகம் பார்க்க ஆவலோடு நான்
வீழ்ச்சியை கடந்த எழுச்சியின்
பார்வையை உன் முகம் பார்க்க
நான் காத்திருக்கின்றேன்.
அ. நளினாசினி, கோண்டாவில்



## விடுபட்ட நிலத்தின் கதை

கடந்து சென்ற யுத்தமோ
கானகமாக்கியதே
என் முன்னோர் வாழ்ந்த
வீட்டு நிலத்தை!
விடுபட்ட நிலம்
பார்க்கப்போனபோது
எட்டிப் பார்த்தது
உடைந்த வெளிச்சுவர்கள் மட்டுமே...
பனிச்சென்று தெரியாமல்
பற்றைகள் நடுவே
ஒளித்திருந்த ஆடும்
எதிரியின் வேட்டைப்பல்லுக்கு
விருந்தாகாமல் தப்பிய கதை
சொல்ல முயன்றது
அராலியூர்
சோ.சிவகுமாரன்

## விதியின் விளையாட்டு

வெள்ளை ஒளிதனை
எரியும் விளக்கென்று
ஓடினீர்கள்– அது
விளக்கல்ல விதியின்
இறுதியிடம் என்று
விளங்காமல் விழுந்துவிட்டீர்
விட்டில்கள் ஆனாலும்
விதியானால் விட்டுவிடுமா!
விபீ
கொக்குவிலூர்

# மௌனத்தின் தேடல்– 268

## நன்னீரைத் தேடி காத்திருக்கின்றோம்

என்னை நீ காத்திருக்கின்றாய்
நன்னீர் எப்போ வருமென்று
நானும் காத்திருக்கின்றேன்
நன்னீர் எப்போ வருமென்று
நன்னீர் நிரப்பும் இரணைமடு
இன்னும் சில மாதத்தில்
காடெல்லாம் கழுவிவந்துவிடும்
அதுவரையும் காத்திருப்போம்
நா.தலையசிங்கம்
கொக்குவில்

## வெற்றி உன்கையில்

தோல்வி என்பது உனக்கு
சொந்தமானது அல்ல...
ஒருநாள் துன்பம்
மறுநாள் இன்பம் என்ற...
புது நம்பிக்கையோடு
நாளை நாளை என்று
நாளைக் கடத்தாது
வேளை இன்றே என்று
முயன்று முன்னேறு தம்பி...!
வெற்றி உன்கையில்...
வ.ச.செல்வராசா
திருநாவலூர்

## வழிமாறிவிடும்

ஐந்தறிவும் ஐயப்படும்
ஆரவாரமின்றி
ஆரம்பமாகும்
எண்ணிலடங்கா
வன்செயல்களில்
இதுவுமொன்று
பொதுவான காரணத்தை
எடுத்துக்கூறி
நுண்ணறிவுடன்
நெறிப்படுத்தினால்
வழி மாறிவிடும்
க.நாகராசா
நுணாவில்

## அன்புகொண்ட குட்டி

என் ஆட்டுக்குட்டி செல்லக்குட்டி
நீ துள்ளிட ஆயிரமாயிரம்
கொள்ளையழகு
செல்லக்குட்டி நீயே என் உலகு
அன்பும் கருணையும்
உலர்ந்த மானிடர்
கத்தி உன் கழுத்தை பதம்பார்த்து
உன் குருதியும் சதையும்
இன்பமாகச் சுவைத்து மகிழும்
மானிட ஈனச்செயல் அறியாத
கபடமற்ற செல்லக்குட்டி
மறைந்து நில்
உன்னைக் களவாட நிற்கும் கோழைக்கு
உன் வலியும் என் வேதனையும்
என் கரத்தில் உள்ள கல்லினால்
பாடம் புகட்டிடுவேன் செல்லக்குட்டி
ஆ.இந்திரா, வதிரி

## ரட்சகன்

மந்தைகளை நடத்தி
ரட்சிக்கும் மேய்ப்பர் போல
மந்தைகளை மேய்க்கும்
சிறுவன் இவன்!
எதிரிகளிடமிருந்து ரட்சிக்க
எதிர்பார்த்து காத்து நிற்கிறான்
கையில் ஆயுதம் இல்லை
நம்பிக்கையில்
கையில் கல்லுடன்!
கூர்ந்த பார்வையுடன் முன்னால்
பய பார்வையுடன் ஆகு பின்னால்!
மந்தைகளாகிய தமிழருக்கும்
சிந்தையில் இருக்கும் நம்பிக்கை
மேய்ப்பரே ரட்சகர்
சி.சுகிர்தமலர்
உரும்பிராய்

# மௌனத்தின் தேடல் –269



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 07.10.2015ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

**பாடசாலைகளில் மாணவர்களுக்கு சரீர தண்டனை கொடுப்பது பற்றிய நிபுணர்களின் கருத்துக்கள் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருந்தன. இவ்வாறு அவற்றைப் படித்த வாசகர்களின் கருத்துக்கள் தொகுத்து வெளியிடப்படுகின்றன.**

## மனவெளி

வலம்புரியில் வலம் வரும் மனவெளியே வணக்கம்.

### சரீர தண்டனை தேவையில்லை!

நான் ஒரு விஞ்ஞான ஆசிரியராக இருந்து தற்போது ஆசிரிய ஆலோசகராக உள்ளேன்.ஒவ்வொரு முறையும் மனவெளியை வாசித்து வருகின்றேன். உடல்ரீதியான ஆசிரியரின் தண்டனைகள் பற்றிய கருத்துக்கள் வந்த போது இன்னும் ஆர்வமாக வாசித்தேன். அதன் விளைவே இக்கடிதம்.

எனது 25 வருட ஆசிரிய சேவையில் நான் எந்த மாணவரையும் அடித் ததில்லை. மாணவர்கள் வகுப்பில் குழப்படி செய்தால் ஆசிரியர் சரியாகப் படிப்பிக்க வில்லை என்று அர்த்தம். அல்லது விளங்காமல் படிப்பிக்கின்றார் என்று அர்த்தம். நல்ல உதாரணங்களோடு பாடத்தைத் தெளிவாக கலந் துரையாடலோடு படிப்பித்தால் எந்த மாணவனும் கேட்டுக் கொண்டிருப்பான். அப்படியும் மீறி ஒரு மாணவன் குழப்பம் செய்தால் அந்த மாணவனை அழைத்து "நீ இப்படிக் குழப்பம் செய்யக் கூடிய ஆள் இல்லையே! நன்றாகப் படிக்கக்கூடிய மாணவன் தானே. அன்றொரு நாள் ஆண்டுவிழாவில் நீ நடித்த நாடகத்தில் என்ன திறமையாக நடித்தாய்" என்று வகுப்பில் பாராட்டினால் இந்த மாணவன் எப்போதாவது குழப்பம் செய்வானா?

பாடத்தை மாணவர்கள் விளங்கக் கூடிய மட்டத்துக்கு வந்து கற்பிக்க முடியாதவர்கள்தான் மாணவர்களுக்கு விளங்கவில்லை என்று அடிக்கின்றார்கள். நான் ஆசிரியர்களுக்குச் சொல்வது. மாணவர்களுக்கு விளங்கவில்லை என்றால் அவர்கள் விளங்கிக் கொள்ளக்கூடிய முறையில் படிப்பியுங்கள். மாணவர்களின் திறன்களை கண்டுபிடித்து கல்வியோடு அவற்றையும் ஊக்குவித்தால் அந்த மாணவன் வாழ்க்கையில் உயரும் போது ஆசிரியரை மறக்கமாட்டான்.எனது விஞ்ஞான பாடத்தில் பின்வரிசையில் இருந்த ஒரு மாணவன் படம் வரைந்து கொண்டிருந்தான். நான் அதனைக் கவனித்து வாழ்க்கை பூராக படம் தான் வரையப்போகின்றாயோ? என்று கேட்டேன். ஆனாலும் அவருடைய படம் நன்றாகத்தான் இருந்தது. அவர் பிற்காலத்தில் சிறந்த படவரை கலைஞராக வந்தார்.

மற்று மொரு மாணவன் பாடத்தைக் கவனிக்காமல் எதையோ வாசித்துக்கொண்டிருந்தான். அவர் என்ன வாசிக்கின்றார் என்று பார்த்தால் அவர் எழுதிய சிறுகதை. அதை இப்பவா வாசிப்பது? என்று சொல்லிவிட்டு அதைப்



பிடுங்கிக் கொண்டு வந்து விட்டேன்: அடிக்கவில்லை. அன்றிரவு அதை வாசித் தேன். அது ஓர் சிறந்த சிறு கதையாக இருந்தது. அடுத்த நாள் வகுப்பில் இது நீ எழுதிய கதையா? என்று கேட்டேன். ஆம் என்று சொன்னார். சிறப் பாக இருக்கின்றது. உன்னால நன்றாக எழுதமுடியும் என்று வகுப்பில் சொன்னேன். அவர் மேலும் பல கதைகளை என்னிடம் தந்தார். அவற்றைத் திருத்திக் கொடுத்தேன். அவர் இன்று மலையகத்தின் பிரபல எழுத்தாளராக இருக்கின்றார்.

ஒரு மாணவனை அவர் ஒரு பிழைவிட்டதால் அவரை நான் கடிந்து கொண்டிருந்த போது. ஒழுக்கத் துக் குப் பொறுப்பான ஆசிரியர் "என்ன மாஸ்டர் பிரச்சினை" என்று கேட்டுக்கொண்டுவந்து, எனது மாணவனை, கையிலுள்ள பிரம்பால் விளாசித் தள்ளினார். நான் மறிக்க மறிக்க அவர் அடியை நிறுத்தவில்லை. அடுத்த நாள் மாணவன் பாடசாலைக்கு வரவில்லை. சில நாட்களின்பின்னர் கொழும்புக் கோட்டையில் அந்த மாணவன அலங்காரப்பொருட்களை விற்றுக் கொண்டிருந்தான். "ஏன் பாடசாலைக்குவரவில்லை" என்று கேட்டேன். "உங்களில் கோபமில்லை சேர். ஆனால் அவர் தேவையில்லாமல் அடித்துவிட்டார். அதுதான் நான் படிக்க வரவில்லை அந்தப் பள்ளிக்கூடத்திற்கு வர மாட்டேன்" என்று சொன்னான். "வேறு பள்ளிக் கூடத்தில் சேர்த்துவிட்டால் தொடர்ந்து படிப்பாயா"என்று கேட்டேன்.அவன் யோசித்து விட்டு "ஆம" என்றுசொன்னான்.அடுத்த நாள் இன்னொரு பாடசாலையில் சோதது கல்வியைத் தொடர்ந்து கற்கும்படி ஊக்குவித்தேன். இந்த மாணவர் தற்போது கொழும்பில் வங்கியில் பணியாற்றுகின்றார்.

நான் படித்து ஆசிரியராகிய காலத்தில் Black Board Jungle என்று ஒரு படம் பார்த்தேன். அதில் ஒரு ஆசிரியர் கரும்பலகையில் எழுதிப் படிப்பிக்கும் போது ஒரு மாணவன் கணிதக் கருவியான வட்டாரியால் ஆசி ரியருக்கு எறிந்தான். அது தவறி கரும் பலகையில் குத்திக் கொண்டு நின்றது. ஆசிரியர் அமைதியாகத் திரும்பிப் பார்த் தார். அடித்தவனைக் கண்டு வகுப்பு முடிந்தவுடன் அவ னோடு கதைத்தார். தொடர்ந்து வந்த நாட்களில், அவன் சிறப் பாக படிக்கத்தொடங்கினான் அவனுடைய பிரச்சினைகள் என்ன? என்பதை ஆராய்ந்து அவனுடைய கோபத்துக்கு காரணம் என்ன என்பதை ஆராய்ந்து தொடர்ந்து கதைத்து வந்தார். மாணவனும் நன்றாகப் படிக்கத் தொடங்கினான. சிறந்த பெறுபேறு பெற்று பாடசாலையை விட்டு செல்லும் போது, அந்த ஆசிரியரிடம் விடைபெற்றுச் சென்றது ஒரு தந்தையிடமிருந்து பிரிவது போன்றிருந்தது.

இராஜசேகரன்
ஆசிரிய ஆலோசகர்,
பருத்தித்துறை.

### மாணவர்களுக்கு அடிக்காமல் கற்பிக்க முடியாது?

பாடசாலை மாணவர்களுக்கு அடிபோடுவது தொடர்பில் கடநத சில வாரங்களாக வலம்புரியில் வெளிவரும் விடயங்கள் தொடர்பில் எனது கருத்தைத் தெரிவிக்க விரும்புகின்றேன். (தயவு செய்து கருத்துக்களைத் தவிர்க்க வேண்டாம்) தண்டனை என்பது ஆரம்ப காலத்திலிருந்து வழங்கப்பட்டு வருகின்ற ஒரு விடயம். அதாவது வீட்டில் பிள்ளைகள் தவறிழைத்தால் அடிப்பது, பாடசாலையில் மாணவர்கள் தவறிழைத் தால் அடிப்பது என்று அனைத்தும் நடந்தது. முன்னைய காலங்களில் தண்டனை கொடுப்பதற்கென்று சில யாப்புக்களும் நடைமுறைகளும் கூட இருந்தன. இதிகாசங்களிலும் குருவானவர் சீடனுக்கு தண்டனை வழங்கினார் என்றே கூறப்படுகின்றது. சிலரை ஆற்றுநீரில் மூழ்கியிருக்க வைத்த சம்பவங்களும் இருக்கின்றன. ஆனாலும் தண்டனை மூலமாக பலர் திருந்தி நன்றாக மாறிய சம்பவங்கள் நிறைய இருக்கின்றன. "தண்டனைகள் மனிதனை நல்ல நிலைக்கு கொண்டு வரச் செய்கின்றது" அதிலும் குறிப்பாக தற்காலத்தில் மாணவர்கள் விடயத்தில், அடிப்பதைத் தவிர வேறு வழி முறைகள் உதவவே இல்லை. ஆசிரியர்களைப் பற்றிய அவாகளுடைய கண்ணோட்டம் மாறி விட்டது. அந்தக் காலத்தில், மாணவர்கள் குருவைக் கண்டறிந்தனர்.

தற்போது ஆசிரியரை மதிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டது. "சேர் நீங்கள் அந்த நேரம் அடிக்காமல் இருந்திருந்தால் நான இண்டைக்கு இந்த நிலைக்கு வந்திருக்கமாட்டேன்" என்று கூறும் நபர்கள் நிறையப்பேர் இருக்கின்றனர். எல்லா விடயத்திலும் உளவியல் பார்வை இருந்தாலும் எனக்கு அடித்து படிப்பிக்க வேண்டும் என்ற கருத்தே இருக்கின்றது.

நன்றி.
ஜெயப்பிரியா,
நவக்கிரி.

நன்றி, ஜெயப்பிரியா. பல ஆசிரியாகள இவ்வாறான கருத்துக்களைக் கூறுகிறார்கள். இவற்றை முன்வைத்து ஆராய்வது முக்கியம். "தற்போது ஆசிரியரை மதிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து விட்டது" என்று கூறினீர்கள். அது ஏன் அவ்வாறு மாறியிருக்கிறது என்று ஆராய்ந்தால்,போர் நடந்துஎங்கள்கலாசார நடத்தைகள் மாறி விட்டன.

நவீனமயமாக்கல் சில மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளன, மற்றும் கல்வி முறை, அழுத்தங்கள் எதிர்பார்ப்புக்கள் முதலியன அதிகரித்துள்ளன. அதற்காக மாணவர்களை அடிப்பதா? அடிப்படைக் காரணங்களை மாற்ற முயற் சிக்கக்கூடாதா?" சேர் நீங்கள் அந்தநேரம்அடிக்காமல் இருந்திருந்தால்நான் இண்டைக்கு இந்த நிலைக்கு வந்திருக்கமாட்டேன் என்று கூறும் நபர்கள் நிறையப்பேர் இருக்கின்றனா" என்று குறிப்பிட்டுள்ளீர்கள். இவ்வாறு மேலோட்டமாக கூறலாம்.

ஆயினும், உண்மையாக இவ்வாறு எத் தனை பேர் சொல்கிறார்கள்? அதை கணக்கெடுத்துப் பார்த் தால் அவ்வளவு வராது என்று நம்புகி றேன். இவர்கள் மனவெளக்கு எழுதமாட்டார் களா? மேலும். அடிக்காமல் விட்டு. மற்ற இரு ஆசிரியர்கள் கூறிய முறைகளில் அணுகியிருந்தால். அம் மாண வர்கள் இன்னும் உயர் ந்த நிலைமைகளை அடைந்தருப்பார்கள் என்று நம்புகிறேன மிக மோசமாக அடியினால் பாதிக்கப் பட்ட மாணவர்கள் பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும்.

நீங்கள். மாணவர்களை கட் டுப்படுததுவதிலும் பார்க்க அவர்களை விளங்கி, நடத்தைகளை நல்ல திசைகளில்மாற்ற இரு ஆசிரியர்கள் கூறிய முறைகளில் திரும்ப எத்தனிக்கலாம்.

தயா சோமசுந்தரம்.

வணக்கம் மனவெளி,

ஆசிரியர்கள்மாணவர்களுக்கு அடித்தல், தண்டனை கொடுப்பது தொடர்பில்தொடரை எழுதுகின்றீர்கள். நான் இன்று வரைக்கும் எந்தவொரு மாணவனுக்கும் தண்டனை கொடுக்காத ஆசிரியர்என்ற பெருமிதத்துடன் எழுதுகின்றேன். என் 20 வருடத்துக்கு மேற்பட்ட ஆசிரிய அனுபவத்தில் என்னுடைய அணுகுமுறைகள் வித்தியாசமானவை. ஒரு நல் ஆசிரியன் எப்போதுமே, தவறு எதுவும விளங்காத மாணவர்களுக்கு அடிக்கவோ, தண்டிக்கவோ மாட்டான்.மாணவாகளின் சேட்டைகள் குழப்படிகள், கோபத்தை உண்டு பண்ணினாலும் நாம் கொடுக்கும் தண்டனைகள் அவர்களில் மாற்றத்தைக் கொண்டு வருவதற்குப் பதிலாக எம்மீது காழ்ப்புணர்ச்சியை ஏற்படுத்தும். பிள்ளைகள் தவறிழைக்கும் போது தெரிந்து செய்வதில்லை. அவர்களின் அறியாத வயதும் குடும்ப சூழ்நிலையும்தான் அவர்களைத் தவறிழைக்க வைக்கின்றது. ஆரம்பத்தில் அவர்களின் குழப்படிக்குப் பின்னால் தெரியாத கண்டறியப்படாத காரணங்கள் போகப்போக எங்கள் கண்ணுக்கு புலப்படத்தொடங்கும்.

அப்போது அவற்றை அணுகும் முறையை நாம் மாற்றிக் கொள்ள வேண்டும். என்னுடைய அனுபவத்தில் நான் ஒரு விடயத்தைப் பகிர விரும்புகின்றேன். எனது வகுப்பிலுள்ள மாணவி ஒருவர் நன்றாகப் படிப்பவர். ஒழுக்கமானவர். சில நாட்களாக வகுப்பில் அழுக்கான ஆடையுடனும் மிகச் சோர்வாகவும் வருகை தந்தார். அவரில் மாற்றங்கள் அதிகரித்த வண்ணமிருந்தன. ஆர்வமற்றுக் காணப்பட்டார். சோகமாக வும் உற்சாகமற்றும காணப்பட்டார். நெற்றியில் கட்டாயம் பெண்பிள்ளைகள் பொட்டு வைக்க வேண்டும் என்று நான் வகுப்பில் கூறுவேன். அந்தப்பிள்ளை மட்டும் நெற்றியில் பொட்டும் வைக்காமல் வருகை தரத் தொடங்கினார்.

"நான் அவரைக் கூப் பிட்டு தனியாகப் பேசினேன்" என்னம்மா பிர்ச்சினை? ஏன் பொட்டு வைப்பதில்லை? வகுப்பிலும் ஆர்வமின்றி இருக்கின்றீர்கள்?"என்று கேட்டேன். அதற்கு அந்தப்பிள்ளை கூறிய பதில், "சேர் எங்கள் அப்பா கிட்டடியிலை சுட்டுக் கொல்லப்பட்டார். அம்மா பொட்டு வைக்கிறதில்லை. அப்பாவுக்காக நானும இனி-மேல் பொட்டு வைக்க மாட்டேன்". இந்தப்பிள்ளைக்கு தண்டனை கொடுக்கும் முறையால் எந்தப் பிரயோசனமும் இல்லை. இப்படியான பல பிரச்சினைகளுடன் பிள்ளைகள் வருவார்கள்.

வேறொரு பெண் பிள்ளை என்னிடம் வந்து சேர் நான் நேற்றிலிருந்து சாப்பிடவில்லை. பசிக்கின்றது காசு கொடுங்கள் என்று கேட்டார். பிள்ளைகளுக்கு குடும்பத்தில் எத்தனையோ பிரச்சினைகள் இருக்கும்.நாங்கள் எங்கள் நிலையிலிருந்து பார்க்காமல் பிள்ளையின் நிலையிலிருந்து பார்க்க வேண்டும். அடிப்பதோ தண்டனை கொடுப்பதோ எந்தப் பிரயோசனத்தையும் தராது என்பதே என்னுடைய கருத்து.

சிவஞானராஜா
(ஆசிரியர்)
தெல்லிப்பழை.

வாசகர்களிடமிருந்து கேள்விகள், கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. தரமானவை துறை சார்ந்த நிபுணர்களின் பதில்களுடன் வலம்புரியில் வெளியாகும்.

அனுப்பவேண்டிய முகவரி : சாந்திகம் ஊடகக்குழு,
8, 8/1 கற்பகவிநாயகர் ஒழுங்கை,
கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும் கேள்விகளும் கருத்துக் களும் ஏற்றுக்கொள்ளப்படும்;

Email: psych@sltnet.lk
Face book: Shanthiham

# தலைகீழாக மாறிய சர்வதேச நிலைப்பாடு




இறுதியான ஐ.நா. விசாரணை அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டிருந்த ஹைபிரிட் - கலப்பு விசாரணை பொறிமுறை என்பதை நீக்கிவிட்டு, பொது நலவாய நாடுகளின்நீதிபதிகளும் வெளிநாட்டு நீதிபதிகளும் உள்ளிணைக்கப்படலாம் என்று இந்தப் பிரேரணையில் சொல்லப்பட்டிருக்கின்றது. இதனையும் சிலர் ஹைபிரிட் முறைமைதான் என்று வாதிடலாம்.

ஹைபிரிட் சிஸ்டம் என்பது, இரண்டு விடயங்கள் கலந்த ஒரு கலப்புப் பொறிமுறையைக் குறிக்கின்றது. இந்த முறைமையிலான ஒரு விசாரணையை நடத்த வேண்டும் என்பதையே ஐ.நா. விசாரணை அறிக்கை பரிந்துரைத்திருக்கின்றது.

ஆனால, உண்மையாக உலகத்தில் இதற்கு முன்னர் நியூட்டன்பேக் ட்ரையல் சியாராலியோன், கம்போடியா, பொஸ்னியா, கிழக்குத் தீமோர் ஆகிய நாடுகளில் ஹைபிரிட் சிஸ்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது.

இந்த அனைத்து ஹைபிரிட் முறைகளிலும் அந்த முறைமையைத் தீர்மானிப்பதில் ஐக்கிய நாடுகள் சபை அல்லது சர்வதேசம் ஒரு பங்காளராக இருந்தது. நீதிபதிகள் எத்தனை பேர் நியமிக்கப்பட வேண்டும், உள்ளூர் நீதிபதிகள் எத்தனை பேர் நியமிக்கப்பட வேண்டும்,

நடைமுறையையார்சொந்தம்கொண்டாடுவது, இது யாருடைய கட்டுப்பாட்டுக்குட்பட்டது என்பன உடன்படிக்கைகளுக்கு ஊடாக இவற்றில் தீர்மானிக்கப்பட்டிருந்தன. இந்த உடன்படிக்கைகள்ஐக்கிய நாடுகள்சபைக்கும் அந்த நாட்டுக்கும் அல்லது ஐ.நா. பாதுகாப்புச் சபையுடன் செய்யப்பட்டிருந்தன.

இதுதான்உலக நாடுகளில்பின்பற்றப்பட்டிருந்த உண்மையான ஹைபிரிட் சிஸ்டம் அல்லது கலப்பு விசாரணை பொறிமுறையாகும். ஆனால்இன்று எங்களுக்கு வரப்போவது அவ்வாறானதொன்று அல்ல. இலங்கை அரசாங்கம் முற்று முழுதாக அதனைத் தனக்குச் சொந்தமாக்கி, தனது செயற்பாட்டு முறைமைக்குள் கொண்டு வர முயற்சித்திருக்கின்றது,

இதில் ஒன்றிரண்டு பொதுநலவாயம் மற்றும் வெளிநாட்டு நீதிபதிகளையும் உள்வாங்கிக் கொண்டு செயற்படத்தக்க வகையிலான ஒரு முறைமையை அமெரிக்காவின் இறுதி நகல் பிரேரணை ஏற்றுக்கொண்டிருக்கிறது. இதன் காரணமாகவே, இலங்கை அரசாங்கமும் இந்தப் பிரேரணைக்கு அனுசரணையாளராக வருவதாகக் கூறியிருக்கின்றது.

அந்தப் பிரேரணைக்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. ஆகவே ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இதனை நிறைவேற்றுவதற்கு, வாக்களிப்புக்கு விடத் தேவையில்லை. ஏனென்றால் இலங்கை அரசாங்கம் எந்தவிதமான எதிர்ப்புமின்றி அதனை ஏற்றுக்கொண்டு செயற்படப்போவதாகத்தெரிவித்திருக்கின்றது.

அமெரிக்கா கொண்டுவந்துள்ள பிரேரணையின்படி, சர்வதேசப் பொறிமுறை என்பதும், சர்வதேசக் கண்காணிப்பு என்பதும் இதில் மிகவும் குறைந்தபட்சமாகவே காணப்படப் போகின்றன. ஐ.நா. விசாரணை அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ள விடயங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், ஐ.நா. அறிக்கைக்கும் இந்த நகல் பிரேரணைக்கும் இடையில் பாரிய அக முரண்பாடுகள் காணப்படுகின்றன.

இலங்கையில்உள்ள நிர்வாகக்கட்டமைப்புகளால்இந்த விசாரணையை நடத்த முடியாது என்று ஐ.நா. அறிக்கை கூறுகின்றது. ஆனால், அந்த விசாரணையை இன்று இலங்கை அரசாங் கத்திற்கே பொறுப்பு கொடுக்கின்ற தன்மை அமெரிக்கா கொண்டு வந்துள்ள பிரேரணையில் காணப்படுகின்றது.

இரண்டாவதாக இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் விடயத்தில், இலங்கை அரசாங்கம், மற்றும் விடுதலைப்புலிகள் ஆகிய தரப்புக்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றன.

நியாயமான விசாரணை என்ற அடிப்படையில்நோக்கினால், உரிமைகள் மற்றும் சர்வதேச சட்ட மீறல்கள் தொடர்பிலான விசாரணையை இந்த இரு தரப்புக்களில் எந்தவொரு தரப்பும் விசாரணை செய்கின்ற பொறுப்பை ஏற்றுச் செயற்பட முடியாது.

இவ்விரு தரப்புக்களுக்கும் அப்பாற்பட்ட ஒரு வெளித்தரப்பே விசாரணையை நடத்த முடியும். அப்போதுதான் அது பக்கச்சார்பற்றதாகவும், நீதியை நிலைநாட்டக்கூடியதாகவும், நியாயமானதாகவும் இருக்க முடியும்.

ஆனால், இங்கு, குற்றம் சாட்டப்படுகின்ற ஒரு தரப்பை, அதாவது, தமிழ் மக்களால் இவர்கள் தான் எங்களுக்கு அநீதி இழைத்தார்கள் என்று கூறப்படுகின்ற அரசாங்கத் தரப்பை நீதிபதியாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

இத்தகையதொரு வித்தியாசமான ஒரு விசாரணை பொறிமுறையை சர்வதேசத்தின் ஊடாக, இலங்கையின் பொறுப்பில் விடுவதற்கு அமெரிக்காவின் நகல் பிரேரணை மூலமாக ஆலோசனை முன் வைக்கப்பட்டிருக்கின்றது. அதனை நாங்கள் மிகவும் முக்கியமான விடயமாகக்கருதி அது தொடர்பில்தீவிர கவனம் செலுத்திச் செயற்பட வேண்டும்.

அடுத்ததாக, இந்தப் பொறிமுறையின் ஊடாக கொண்டு வரப்படவுள்ள நீதிமன்றத்தின் முன்னால் அல்லது ஆணைக்குழுவின் முன்னால் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விடயங்களைக் கொண்டு வருவதற்கான விசாரணைகளை யார் மேற்கொள்ளப் போகின்றார்கள் என்பது இரண்டாவது முக்கிய விடயமாக இருக்கின்றது.

இந்த நாட்டில் உள்ள பொலிஸ் துறையினரோ அல்லது உளவுத்துறையினரோதான் பெரும்பாலும் இந்த விசாரணையாளர்களாக இருக்கப் போகின்றார்கள். இதுவரையில் உள்ள நிலைமைகளின்படி, சிலவேளைகளில் வெளிநாடுகளில்இருந்து ஒன்றிரண்டு விசாரணையாளர்களை இதற்கென கொண்டு வரலாம் என தெரிகின்றது.

இதனால், தங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்திய தரப்பினரே எவ்வாறு விசாரணைகளை நடத்த முடியும்என்ற முக்கியமான பிரச்சினையும் தமிழ் மக்கள் முன்னால் இப்போது எழுந்து நிற்கின்றது. குற்றச் செயல்களுடன் நேரடியாகத் தொடர்புடைய தரப்பாகிய இலங்கை அரசு விசாரணையாளராக இருப்பது என்பது பூரணமாக மாற்றப்பட வேண்டும்.

அடுத்ததாக வரப்போகின்ற விசாரணைப் பொறிமுறையில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் பங்கு முக்கியத்துவம் பெறுகின்றது. இந்தத் திணைக்களம் அரசாங்கத்தின் ஓர் அங்கமாகும். இலங்கையில் அது அரசாங்கத்திற்கு சட்டம் சம்பந்தமான ஆலோசனைகளை வழங்குகின்ற ஒரு நிறுவனமாகத் தொழிற்பட்டு வருகின்றது.

ஆகவே அரசாங்கத்திற்கு அரசாங்கத்தினுடைய பிரச்சினைகள் தொடர்பில் ஆலோசனை வழங்கி, நெறிப்படுத்துகின்ற சட்டமா அதிபர் திணைக்களத்தை, அதே அரசாங்கத்திற்கு எதிராகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள வழக்கொன்றை நெறிப்படுத்துங்கள் என்று எவ்வாறு கூற முடியும்? வரப்போகின்ற விசாரணை பொறிமுறையில் விசாரணைகளை நெறிப்படுத்துகின்ற பொறுப்பை இலங்கையின் சட்டமா அதிபர் திணைக்களமே ஏற்கப்போகின்றது. இது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல.

இலங்கையில் உள்ளக ஆணைக்குழு என்ற விசாரணை குழு நியமிக்கப்பட்டு, திருகோணமலையில் 5 மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் உள்ளிட்ட சில முக்கியமான கொலைச் சம்பவங்களைப் பற்றி விசாரணை நடத்தப்பட்டது. இதில் சர்வதேச நீதிபதியான நீதியரசர் பகவதி உட்பட மூன்று வெளிநாட்டவர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள்.

இங்கு வழக்குத் தொடுநராகவும், வழக்கு விசாரணைகள் தொடர்பில் ஆலோசனை வழங்குபவராகவும் சட்டமா அதிபரே செயற்பட்டிருந்தார். அப்போது, இவருடைய நடத்தைகள் தொடர்பில் மிகவும் அதிருப்தி தெரிவித்து மிகவும் காரசாரமான அறிக்கையொன்றை வெளியிட்டு விட்டு பகவதி வெளியேறியிருந்தார்.

நியாயமான விசாரணைகளை முன்னெடுதத்துச் செல்வதற்கு அவருடைய செயற்பாடுகள் தடைக்கல்லாக இருந்தன என்று அந்த அறிக்கையில் அவர் குறிப்பிட்டிருந்தார். ஆகவே இத்தகைய நிலைமையில், வரப்போகின்ற உள்ளக விசாரணை பொறிமுறையானது, சுயாதீனமான ஒரு தன்மையைக் கொண்டிருக்கும் என்று கூற முடியாது.

ஏனெனில் சுயாதீனமாக செயற்படுவதென்பது, எனக்கு நெருக்கடிகள் இருக்கும் போது நான் சுயாதீனமாக இருக்க முடியாமற் போனது. ஆனால், இப்போது நெருக்கடிகள் இல்லை. ஆகவே, சுயாதீனமாக இருக்கின்றேன், சுயாதீனமாகச் செயற்பட வேண்டியிருக்கின்ற கடமைகளில் என்னை விடுங்கள் என்று கூறுவதை ஏற்க முடியாது. அதே போன்று நாளை *நான் சுயாதீனமாக இருப்பேன்* என்பதையும் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஆகவே, இன்று நெருக்கடியான நிலைமைகளில் அரசாங்கம் மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது என்பதற்காக இங்குள்ள அரச துறைகளும், கட்டமைப்புக்களும் சுயாதீனம் அடைந்திருக்கின்றன என்று கருத முடியாது.

மறுபக்கத்தில், சியாராலியோன் போன்ற உதாரணங்களை இலங்கைக்குள் கொண்டு வருவதற்கு முயற்சிக்கும் போது, முதலில் அந்த நாடுகளுடைய அனுபவங்கள் வித்தியாசமானவை என்பதைக்கருத்திற்கொள்ள வேண்டும்.

கலப்பு விசாரணை பொறிமுறைகூட, தனிப்பட்ட முறையில் எங்களுக்கு ஒரு சரிவராத முறைமையாகவே நான்கருத வேண்டியுள்ளது. ஏனெனில்இந்த ஹைபிரிட் முறைமை கொண்டு வரப்பட்ட நாடுகள் அனைத்திலும் அவற்றிலிருந்த அரசியல் கலாசாரமானது முற்று முழுதாக அதன் பின்னர் மாற்றமடைந்தது. அவ்வாறு மாற்றமடைவதற்கான ஓர் அரசியல் விருப்பு ஒன்று அங்கு இருந்தவர்களிடம் அப்போது ஏற்பட்டிருந்தது.

பொஸ்னியா, யுகொஸ்லாவியா போன்ற நாடுகளில் எல்லாம் நேட்டோ போன்ற நாடுகளினுடைய நெருக்குவாரங்களின் காரணமாகவே, அங்கு ஏற்பட வேண்டிய மாற்றங்களுக்கான நிலைமைக்குள்தள்ளப்பட்டு, அதன்பின்னர் அங்கு ஏற்பட்டுள்ள இப்போதைய நிலைமைகள் உருவாக்கப்பட்டன. ஆனால், அந்த நிலைமைகள் இலங்கையில் இல்லையென்பதை மிக முக்கியமாகக் கவனிக்க வேண்டும்.

இலங்கையில்தமிழ்மக்களுடைய நிலைமை வேறுபட்டதாகக் காணப்படுகின்றது. அவர்கள் தமது அரசியல் உரிமைகளுக்காகவே கடந்த 60 வருடங்களாகப் போராடி வருகின்றார்கள்.

இந்த நிலையில், இங்கு இன்று வரைக்கும் தமிழ் மக்களினுடைய பக்கத்திலிருந்து நோக்கும்போது, இங்குள்ள அரசியல் கலாசாரத்தில் தமிழ் மக்கள் நம்பிக்கை கொள்ளக் கூடிய மாற்றங்கள் எதுவும் ஏற்பட்டிருப்பதைக் காண முடியவில்லை.

தமிழ் மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்குவாரங்களில் மாற்றங்கள் ஏற்படுவதற்குப் பதிலாக, அவற்றை இல்லாமல் செய்யுமாறு கேட்ட போதெல்லாம் அந்த நெருக்குவாரங் கள் - நெருக்கடிகளுக்குள் மேலும் மேலும் அவர்களை ஆழ்ந்து போகச் செய்தார்கள்.

அந்த நிலையிலும், நாட்டில்ஒரு மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான உதவியை, தமிழ் மக்களிடம் அவர்கள் கேட்டபோது, அதற்கு அவர்கள் உதவி செய்திருந்தார்கள். ஆனால் தமிழ் மக்களு டைய நெருக்கடிகளைக குறைப்பதற்கோ இல்லாமற் செய்வதற்கோ எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்பதே உண்மையான நிலையாகும்.

இந்த நிலையில் சனல் 4 இலங்கையில் போர்க்குற்றங்கள் இடம்பெற்றிருக்கின்றன என்பதை ஆதாரங்களுடன் வெளிப்படுத்திய பின்னர் (அவற்றை இலங்கை அரசாங்கம் பொய்யானவை என்று மறுத்திருந்தாலும்) நாட்டில் ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்டிருக்கின்றது.

அந்தப் பின்னணியில் ஐ.நா. விசாரணை அறிக்கை மேலும் உறுதியான ஆதாரங்களுடன் குற்றங்கள் இழைக்கப்பட்டிருக்கின்றன என்று விசாரணை அறிக்கை வெளியிட்டுள்ளது. இந்த நிலையில்தான், இராணுவத்தினருடைய நற்பெயரை நிலைநாட்டுவோம் என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கூறியிருக்கின்றார்.

அரசியல் கலாசாரத்தில் உண்மையான மாற்றம் ஏற்பட்டிருக்குமேயானால், ஐ.நா. அறிக்கையில்ஏதோ சொல்லப்பட்டிருக்கின்றது, நாங்கள் அதனை விசாரிக்க வேண்டும் என்றாவது அவர் திறந்த மனதுடன்கூறியிருக்க வேண்டும்.

அதைவிடுத்து எங்கள் இராணுவத்தின் நற்பெயரை நிலை நாட்டுவோம் என்று உலக அரங்கில் கூறுகின்ற நிலைமையில், ஒரு உள்நாட்டு விசாரணை பொறிமுறைக்குள்ளாக நாங்கள் அடுத்த கட்டத்திற்கு நகர முடியுமா என்ற ஒரு கேள்வி எங்களுக்கு இருக்கின்றது.

இத்தகைய ஒரு சூழலில் பாராளுமன்றத்தில் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் பிரதிநிதிகள் இதனை ஏற்றுக்கொண்டிக்கின்றார்கள். அப்படி இருக்கும்போது, வரப்போகின்ற ஒரு நிலைமைக்கு நாங்கள் எவ்வாறு முகம் கொடுக்கப் போகின்றோம் என்ற கேள்வியும் எழுந்திருக்கின்றது.

அமெரிக்காவின் பிரேரணை மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட பின்னர், ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் ஒருவாய்மொழிமூலமான அறிக்கையொன்றை சமர்ப்பிக்க வேண்டும். அதன் பின்னர் எழுத்து மூல அறிக்கையொன்றையும் அவர் முன் வைக்க வேண்டும். இந்த இரண்டு செயற்பாடுகளுக்குமாக அவர் ஒரு மேற்பார்வையைச் செய்ய வேண்டியிருக்கும்.

அதனைத் தவிர, அமெரிக்க பிரேரணை வந்த பின்னர், இலங்கையின் விடயத்தில் சர்வதேசத்தின் அல்லது ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் நேரடியான எந்தவொரு ஈடுபாட்டையும் காண முடியவில்லை.

பொறுப்பு கூறுவதிலும், உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதிலும், பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதிலும் சர்வதேசமோ அல்லது ஐ.நா. மனித உரிமைப் பேரவையோ இலங்கையை நேரடியாகக் கட்டுப்படுத்தத்தக்க அம்சங்கள் எதனையும் காண முடியவில்லை. ஆகவே, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உண்மையான நீதியை வழங்கக் கூடிய கட்டப்பாடுகளும் காணப்படவில்லை.

அடுத்தது சாட்சிகள் சம்பந்தமானது. இலங்கையில் விசாரணைகளை நடத்தும் போது, அவற்றில் சாட்சியமளிப்பவர்கள் பாதுகாக்கப்படுவார்களா என்பது ஒரு முக்கிய பிரச்சினையாக உள்ளது.

அடுத்து, பொதுநலவாய நீதிபதிகள் அல்லது வெளிநாட்டு விசாரணையாளர்கள் ஒன்றிரண்டு பேரை இலங்கை அரசாங்கம் தனது உள்ளக விசாரணைப்பொறிமுறையில் உள்ளடக்கினாலும், அவர்கள் சம்பந்தப்பட்ட வெளிநாட்டு சட்டங்களை, சட்ட விதிகளை, சட்ட நடைமுறைகளை எப்படி உள்வாங்குவது என்ற சட்டப்பிரச்சினை ஏற்படுவதற்கான வாய்ப்பு காணப்படுகின்றது.

அவற்றை உள்வாங்குவதற்காக இலங்கையின் நீதித்துறையில் திருத்தங்கள் அல்லது மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். அதனை இலங்கை அரசாங்கம் எவ்வாறு செய்யப் போகின்றது என்பது தெரியவில்லை.

*-செல்வரட்ணம் சிறீதரனின் பத்தியிலிருந்து-*

# ‘இங்கு இவரை யான் பெறவே’



றமணன் அந்த புகைப் படத்தை கையில் வைத்திருந்து, அதை நெடுநேரமாக பார்த்துக்கொண்டிருந்தான். அவனுடைய மனைவி சியாமிளா, “என்ன ...காதலியின்ரை படத்தை பார்க்கிற மாதரி ரசித்துக்கொண்டிருக்கிறீர்கள்! யாருடைய புகைப் படம்?” வார்த்தைக்குப் பதிலாக அவனுடைய கண்களிலிருந்து கண்ணீர் பொலபொலவென கொட்டியது. சியாமிளா திகைத்துப்போய் எதுவும் கூறாமல் நின்றாள். சிறிது நேர இடைவெளிக்குப் பின்னர் அவன், வாய் திறந்தான்.

“இவர், எங்கள் குடும்பத்தை வாழவைத்த தெய்வம். சுருக்கமாகக் கூறினால், நான் ஒரு கணித ஆசிரியராக வருவதற்கும், நீ என்னைத் திருமணம் செய்வதற்கும் இவர்தான் காரணம். இவர் இல்லாவிட்டால், நான் எங்கேயோ கூலிவேலை செய்துகொண்டிருப்பன். அதிலே உட்கார். வாழ்க்கையின் புதிரை நீயும் அறிந்து கொள்ள வேண்டும்.”

அவன் கூறப்போவதை கேட்கும் ஆவலில் அவன் காட்டிய கதிரையை அவனுக்கு கிட்ட இழுத்துப் போட்டுக்கொண்டாள்.

“இவர்தான் யாழ்ப்பாணத்தில் கணிதம் கற்பிப்பதில் கொடிகட்டிப் பறந்த குமரேசன் ஆசிரியர். அவரை தங்களுடைய கல்வி நிலையங்களில் இணைத்துக் கொள்வதற்கு பலர் தவம் கிடந்தார்கள். இதைவிட பிரத்தியேக வகுப்புக்களுக்காக படையெடுத்த பெற்றோர்கள் பலர், கணித பாடத்தின் பெயரை, கனவில் கேட்டும்- அஞ்சிய பலரை திறமைச் சித்தி பெறவைத்த திறமைசாலி. அவருடைய வீட்டுக்கு பக்கத்தில்தான் எங்களுடைய வீடும் இருந்தது.

அப்போது எங்களுடைய குடும்பம் வறுமைப் புயலில் சிக்கித்தவித்தது. அப்பா அரிசி ஆலை ஒன்றில் கூலி வேலை செய்தார். அம்மா ஆடு, கோழிகளை வளர்த்து சிறிது பணம் தேடுவார். அக்கா இரண்டுபேரும், படிப்பை இடையில் நிறுத்தி விட்டு அம்மாவுக்கு உதவி செய்தார்கள்.

நான் மட்டும் படித்துக் கொண்டிருந்தேன். எங்களுடைய குடும்பநிலையை குமரேசன் ஆசிரியர் அறிந்திருந்தார். ஒருநாள் அவர் எங்களுடைய வீட்டுக்கு வந்தார்.

அப்பா, அம்மாவிடம் கூறினார். “றமணனின் படிப்பை நிறுத்திப் போடாதேயுங்கோ. அவனுக்கு கணக்கு நல்லா ஓடும்போலகிடக்குது. அவனுடைய படிப்புச் செலவை நான் பார்த்துக்கொள்ளுகிறன்” என்றார்.

அப்போது நான், ஏழாம் தரம் படித்துக் கொண்டிருந்தேன். மாதம் ஐந்நூறு ரூபாய் எனக்குத் தருவார். அவரை தெய்வமாய் மதித்த என்னுடைய பெற்றோர்கள், அவர் உதவி செய்வதை இழிவாகக் கருதவில்லை. அவர், நேரம் கிடைக்கும் போதெல்லாம் எனக்கு கணிதம் கற்பிப்பார். ஏனைய பாடங்களுக்காக தனியார் கல்வி நிலையங்களுக்கு சென்று வந்தேன்.

## சிறுகதை

காலப்பறவை சிறகடித்து பறந்துகொண்டே இருந்தது. நான் கணிதபாடம் உட்பட ஐந்து பாடங்களுக்கு *ஏ* யும் ஏனைய பாடங்களுக்கு *பி* யும் *சி* யும் க.பொ.த.சாதாரணதர பரீட்சையில் பெற்றுக்கொண்டேன்.

நான் க.பொ.த. உயர்தரம் படித்துக்கொண்டிருந்தேன். ஒருநாள் குமரேசன் ஆசிரியர், என்னிடம் கூறனார். ‘றமணா தனியார் கல்வி நிறுவனம் ஒன்றுக்கு ஏழாம் வகுப்புக்கு கணித பாடம் கற்பிக்க ஒரு ஆசிரியர் தேவையாம். நீ உனக்கு வசதியான நேரத்தில அந்த வகுப்பை எடுக்கலாம் தானே. அதில கிடைக்கின்ற வருமானம் உங்களுடைய குடும்பத்துக்கு ஒரு ஆறுதலாக இருக்கும் இல்லையா?’ எல்லாம் இறைவன் செயல் என்பதில் நம்பிக்கை கொண்ட நான் மறுக்காமல் சம்மதம் தெரிவித்தேன்.


‘றமணா, மாணவ உலகத்துக்கு உன்னை அறிமுகப் படுத்துகிறேன். அறிவு வளர்ச்சிப் பாதையில் பயணிக்கிறது. அதற்கு ஏற்றாற்போல் உன்னுடைய அறிவையும் வளர்த்துக் கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் வெகுநாட்களுக்கு உன்னால் கல்வி உலகில் ஜீவிக்க முடியாது. வெகு விரைவில் தூக்கி எறியப்படுவாய். இதை எப்போதும் ஞாபகத்தில் வைத்துக்கொள்’

அந்த நாள் ஆரம்பித்த *ரியூசன்* இன்றுவரை தொடர்ந்துகொண்டிருக்கிறது. நான் உழைத்துக்கொண்டே படித்தேன். எனது வருமானமும் அக்காமாரைத் திருமணம் செய்துவைக்க அப்பாவுக்கு உதவியாய் இருந்தது. ஒருவர் உள்நாட்டிலும் மற்றவர் வெளிநாட்டிலும் நல்லாகத்தான் இருக்கினம். நானும் ஒரு கணிதவிஞ்ஞான பட்டதாரியானேன். நாங்கள் இருவரும் சேர்ந்து வாழுகின்ற வாய்ப்பும் கிடைத்தது. குமரேசன் ஆசிரியர் இப்போது உயிரோடு இல்லை.

அவர் பிற்காலத்தில் தனிமையில் வாழ்ந்தார். பிள்ளைகள் வெளிநாட்டுக்கு வரும்படி பலதடவைகள் அழைத்தும் அவர் போக மறுத்துவிட்டார். அவருடைய மனைவியின் எதிர்காலத்தை யோசித்து அவவையும் தன்னுடைய பிள்ளைகளில் ஒருவருடன் வெளிநாட்டில் வாழ அனுப்பி வைத்தார்.

ஒருநாள் குமரேசன் ஆசிரியர், என்னிடம் ‘றமணா நான், பிறந்த பூமியில கண்ணை மூடிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கடைசி நேரத்தில் எனக்கு இயலாத நிலை வரும் பொழுது, ஒரு வயோதிப் இல்லத்தில் என்னை சேர்த்துவிடு. என்னுடைய பென்சன் இருக்கு. அவர்கள், ஏற்றுக் கொள்வார்கள்’ என்றார்.

‘சார், நீங்கள் எனக்கு, கண்கண்ட தெய்வம் உங்களுக்கு கடமை செய்வதை ஆண்டவனுக்கு செய்யும் அர்ச்சனையாக நினைக்கிறன். நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்கா தேயுங்கோ’ என்றேன். அவர் கண்ணை மூடும்வரை அவர் மனம் நோகாமல் நடந்தேன். அவருடைய ஆசீர்வாதத்தால், இன்று கணிதபாடம் கற்பிப்பதில் அவரைப்போல திறமையும் மதிப்பு. முள்ளவனாக இருக்கிறேன்.”



றமணன் தனது மனதுக்குள் அடைத்து வைத்திருந்த எண்ணங்களை வெளியே கொட்டிவிட்ட ஆறுதலில் இருந்தான்.

சியாமிளா அந்த புகைப் படத்தை வாங்கிக் கொண்டாள். பலருடைய செல்வாக்கையும் பெற்றுக் கொள்ளக் கூடிய ஒரு கணவனை தான் அடைய வழிசமைத்துக் கொடுத்த, அந்த மனித தெய்வத்தை இதய மலர் தூவி அர்ச்சித்தாள்.

க. தர்மலிங்கம்

# நீதியை நீதி வெல்ல முடியாது

இலங்கை அரசின் மீது சர்வதேச விசாரணைதான் வேண்டும் என்ற தமிழரின் கோரிக்கைகளை முற்றாக புறம் தள்ளிவிட்டு உள்ளக விசாரணைக்கு உடன்பட்டுள்ளது சர்வதேசம்.

இது தமிழினத்திற்கு சர்வதேசம் இழைந்தபெரும் துரோகமாகும். இது துரோகமாகவே கருதப்பட வேண்டியது என்பதில் மாற்றுக் கருத்திருக்காது. ஏனெனில் மகிந்த ராஜபக்ஷ





ஆட்சியில் இருந்தபோது அமெரிக்கா உட்பட்ட சர்வதேச நாடுகள் முன்னெடுத்த நடவடிக்கைகளுக்கும் தற்போது எடுக்கும் நிலைப்பாட்டிற்கும் பாரிய மாற்றங்கள் உள்ளன.

பொருளாதாரக் கொள்கைகளைக் கருத்திற் கொண்டே மனித உரிமை விவகாரங்களை வல்லாதிக்கமிக்கநாடுகள் எடுக்கும் என்ற கருத்தையும் சர்வதேச நாடுகளின் திடீர் மனமாற்றம் ஊடாக உணர முடிந்துள்ளது.

சீனாவிற்கு இலங்கையை தாரைவார்த்துக் கொடுக்கும் முயற்சிகளை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேற்கொண்டதன் விளைவாக இந்நிலை உருவானது என்ற குற்றச்சாட்டையும் சுமத்துவதில் தவறிருக்க முடியாது.

தமிழினத்தை அழிப்பதன் ஊடாக சிங்களவர்களின் மனதில் நீங்காத இடத்தைப் பிடித்து நிரந்தர ஜனாதிபதியாக இருக்கலாம் என்று நினைத்தவர் மகிந்த. ஆனால் அவரின் நினைப்புகள் அனைத்தும் நிறைவேறாத ஆசைகளாகப் போயின.

ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியைத் தழுவிய மகிந்த அதன் பின்னர் பாராளுமன்றத் தேர்தலில் பிரதமர் கனவுடன் தேர்தல் களம் புகுந்தார். ஆனால் தேர்தலில் வெற்றிபெற்று பாராளுமன்றம் நுழைந்தாலும் பிரதமராக அலரிமாளிகைக்கு செல்ல அவரால் முடியவில்லை.

ஒருவேளைமகிந்தமீண்டும் ஜனாதிபதியாகவோ அல்லது பிரதமராகவோ வந்திருந்தால் சர்வதேச விசாரணைக்கு இலங்கை அரசுமுகம் கொடுக்கும் சூழ்நிலை உருவாகியிருக்கலாம்.

ஜனாதிபதியாக தெரிவாகியிருந்தால் சீனாவின் உதவிகளுக்கு நன்றிக்கடன் செலுத்த வும் தனது மகன்மார்களின் சொகுசு வாழ்க்கைக்காக கடன் களை அதிகளவில் பெற்று இலங்கையை நிரந்தரக் கடனாளி நாடாக சீனாவிடம் அடகுவைக்கவும் எத்தனித்திருப்பார்.

அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளுடன் இலங்கைக்கு முரண்பாடுகள் அதிகரிப்பதை சீனா விரும்புவதால் மகிந்தவின் தயவை தட்டிக்கழிக்க அந்நாடு என்றுமே விரும்பாது என்பதை மைத்திரி ஆட்சிக்கு வந்த பின்னரும் தனது திட்டங்களை முன்னெடுப்பதில் அந்நாடு காட்டிவரும் அக்கறைகள் மூலம் அறியமுடிகின்றது.

பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் இடையில் நீண்டகாலம் நீடித்துள்ள போர்க்குணம் இலங்கையை யார் பக்கம் இழுப்பது என்பதிலும் அதிலும் விட்டுக் கொடுப்புக்களுக்கு தயார் இல்லை என்பதையும் கடந்தகால வெளி விவகார நடவடிக்கைகள் ஊடாக அறிந்துகொள்ளலாம்.

ஆக, இலங்கையை மையப் படுத்தி அயல் நாடுகளும் ஏனைய சர்வதேச நாடுகளும் முன்னெடுத்து வரும் நடவடிக்கைகள் தமிழர் நலன் சார்ந்ததை விடபெரியது என்பதால் தமிழன் கொத்துக் கொத்தாக கொன்றொழிக்கப்பட்டாலும் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் கட்டுக்கடங்காது கட்டவிழ்த்துவிடப்பட்டாலும் சர்வதேச விசாரணைக்கு சாத்தியம் இல்லை என்பதை உணர்த்தியுள்ளது.

வல்லரசு நாடுகள் பின்னிய சதி வலையில் மாட்டிக் கொண்டுள்ள தமிழினத்திற்கு பாராளுமன்றம் நுழைந்துள்ள தமிழர்களினாலும் விடிவுகிடைக்கும் என்று நம்பிக்கை கொள்வதால் பலனேதும் கிடைத்துவிடப் போவதில்லை.

ஈழத்தமிழரை நம்ப வைத்து கழுத்தறுத்து விட்டது அமெரிக்கா என்ற தமிழகத்திலுள்ள ஈழ உணர்வாளர்களின் பகிரங்க குற்றச்சாட்டுக்களிலும் நியாயம் உள்ளது என்பதை ஏற்றுத்தான் ஆகவேண்டும். தனது நாட்டு மக்களையே அழித்து விட்டு சர்வதேச விசாரணை முன் னெடுக்கப்படுவதை தடுத்து தனக்கு சாதகமான விசாரணை முறையை தெரிவு செய்ததை பெரு வெற்றியாக கருதும் இலங்கைக்கு சாதகமான முடிவை எடு



த்த அமெரிக்கா மீது எத்தகைய குற்றச்சாட்டுக்களையும் சுமத்துவது தகும்.

மகிந்தஆட்சியில் இருக்கும் போது மனிதஉரிமைகள் மீறப்பட்டதை ஏற்ற அமெரிக்காவுக்கும் இந்தியாவிற்கும் மைத்திரி ஆட்சிக்கு வந்தவுடன் மீறப்பட்ட மனித உரிமைகள் மறந்துபோய்விட்டது. இது தமிழினத்திற்கு எதிராக மட்டும் இழைக்கப்பட்ட அநீதி யல்ல. இது ஒட்டுமொத்தமனித இனத்திற்கும் எதிராக இழைக்கப்பட்டஅநீதியாகும்.

மனிதஉரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய ஐக்கிய நாடுகள் சபையில் மனித உரிமைகளை பாதுகாக்கவும் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க தவறியதும் எதிர்காலத்தில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்.

தமிழினத்தை அழித்த இலங்கை ஆட்சியாளர்களுக்கு சர்வதேச நாடுகள் துணைபோனதற்கு எதிராகவும் உண்மைகளை மறைக்கும் உள்ளக விசார ணைக்கு உடன்பட்டுள்ளதாலும் இறுதிப்போரில் படுகொலைக் குள்ளாக்கப்பட்ட தமிழினத்தவர்களுக்கு நீதி மறுக்கப்பட்டுள்ளது.

இது சர்வதேச நாடுகள் தமது நிதி மூலங்களைப் பெருக்கும் பொருளாதாரக் கொள்கைகளுக்காகவும் நாடுகளுக்கு இடையிலான உறவுகளை பலப்படுத்தவும் திட்டமிட்டு மேற்கொண்ட சதிவேலை.

இலங்கையில் இடம்பெற்ற தமிழினத்திற்கு தீராத்துயரத்தை ஏற்படுத்திய கொடியயுத்தம் பல் வேறு கேள்விகளை எழுப்பத் தலைப்பட்டுள்ளது. இலங்கை அரசை சர்வதேச நாடுகளின் மத்தியில் கொண்டு சென்று பொறுப்புக்கூற வைத்துள்ள அதே வேளை நல்லிணக்க

## ஆத்மாக்களுக்கு அஞ்சலி அதைவிட வேறுவழியில்லை



நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும் என்ற நச்சரித்தல்களுக்கும் ஆளாக்கியுள்ளது.

இருப்பினும் தமிழினத்தை சர்வதேசம் இரண்டுமுறை நம்ப வைத்து கழுத்தறுத்துவிட்டது என்ற மனக்கவலையுடன் உயிரிழந்த எம்மினத்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதைத் தவிர வேறு எதனையுமே செய்ய முடியாது. நீதியைக் கருத்திற் கொண்டே நீதியைப் பெற்றுக்கொடுக்க சர்வ தேசம் தயக்கம் காட்டியுள்ளது என்ற குற்றச்சாட்டையும் மறுதலிக்க முடியாது.

**காண்டீபன்**

# அன்று அனாதரவானவர் விடுதியில்.. இன்று அமெரிக்க மென்பொருள் கம்பனி இயக்குநராக...



வாழ்க்கையில் முன்னே றாமல் இருப்பதற்கு அது, காரணங்களை அடுக்குபவர்கள் அவசியம் படிக்க வேண்டியது ஜோதி ரெட்டி என்கிற சாதனை பெண்மணியின் கதையை நிச்சயமாக அறிந்திருக்கவேண்டும்.

கண்ணுக்கு எதிரே இருந்த பிரச்னைகளை தாண்டி, கண்ணுக்கு தெரியாமல் தனக்கு முன்பிருந்த ஆயிரம் சவால்களையும் கடந்து, அனாதை இல்லத்தில் வாழ்கையை தொடங்கியவர்.

இன்று... அமெரிக்காவில் ஒரு கம்பெனியை நிர்வகித்துக் கொண்டிருக்கிறார்.

1970 ஆம் வருடம் ஆந்திர மாநிலத்தில் பிறந்த ஜோதி ரெட்டி, குடும்ப சூழ்நிலை காரணமாக தாயில்லா பிள்ளை என்று பொய் சொல்லப்பட்டு, தன் சொந்த தந்தையாலேயே ஒரு அனாதை இல்லத்தில் விடப்பட்டார். அங்கேயே பல வருடங்கள் சொந்த பந்தங்களைக் கூட காணாமல் சொல்ல முடியாத தனிமையில் வாடிய போதும், பள்ளிப் படிப்பை கஷ்டப்பட்டு தொடர்ந்திருக்கிறார். விடுமுறை நாட்களில் கூட இல்ல மேற்பார்வையாளரின் வீட்டில் வேலை செய்து, அங்கேயே உண்டு உறங்கியிருக்கிறார் இளம் ஜோதி. பத்தாம் வகுப்பு முடித்த உடனேயே வீட்டிற்கு அழைத்துக் கொள்ளப்பட்டு, கையோடு திருமணம் செய்து கொள்ளவும் வற்புறுத்தப்பட்டார். வேறு வழியின்றி 16 வயதிலேயே திருமணம் செய்து கொண்டார். இரண்டு குழந்தைகளுக்கு தாயான தோடு, தினமும் 5 ரூபாய் சம்பளத்திற்கு வயலில் தினக் கூலி வேலை பார்த்து வந்தார்.

1989 ஆம் வருடம், ஜோதியின் வாழ்கையில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. நேரு யுவ கேந்திரா சார்பில் கிராம இளைஞர்களுக்காக வகுப்புகள் எடுக்கப்பட்டன. அந்த வகுப்புகளில் பாடம் சொல்லிக் கொடுக்க, படித்தவர்கள் வேறு யாரும் இல்லாததால் ஜோதி அழைக்கப்பட்டார். அந்த சம்பளமும் குடும்பத்தை பாதுகாக்க போதாததால், இரவு நேரங்களில் தையல் வேலையில் ஈடுப்பட்டார். தட்டச்சும் கற்றுக் கொண்டார். பார்த்துக் கொண்டிருந்த வேலையில் அவர் காட்டிய உத்வேகமும், வித்தியாசமான முயற்சிகளும் அவரை யுவ கேந்திர மண்டல மேற்பார்வையாளராக உயர்த்தியது.

அதன் பிறகு பல வாரங்கள் மாவட்டத்தின் வெவ்வேறு பகுதிகளுக்கு வேலை நிமித்தமாக அலைந்தபோதுதான், கல்வியின் முக்கியத்துவத்தை புரிந்து கொண்டார். சிரத்தை எடுத்து தானும் மேற்கொண்டு படித்தார். திறந்த நிலை பல்கலைக் கழகத்தில் முது நிலை பட்டப் படிப்பு வரை படித்து, அரசு ஆசிரியராக பணியில் சேர்ந்தார். தன் வீட்டிலிருந்து, வேலைப் பார்த்த பள்ளிக்கு செல்ல இரண்டு மணி நேரம் ஆகும். அந்த நேரங்களில் கூட அயராமல், தான் தைத்த துணிகளை பயணம் செய்யும் பேருந்துகளில் விற்பார். தனக்கு கிடைக்கும் கொஞ்ச ஓய்வு நேரத்தில் கூட, இப்படி வாழ்வில் அடுத்த் கட்டத்தை நோக்கி முன்னேற வாய்ப்பளிக்கும் வேலைகளில் ஈடுப்பட்டார்.

அமெரிக்கா செல்ல வேண்டும் என்ற கனவு ஜோதிக்கு வரக் காரணம், அங்கிருந்து வந்த அவரின் உறவினர் ஒருவர். அங்கு சென்றால் நல்ல வேலை வாய்புகள் கிடைக்கும் என நம்பினார். இதனால் கணினி கற்க ஆரம்பித்தார். பாஸ்போர்ட்,



விசாவுக்கு பணம் சேர்க்க துவங்கினார். ஒரு வழியாக பணம் சேர்த்த பின், தன் இரு மகள்களையும் விடுதியில் விட்டுவிட்டு அமெரிக்க சென்றார். வாழ்கையில் எப்படியாவது முன்னேறி விட வேண்டும் என்கிற ஆசையோடு பறந்து சென்ற ஜோதியை, அமெரிக்கா உடனடியாக வரவேற்கவில்லை. அங்கு சென்ற பின் சரியான வேலையும், தங்க ஒரு இடமும் கூட கிடைக்காமல் அலைந்தார்.

இறுதியில் "மூவி டைம்" என்கிற வீடியோ கடையில் வேலைக்கு சேர்ந்தார். இந்தியர் ஒருவரின் வீட்டில் வாடைகைக்கு தங்கினார். பல நாட்கள் போராட்டத்திற்கு பிறகு ஒரு நல்ல அமெரிக்க கம்பெனியில் வேலை கிடைத்தது. ஆனால், விதி விளையாடியது. விசா பிரச்னையால் அந்த வேலையையும் விட வேண்டி வந்தது.

சில நாட்கள் வேலையிழந்து நின்ற பின், சிறு சிறு வேலைகள் பார்த்தார். விசா பிரச்னையால், தான் சந்தித்த மன வேதனையை வேறு யாரும் அனுபவிக்கக் கூடாது என்று விரும்பினார். அங்கு தோன்றியதுதான் கம்பெனி தொடங்கும் கனவு. அந்த துறையில் மேற்கொண்டு அனுபவம் பெற்றார். பல நாட்கள் மிக கடினமாக உழைத்தார். இன்று ஜோதி ரெட்டி, அரிசோனாவில் இயங்கி வரும் *கீ சாப்ட்வேர் சொல்யூஷன்* நிறுவனத்தின் இயக்குனர்!

ஒரே நாளில் நடந்த அற்புதமல்ல இந்த சாதனை. இது, பல வருட இடைவிடாத போராட்டமும், வாழ்கையை வாழ்ந்து தான் பார்ப்போமே என்று உத்வேகம் கொடுக்கும் துணிசலும் ஈன்ற வெற்றிக் கனி.

பல கோடி ரூபாய் லாபம் ஈட்டும் நிறுவனத்தின் இயக்குனர் ஜோதி, இன்றும் இந்தியா செல்லும்போதெல்லாம் பல அனாதை இல்லங்களுக்கும், மகளிர் கல்லூரிகளுக்கும் சென்று உரையாற்றுகிறார். கடும் வெயிலில் கூட வெறும் கால்களோடு அன்று நடந்த ஜோதி, இன்று அறை முழுக்க அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் காலணிகளில் எதை அணிவது என யோசிக்க பத்து நிமிடம் ஆகும் அளவு உயர்ந்திருக்கிறார்.

ஒரு காலத்தில் ஒரு தட்டு நிறைய உணவை தன் கண்ணால் பார்க்க மாட்டோமா என்று ஏங்கிய ஜோதி, இன்று பல ஆதரவற்ற மற்றும் அனாதை இல்லங்களின் பசியை தீர்க்க உதவுகிறார். பண உதவியை யார் வேண்டுமானாலும் செய்யலாம், ஆனால், தங்கள் நேரத்தை ஒதுக்கி ஆதரவற்ற பிள்ளைகளோடு செலவழிக்க முடிவதே சிறந்த தானம் என்பது இவர் கருத்து. அதனால் அடிக்கடி இந்தியா வந்து தன்னால் முடிந்த அனைத்து உதவிகளையும் இயலாதவர்களுக்கு செய்து வருகிறார் ஜோதி ரெட்டி.

சிறு சிறு தடைகளை வென்று, பெரிய பெரிய வெற்றிகளை சுவைக்க துடிக்கும் ஒவ்வொரு பெண்ணிற்கும் முன்னோடியாக ஜோதிரெட்டி விளங்குகிறார்.

# காலத்தால் அழியாத கானங்கள் ...

படம்: எதிர்நீச்சல்
**இயற்றியவர்:** கவிஞர் வாலி
**இசை:** எம்.எஸ். விஸ்வநாதன்
பாடியவர்: சீர்காழி கோவிந்தராஜன்




அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

வெற்றி வேண்டுமா? போட்டுப் பாரடா எதிர்நீச்சல்
சர்தாம் போடா தலைவிதி என்பது
வெறுங்கூச்சல்
எண்ணித் துணிந்தால் இங்கு என்ன நடக்காதது
கொஞ்சம் முயன்றால் இங்கு எது கிடைக்காதது?
வெற்றி வேண்டுமா? போட்டுப் பாரடா எதிர்நீச்சல்

பிள்ளையைப் பெறுகிற அம்மாவுக்கு பத்து
மாதமும் எதிர்நீச்சல்
பொறக்குற கொழந்த நடக்குற வரையில்
தரையில் போடுவது எதிர்நீச்சல்
பள்ளிக்குப் பள்ளி இடத்துக்கு அலையும்
அப்பனுக்கது தான் எதிர்நீச்சல்
பிள்ளைக்கு எப்படி இடம் கிடைச்சாலும் பரிட்சை
வந்தா எதிர்நீச்சல் எதிர்நீச்சல்

வெற்றி வேண்டுமா? போட்டுப் பாரடா எதிர்நீச்சல்

கடற்கரையோரம் நடக்குற காதல் கல்யாணம்
முடிப்பது எதிர்நீச்சல்
கணக்குக்கு மேலே பிள்ளையைப் பெத்து
காலங்கழிப்பதும் எதிர்நீச்சல்
கண்மூடி வழக்கம் மண்மூடிப் போகக்
கருத்தைச் சொல்லுவது எதிர்நீச்சல்
வீட்டுக்கு வீடு ஓட்டுக்கள் வாங்கி பதவிக்கு
வருவது எதிர்நீச்சல் எதிர்நீச்சல்

வெற்றி வேண்டுமா? போட்டுப் பாரடா எதிர்நீச்சல்
சர்தாம் போடா தலைவிதி என்பது
வெறுங்கூச்சல்
எண்ணித் துணிந்தாலின்று என்ன நடக்காதது
கொஞ்சம் முயன்றாலின்று எது கிடைக்காதது?
வெற்றி வேண்டுமா போட்டுப் பாரடா எதிர்நீச்சல்

**இப்பாடலை SMS மூலம் விரும்பிக் கேட்டவர்கள்:**
பாக்கியலட்சுமி- இமையாணன். உடுப்பிட்டி, தங்கராசா குடும்பம்- கொற்றையூர், காயா. கீர்த்தி, சாளினி, செல்லமணி, அமலதாஸ், கீரிமலை றோட், பண்டத்தரிப்பு, கேதீபன்- மாங்குளம், ஆர்த்திகா- தொல்புரம், சுதாகர், பிரதீப், கர்மிளன், லக்சுமிகா- வல்வெட்டித்துறை, யாழி- துன்னாலை, கனகமூர்த்தி, கிருஷாந்தன்- சிறுப்பிட்டி, சுவேந்தினி- முல்லைத்தீவு, நியோகிதன்- கிளிநொச்சி, ஆஸ்ரா, சரா, கஜா,ரிஸ்மியா

*அன்பு வாசகர்களே!*
காலத்தால் அழியாத கானம் பகுதிக்கு நீங்களும் பாடல்களை விரும்பிக் கேட்கலாம். உங்கள் பெயர், முகவரியுடன் விரும்பிக் கேட்பவர்கள் பெயர், முகவரியையும்
**021 567 1543**
எனும் இலக்கத்திற்கு **SMS** செய்யுங்கள்.

# ஈழத்து சினிமா

## அவுரட் அன்ட் பெலிட்-குறும்பட விமர்சனம்

பல்கலைக்கழகத்தில் தலையிடி தரும் பிரச்சினைகளில் மிக முக்கியமானது பகிடிவதை சார்ந்த செயற்பாடுகள். பகிடிவதைக்கு உட்படும் மாணவர்கள் ஏதோவொரு விதத்தில் உளவியல் நெருக்கடிக்கும் உடல் ரீதியான வதைகளுக்கும் தெரிந்தோ தெரியாமலோ பீடிக்கப்பட நேர்கின்றது. அகவயமாகவும் புறவயமாகவும் நீண்ட துன்பத்தினை பகிடிவதை ஏற்படுத்தினாலும் ஏதோவொரு விதத்தில் பகிடிவதையை ஒருவர்மீது நிகழ்த்தும் நபர் அல்லது குழுக்கள் இன்னுமொரு தளத்தில் மகிழ்ச்சியும் கிளர்ச்சியும் அடைகின்றார்கள். பாதிக்கப்பட்ட மாணவர்கள் வருகின்ற வருடங்களில் சிரேஷ்ட மாணவர்கள் ஆகின்றபோதும் கனிஷ்ட மாணவர்கள் மீது பகிடிவதையில் ஈடுபட்டு அதே கிளர்ச்சியை அடைகின்றனர்.

இந்த துன்ப சுழற்சிகளை மையப்படுத்தி நல்லையா சபேசனினால் எழுதி நெறிப்படுத்தப்பட்டு யாழ்ப்பாணம் சர்வதேச திரைப்படவிழாவில் போட்டியிட்டு பன்னிரண்டு வாக்குகளினால் முதல் இடத்தினை தவறவிட்டு இரண்டாம் இடத்தினை பிடித்த குறும்படம் அவுரட் அன்ட் பெலிட். அரேபிய மொழியில் இதற்கான அர்த்தம் மறைக்கப்பட்ட உறுப்பு என்று பொருள்படும்.

இத்திரைப்படம் அரங்கில் காட்சிப்படுத்தப்பட்டபோது வயதுவந்தவர்களுக்கான பிரிவிலே காட்சிப்படுத்தப்பட்டது. சிறுவர்கள் அரங்கில் இருந்து வெளியேற்றப்பட்டனர். பொதுவெளியில் உபயோகப்படுத்த முடியாத இழிவு சொல்லாக கருதப்படும் பெண்களின் பாலியல் உறுப்புக்




களை குறிக்கும் வார்த்தைகள் குறும்படத்தில் ஒலிப்பது அதற்கான முக்கியமான காரணங்களில் ஒன்றாக இருக்கின்றது. நிஜத்தின் அருகில் குறும்படத்தின் மையக்கட்டுமானம் நின்று பேசுவதற்கு அதன் வார்த்தைப் பிரயோகங்களின் வன்மம் தேவைப்படுகின்றது மறுக்கமுடியாத ஒன்று. ஒளி மங்களான இருட்டு பரவிய அறையில் விடுதியில் தங்கியிருக்கும் சிரேஷ்ட மாணவன் குழுக்களினால் கனிஷ்ட மாணவர்கள் பகிடிவதைக்கு கொடூரமாக உள்ளாக்கப்படுகின்றனர். கனிஷ்ட மாணவர்களின் உடைகள் கலைக்கப்பட்டு நிர்வாணமாக நிறுத்த வலியுறுத்தப்படுகின்றனர். அவர்கள் தயங்கியபோது சீறிப்பாயும் சிரேஷ்ட மாணவர்கள் தாக்குதல் நடத்தவும் இழிவு சொற்களை காரி உமிழ்த்தவும் தயங்காமல் இல்லை. முஸ்லிம் மாணவன் தயங்கி தமது அந்தரங்க உறுப்புக்கள் மற்றவர்களுக்கு காட்டப்படுவது தமது சமயத்தில் தடைவிதிக்கப்பட்டதாகக்கூறி தன் உடைகளை களைய மறுக்கின்றான். இருந்தும் சிரேஷ்ட மாணவனவர்களால் நிர்வாணமாக்கப்படுகின்றான். புகைக்கும் சிகரெட்டுடனும் வன்மையான குரலுடன் ஒலிக்கும் சிரேஷ்ட மாணவர்களின் உருவாக்கம் பார்வையாளனுக்கு திடுக்கிடலை கொடுத்தாலும் நிஜத்தின் மிக அருகாமையில் நிற்கின்றது.

இறுதியுத்தங்களில் அகப்பட்டு பல்கலைக்கழகம் செல்வதில் தாமதம் அடைந்தவர்கள் சிறிய வருடங்கள் பிந்திய நிலையில் படிக்கநேர்கின்றது. அவ்வாறான சகவயதினை ஒத்த அல்லது தங்களிலும் வயதுகூடிய கனிஷ்ட மாணவர்கள் மீது சிரேஷ்ட மாணவர்கள் பகிடிவதையினை மேற்கொள்ள முயல்கின்றனர். இழப்பதற்கு மேலும் எதுவும் இல்லை என்ற நிலையில் அனைத்தையும் இழந்து கல்விகற்பவர்கள் மீது பகிடிவதை என்ற பெயரில் கட்டவிழ்த்து விடப்படும் வன்முறைகள் மிக துன்பமாக அரங்கேறுகின்றது. சபேசன் தனது குறுங்கதைப்படத்தில் இதனை மையப்படுதி சொல்லிக்கொண்டு செல்கின்றார். இதனை சொல்ல எடுத்துக்கொண்ட சைகைசொல்லல் முறையும் வசனங்களும் மிக உருக்கமானவை. இறுதி யுத்தத்தில் இருந்து மீண்டு பல்கலைக்கழகத்தில் படிக்க வந்தவன் தனதுவயதில் குறைந்தவர்கள் சிரேஷ்ட மாணவனான நிலையில் இருந்து தன்னை அவமானப்படுத்தியதினை சகிக்கமுடியாமல் பல்கலைக்கழகத்தில் இருந்தேவெளியேறுகின்றான்.

இப்படி வாழ்க்கையில் இருட்டடிக்கப்பட்டு வெளியேறிச் செல்பவர்கள் ஒருதொகையினராக இருக்கக்கூடும். சிலசமயம் பகிடிவதையில் மோசமாக ஈடுபட்டது தெரிய வந்து பல்கலைக்கழகத்தில் இருந்து நீக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாக மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும்போது அவர்கள் தாங்கும் பதாதைகள் நீங்கப்பட்ட மாணவர்களின் எதிர்காலம் என்ன ஆகும் என்று பாதிக்கப்பட்டு வாழ்க்கையை இருட்டில் செலவழிக்கச் செல்பவர்களை மறந்து கேட்கின்றது. இதன் காட்சிகள் ஒளிப்படச்சட்டத்தில் அட்டகாசமாக விழுகின்றது. நிஜத்தின் அருகாமையில் நிற்கும் சிறந்த குறும்படங்களில் இதுவும் ஒன்று.

-அனோஜன் பாலகிருஷ்ணன்-

# ஈழத்துக் கவிதைகள்

## காந்தி மார்க்கம்

காந்தி மார்க்கம்
காந்தி என்றதுமே எமக்கு-மனச்
சாந்தி பிறக்குதம்மா
காலத்தால் அழியாமலே-மகாத்மா
கொள்கை நிலைக்குதம்மா
சுதந்திரப் போரினிலே-காந்தி
சொற்திறன் வென்றதம்மா
சுழன்றிடும் பூவுலகில்-காந்திவழி
சுடர்விட்டு ஒளிக்குதம்மா
சத்தியலட்சியத்தில் -காந்தி
சகத்தினைக்காத்தனம்மா
அஹிம்சை ஆயுதத்தால்-மகாத்மா
அழியாவரம் பெற்றானம்மா
அந்நியர் மாயத்திலே-காந்தி
அகப்படவில்லையம்மா
ஆதிக்கவெறிகளெல்லாம்-காந்திமுன்
அஞ்சியே போனதம்மா
காந்தி எனும் நாமம்-பாரில்
சாந்திக்கு வழியேயம்மா
கருணையே உருவமம்மா-அப்பெயர்
காலமெலாம் வாழுதம்மா
காலத்தின் போக்கினிலே-நாமும்
கடமையைச் செய்வோமம்மா
காந்தியார் வழியினிலே-எமக்கும்
சாந்தி கிடைக்குமம்மா

## நாகரீக மோகம்

நாகரீக மோகம்
பழைமை பழைமை என்று கூறி
பண்டை நாகரீகங்களைப்
பாரிற் தூக்கி எறிந்து நாம்
நவீன நாகரீக மோகத்திலே
நாளும் நாட்டம் கொள்கிறோம்
நாகரீக வளர்ச்சி என்றே
நாளும் கூறும் பெரியோர்கள்
பழைய சமய தத்துவங்கள்
பாருக்குணர்த்தும் நெறிதனை
படித்தும் உணராப்பதர்களே
இன்று இந்த மண்ணுள்ளோர்
நன்று தீது பாராது நாளும்
வீணே வாழ்வைப் போக்குகிறார்
பண்டை நல்ல நெறிகளை
பற்றி வாழ வளியறியார்.
காலத்தால் அழியா நல்ல
காவியங்கள் ஆகிடார்
நாளும் பழைய ஏடுகளில்
நாடித்தேடி பொறுக்கியே
கண்டபடி சொருகிடுவார்
காலத்திற்கேற்ப கருத்தினையே.
நவீன நாகரீக மோகத்தினால்
நம் மானிடர் செய்த செயல்களே
நாளும் மக்கள் அழிவிற்கு
நாச வழியென அறிந்திடுவார்
நல்லோர் நல்வழி சிந்தித்தே
நாடுவார் நல்ல இறையருளே.

**நீர்வை மணி**



# புலி

## திரைவிமர்சனம்

வேதாளங்கள் மனித குலத்தை ஆட்சி செய்கின்றன. கொடுங்கோலாட்சி. அந்தக் கொடிய ஆட்சியை வென்று மக்களைக் காக்கிறார் விஜய்.

இந்த ஒற்றைவரிக்கதையை வேதாளமனிதர்கள். அரக்கர்கள். சித்திரக்குள்ளர்கள். பேசும் பறவைகள் மந்திரதந்திரங்கள் ஆகியனவற்றைக் கலந்து பிரமாண்டமாக எடுத்திருக்கிறார்கள்.



வேதாளர்கள் 56 கிராமங்களை ஆட்சி செய்கிறார்கள். அவற்றில் ஒரு கிராமத்தின் தலைவராக இருக்கும் பிரபு, வேதாளவீரர்கள் மக்களைக் கொடுமைப்படுத்தி அவர்களிடமிருப்பவற்றையெல்லாம் பிடுங்கிக்கொள்கிறார்கள் என்று ஊர் மக்களைக் கூட்டிக்கொண்டு வேதாளராணியிடம் முறையிடப்போகிறார்.

போகிற இடத்தில் தளபதி, ஊர்மக்களைக் கொல்வதோடு பிரபுவை மட்டும் கையை வெட்டி அனுப்புகிறார். கைவெட்டப்பட்ட பிரபுவுக்கு ஆற்றில் அடித்துவரப்படும் ஒரு குழந்தை கிடைக்கிறது. அந்தக்குழந்தையே விஜய்.

விஜய் வளர்ந்து அந்தக்கிராமத்தைச் சேர்ந்த ஸ்ருதியைக் காதலித்துக் கல்யாணம் செய்கிறார். கல்யாணம் முடிந்ததும் வேதாளர்கள் அவரைக் கடத்திக் கொண்டுபோய்விட. அவரை மீட்கப் விஜய் போகிறார். போகிற இடத்தில் நடப்பதுதான் கதை.

கிராமமக்கள். வேதாளங்களைக் கண்டு பயப்படுகிற நேரத்தில், ஒரு வேதாளத்தின் காலைப் பிடித்துக்கொண்டு. நீங்க வேதாளம் நாங்க பாதாளம் என்று விஜய் வசனம் பேசுகிறார். உடனே பிரபு. புலி பதுங்குறது பாயுறதுக்குத்தான் என்று உடனே அதைச் சமன் செய்கிறார்.

விஜய் தன் வழக்கமான ஆட்டம் பாட்டம் கொண்டாட்டங்களுடன் ரசித்து நடித்திருக்கிறார். சண்டைக்காட்சிகளில் புதுவேகம் காட்டியிருக்கிறார். புலிவேந்தனாக வருகிற காட்சிகளில் ஓர் உண்மையான தலைவன் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இருக்கிறார்.

ஸ்ருதிஹாசன். ஹன்சிகா ஆகிய இரண்டு நாயகிகளையும் சரிசமமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். முதல்பாதியில் ஸ்ருதிஹாசன் இரண்டாம் பாதியில் ஹன்சிகா என்று கவர்ச்சி விருந்து வைத்திருக்கிறார்கள். கொஞ்சமே நடித்து தங்கள் இருப்பைக்காட்டிக்கொள்கிறார்கள்.

ராணியாக நடித்திருக்கும் ஸ்ரீதேவி, இளமையாகத் தெரிகிறார். நடிக்கவும் செய்திருக்கிறார். எல்லாத்தவறுகளும் உங்கள் மூலமாக நடந்தது. ஆனால் நீங்கள் தவறு செய்யவில்லை என்பார்கள். அதற்கேற்ப நடித்திருக்கிறார். உருண்டு திரண்ட அவருடைய கண்கள் அவருடைய வேலையில் பாதியைச் செய்துவிடுகின்றன.

தளபதியாக வருகிற சுதீப், கொடுங்கோலர்களுக்குரிய எல்லா அம்சங்களுடனும் இருக்கிறார். விஜய் உடன் படம் முழுக்க



வருகிற தம்பிராமய்யாவும் சத்யனும் சிரிக்கவைக்கிறார்கள்.

அவர்களுடன் இமான் அண்ணாச்சி. ரோபோசங்கர். வித்யுராமன் ஆகியோருடைய வேடங்கள் வித்தியாசம்.

முதல்பாதியில் இயற்கை எழில்சூழ்ந்தஇடங்கள். இரண்டாம்பாதியில் பிரமாண்ட அரண்மனைகள் ஆகியனவற்றை தன்னுடைய ஒளிப்பதிவின் மூலம் மேலும் பெரிதாக்கியிருக்கிறார் நட்டி. பாடல்களில் அவருடைய வேலை பெரிதாக இருக்கிறது. முத்துராஜின் கைவண்ணம் படத்தைப் பெரிதாகக் காட்ட உதவியிருக்கிறது.

தேவிஸ்ரீபிரசாத்தின் இசையில் ஜிங்கிலியா, புலி புலி பாடல்கள் ஆட்டம்போடவைக்கும். மெல்லிசை ரகமான ஏண்டி ஏண்டி ரசிக்கவைக்கும்.

நீங்க தப்பு பண்ணல உங்களச் சுத்தி இருக்கிறவங்கதான் அப்படிப் பண்றாங்க. நான் ஆள வந்தவன் இல்ல, இந்த மக்களை வாழவைக்க வந்தவன், மக்களுக்காக உயிரையும் கொடுக்கிறவன்தான் தலைவன் போன்ற வசனங்களும் கடைசிக்காட்சியும் விஜய்யின் அரசியல் எண்ணத்துக்கு வலுச்சேர்ப்பதாக அமைந்திருக்கிறது.

விஜய்யின் வெகுமக்கள் செல்வாக்கையும் தன்னுடைய வழக்கமான பேண்டஸியையும் கலந்து புலியைக் கொடுத்திருக்கிறார் இயக்குநர் சிம்புதேவன்.

# இரகசிய நிச்சயதார்த்தம்?

தமிழில் கேடி படத்தின் மூலம் அறிமுகமானவர் இலியானா. இந்தி, தெலுங்கு பட உலகிலும் முன்னணி நடிகையாக வலம் வருபவர். விஜய்யுடன் நண்பன் படத்தில் நடித்ததன் மூலம் தமிழிலும் பிரபலமானவர் என்பது குறிப்பிடத்தக்கது.



இலியானாவுக்கும் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஆண்ட்ரூ என்பவருக்கும் காதல் மலர்ந்துள்ளதாக ஏற்கனவே கிசுகிசுக்கள் வலம் வந்தன.

இருவரும் சேர்ந்து இருப்பது போல பல புகைப்படங்கள் இணையத்தில் வெளியாகி வைரலானது கூடுதல் செய்தி.

சமீபமாக இவருக்கு எந்தப் பட வாய்ப்பும் இல்லை. இந்த நிலையில் இலியானாவுக்கும் ஆண்ட்ரூவுக்கும் இரகசியமாக திருமண நிச்சயதார்த்தம் நடந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

திருமண நிச்சயதார்த்தத்தில் நெருங்கிய உறவினர்கள் மட்டுமே கலந்துகொண்டதாகக் கூறப்படுகிறது. திரை நட்சத்திரங்கள் யாரையும் அழைக்கவில்லையாம். இருவரின் திருமணத்தையும் 3 மாதங்களில் முடிக்க இருவீட்டாரும் ஏற்பாடு செய்துவருவதாகவும் சொல்லப்படுகிறது.

இலியானா தற்பொழுது விலையுயர்ந்த வைர மோதிரம் கையில் அணிந்திருப்பதாகவும், இந்த மோதிரம் .நிச்சயதார்த்தத்தின் போது ஆண்ட்ரூ அணிவித்திருக்கிறார் என்றும் பாலிவுட் வட்டாரம் தெரிவிக்கிறது.

# சிவகார்த்திகேயனின் படத்தில் ஜோடி சேர்ந்த நடிகை



சிவகார்த்திகேயன் நடித்த ரஜினிமுருகன் இம்மாதம் வெளியாகவிருக்கிறது. அடுத்து புது இயக்குநர் பாக்யராஜ் கண்ணன் இயக்கத்தில் நடிக்கவிருக்கிறார்.

அந்தப்படத்துக்கு ஒளிப்பதிவு பி.சி.ஸ்ரீராம். இசை அனிருத் மற்றும் ரசூல்பூக்குட்டி உள்ளிட்ட புகழ்பெற்ற தொழில்நுட்பக் கலைஞர்கள் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கின்றனர். சிவகார்த்திகேயனின் நண்பர் ராஜா இந்தப் படத்தைத் தயாரிக்கிறார்.

இவ்வளவும் அறிவித்தவர்கள் படத்தின் நாயகி யார் என்பதை இன்னும் சொல்லவில்லை.

ஆனால் படத்துக்கு நாயகியை ஒப்பந்தம் செய்துவிட்டார்களாம்.

சிவகார்த்திகேயனின் முந்தைய படமான ரஜினிமுருகனில் அவருக்கு ஜோடியாக நடித்த கீர்த்தி சுரேஷ்தான் இந்தப்புதிய படத்திலும் அவருக்கு ஜோடி என்று சொல்கிறார்கள்.

விரைவில் புதியபடத்தின் படப்பிடிப்பு தொடங்கும் என்று சொல்லப்படுகிறது.

# சிரியப்போரும் அனைத்துலக சமுதாயத்தின் அசமந்தப்போக்கும்



நான்கு ஆண்டுகளாக தொடரும் சிரியாவின் உள்நாட்டுப்போர் அந்நாட்டினை சொல்லமுடியாத மனிதப் பேரவலத்துக்குள் தள்ளியுள்ளது.

சிரியாவின் மொத்த சனத்தொகை 21 மில்லியன்கள். அதில் கிட்டத்தட்ட அரைவாசிப் பேர்கள் அவர்களது சொந்த வாழிடங்களை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளனர். 7மில்லியன் வரையானவர்கள் உள்நாட்டிலும், 4 மில்லியன் வரையானவர்கள் அயல்நாட்டிலும் அகதிகளாக தஞ்சம் புகுந்துள்ளனர். குறிப்பாக துருக்கி, லெபனான் ஜோர்டான் எகிப்து, ஈராக் ஆகிய நாடுகளில் 95 வீதமானவர்கள் தஞ்சம் கோரியுள்ளனர். அதே வேளை பல்லாயிரக்கணக்கானவர்கள் மத்தியதரைக் கடல்வழியாக உயிராபத்து மிக்க பயணங்களை மேற்கொண்டு ஐரோப்பிய நாடுகளை நோக்கி வெளியேறி வருவதாக ஐ.நா. அறிக்கை தெரிவிக்கின்றது.

மத்தியகிழக்கின் பிராந்திய மற்றும் அனைத்துலக சக்திகளினது நலன்சார் மூலோபாயத்திற்குள் சிரியா சிக்குண்டுள்ளது. சிரிய அகதிகள் விவகாரம் ஐரோப்பாவிற்கும் பெரும் தலையிடியாகியுள்ளது. ஐரோப்பிய நாடுகள் இதனை கையாள்வதில் பெரிதும் சிரமப்படுகின்றன.

கடந்த 4 ஆண்டுகளில் 220 000 வரையான மக்கள் பலியாகியுள்ளனர். நாட்டின் நிலப்பரப்பில் 20-30 வீதம் வரையான பகுதி மட்டும் அஸாட் வசமுள்ளது. 1/3க்கும் 1/2 க்கும் இடைப்பட்டபிரதேசங்கள் ஐ.எஸ் வசமும் எஞ்சியுள்ள பிரதேசங்கள் வெவ்வேறு கிளர்ச்சிக் குழுக்களின் வசமும் உள்ளதாகக் கூறப்படுகின்றது.

சிரியா பற்றியெரிகின்ற நிலைக்கான புறக்காரணியானது யாதெனில், 2011 இல் அரபு நாடுகளில் தோற்றம் பெற்ற அரபு வசந்தம் எனப்படும் வெகுசனப் போராட்டங்களின் தாக்கமும் அதன் தொடர்ச்சியுமாகும். ஆட்சிமாற்றம் ,ஜனநாயகத்தை நிலை நாட்டுதல் என்ற கோரிக்கைகளோடு துனிசியாவில் தொடங்கி எகிப்து, ஜோடான் போன்ற இன்னும் பலநாடுகளுக்கு சமகாத்தில் பரவிய வெகுசனப் போராட்டங்களின் தொடர்ச்சியாகவே சிரியாவின் அஸாட் ஆட்சி பீடத்திற்கு எதிரான மக்கள் போராட்டங்கள், ஆயுதக்கிளர்ச்சியாகி உள்நாட்டுப் போராக உக்கிரமடைந்து கடந்த 4 ஆண்டுகளாக நீடிக்கின்றது. காலப்போக்கில் இவை பிராந்திய விரிவாக்கம் பெற்று அனைத்துலக விவகாரமாகியது. மேற்குலக நாடுகள், குறிப்பாக அமெரிக்கா, லிபியாவின் முகமட் கடாபியை ஆட்சிபீடத்தில் இருந்து அகற்ற கருத்தியல் ரீதியாகவும் நடைமுறையிலும் எவ்வாறான அணுகுமுறையினைக் கைக்கொண்டதோ அதனையொத்த காய்நகர்த்தல்களை சிரியாவின் அரச தலைவரை ஆட்சி பீடத்தில் இருந்து அகற்றுவதற்கும் முடுக்கிவிட்டிருக்கிறது.

அஸாட் ஆட்சிபீடத்திற்கு எதிரான கிளர்ச்சிக் குழுக்களுக்கு ஆயுத உதவிகளை அமெரிக்கா தலைமையிலான அணி வழங்கி வருகின்றது. அஸாட்டை பதவிவிலகுமாறு பகிரங்கமாகவும் அழுத்தம் கொடுத்தும் வந்துள்ளன. அமெரிகாவும் அதன் நேச சக்திகளும் சிரிய விவகாரத்துக்கு தீர்வுகண்டுவிடுமென கிளர்ச்சிக்குழுக்கள் நம்பின. அவ்வாறு அக்குழுக்களை நம்பவைத்து அவர்களை தூண்டிவிட்டுப் போரை உக்கிரமடையச் செய்ததில் அமெரிக்காவின் பங்கு பெரியது. சிரியா விவகாரம் பல்முனைப்பட்ட சிக்கல்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. பிராந்திய சக்திகளின் நலன்- அனைத்துலக சக்திகளின் நலன்- இஸ்ரேலின் அயல்நாடு என்ற ரீதியில் சிரியாவின் அமைவிடம சார்ந்த பிரமாணம் -மத்திய கிழக்கில் முழுவதிலும் பரவியுள்ள ஐ.எஸ் பயங்கரவாத வலைப்பின்னல்- பிளவு முரண்பாடுகளைக் கொண்ட பல்வேறு போராட்டக் குழுக்கள் என சிரியா பலமுனைப்பட்ட சிக்கலான பரிமாணங்களால் சூழப்பட்டுள்ளது.

அஸாட் பதவி விலகவேண்டுமென்றால், நிபந்தனையோடு அஸாட்டை பேச்சுவார்த்தைக்கு அழைப்பதென்பது பேச்சுவார்த்தை முனைப்புகளை இலகுவில் தட்டிக்கழிப்பதற்கான வாய்ப்பினை அஸாட்டுக்கு வழங்கியுள்ளது. சிரியா விவகாரத்தை அமெரிக்கா கையாண்டவிதம் அதன் சிக்கலான பரிமாணத்தை மேலும் சிக்கல்ப் படுத்தியுள்ளது. இது அமெரிக்க இராஜதந்திரத்தின் மிகப்பெரிய தோல்வியென கணிக்கப்படுகிறது. லிபியாவிலும் இத்தகைய தோல்வியையே அமெரிக்க அணுகுமுறை தோற்றுவித்திருந்தது.

சர்வாதிகார ஆட்சியை நீக்கி ஜனநாயகத்தையும் நல்லாட்சியையும் மீளுருவாக்கம் செய்யப்போகின்றோம் என்ற சூளுரையோடு ஈராக் மீதான ஆக்கிரமிப்புப் போரில் இறங்கிய அமெரிக்கா, இன்று பாரிய அரசியல், ஜனநாயக வெறுமைக்குள்ளும் தொடர் அழிவுகளுக்குள்ளும் சிதைவுகளுக்குள்ளும் ஈராக்கை மாட்டிவிட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானிலும் அதேநிலைதான். ஈராக், ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா தொடுத்த போர்கள், அங்கெல்லாம் அமெரிக்காவின் நிரந்தரப் பிரசன்னத்திற்கு மட்டுமே வழிகோலியுள்ளது.

மேற்கு ஆதரவளித்து ஆயுதங்கள் வழங்கும் கிளர்ச்சிக் குழுக்களில் இஸ்லாமியக் கடும்போக்குவாத அமைப்புகளும் அடங்குகின்றன. எனவே சிரியாவைத் தளமாகக் கொண்டு இஸ்லாமிய பயங்கரவாதம் மேலும் விவரிவாக்கம் கண்டு வருகின்றமைக்கான தூண்டுதலாயும் மூலமாயும் மேற்குலகம் இருந்து வருகின்றதென ரஸ்யா குற்றம் சாட்டியுள்ளது. சிரிய-ரஸ்ய உறவென்பது, பனிப்போர்காலத்தின் நீட்சியாகும். அனைத்துலக அரங்கில் சிரியாவிற்கான (அஸாட் ஆட்சிபீடத்திற்கான) பாதுகாப்பு அரணாக ரஸ்யா தொழிற்படுகின்றது. பொதுமக்கள் மீது அஸாட் படைகள் இரசாயன உயிரழிவு ஆயுதங்களைப் பயன்படுத்தியதையடுத்து, 2013 இல் சிரியாமீது தாக்குதல் நடத்துவதற்கு அமெரிக்கா தயாரானபோது, ஐ.நா. பாதுகாப்பு பேரவையில் தனது எதிர்ப்பின் மூலம் அதனை தடுத்தது. ரஸ்யா தற்பொழுது அஸாடிற்கு ஆதரவான போரில் 2000 இற்கும் மேற்பட்ட ரஸ்ய இராணுவத்தினர் சிரியாவில் நிலை கொண்டுள்ளனர். போர் விமானங்கள், உட்பட்ட படைக் கருவிகளையும் வழங்கியுள்ளது. ரஸ்யப் பிரசன்னம் சிரியாவில் அதிகரித்துள்ள நிலையில் அமெரிக்காவிற்கு அது பெரும் சவாலைத் தோற்றுவித்துள்ளது. 1971 இல் பனிப்போரின் ஆரம்ப காலகட்டத்திலிருந்து சிரியாவின் இரண்டாவது பெரிய துறைமுகமான டார்ட்வுஸ், ரஸ்யாவின் கட்டுப்பாட்டிலேயே இருந்து வருகின்றது. மத்தியதரைக்கடலில் ரஸ்யாவிற்கான ஒரு காற்தளமாக இத்துறைமுகம் வருகின்றது. எனவே, மூலோபாய ரீதியில் இது ரஸ்யாவிற்கு முக்கியமானது.

மத்தியகிழக்கின் வலுச் சமநிலையின் மையப்புள்ளியாக சிரியா விளங்குகிற காரணத்தால் 2011 இல் சிரியாவில் மக்கள்போராட்டம் வெடித்தபோது, வளைகுடா நாடுகளுடன் ரஸ்யா, சீனா உடனடியாக தலையிட்டன.

ஆப்கானிஸ்தான், ஈராக், லிபியா போன்ற அண்மைய பட்டறிவு காரணமாக சிரியாவிற்குள் நேரடி இராணுவத்தலையீடு சார்ந்து அமெரிக்கா, பிரான்ஸ், பிரித்தானியா ஆகிய மேற்குலகத் தரப்புகள் ஆரம்ப காலத்தில் கவனமாயிருந்தன. எதிர்மறையான முன் அனுபவம் ஒருபுறமிருக்க, தமது படையினரின் உயிர்களைப் பறிகொடுக்கவும் இந்நாடுகள் தயாராகவில்லை என்பதும் அதற்கான காரணங்களில் ஒன்றாகும்.

தற்போதும் நேரடியாகத் தமது படைகளை அமெரிக்கா இறக்கப் போவதில்லை. இரண்டாவது பதவிக் காலத்தின் இறுதித்தறுவாயில் வெல்ல முடியாத ஒரு போருக்குள் அமெரிக்காவைத் தள்ளித் தனது பிம்பத்தை உடைக்க ஒபாமா விரும்பப் போவதில்லை. ரஸ்யா அண்மையில் பாரிய யுத்தக்கப்பலை சிரியாவுக்கு அனுப்பியுள்ள நிலையில் அனைத்துலக சக்திகள், சிரியாவின் போரை முடிவுக்குக் கொண்டவர எந்த அணுமுறையைக் கைக்கொள்ளப் போகின்றன என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

# facebook

## மனம் என்னும் அடிமை

ஒரு நாட்டில் அரசர் ஒருவர் வெகு சிறப்பாக ஆண்டு கொண்டு இருக்கிறார். அவருக்கு வாய்த்த ஒரு அடிமை அவருக்குத் தேவை யான எல்லாப் பணிகளையும் மிக அருமையாக செய்து அவரிடம் நற்பெயர்பெறுகிறான் அவனுடைய சேவையில் மகிழ்ந்த அரசர் ஒரு நாள் அவனிடம் உனக்கு என்ன வேண்டுமோ என்னிடம் கேள், நான் அதை நிறைவேற்றி வைக்கிறேன்" என்றார்.

அவனும் சிறிதும் யோசிக்கா மல் மன்னரே நான் உங்களை போல அரசராக தர்பாரில் ஒரு நாள மட்டும் வீற்றிருக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தான்.

அதைக் கேட்ட அரசர் அதிர்ந்து போனார். இருப்பினும் சற்று சுதாரித்துக்கொண்டு சரி அப்படியே ஆகட்டும் என்று கூறிவிட்டு, தன் அமைச்சர்களி டம் "அந்த அடிமை அரசரானால் அவன் ஆணையிடும் எல்லா கட்டளைகளையும் எனக்கு நிறை வேற்றுவது போலவே நிறை வேற்ற வேண்டும் என்று கூறினார்.

அடிமையும் அரசர் ஆனான். அவன் பதவியேற்ற மறுகணமே அரசரின் தலையைத் துண்டிக்க வேண்டும் என்று கட்டளை பிறப் பித்தான். அனைவரும் அதிர்ந்த னர். ஆனாலும் அவன் தானே இப்போது அரசன்?..எனவே வேறு வழியில்லாமல் அவன் கட்டளைப் படி தண்டனையை நிறைவேற் றினர். அதன் பின் அவனே மீதி யான காலங்களில் அரசராக இருந்தான். இது ஒரு விபரீதக் கதைதான்.

இதைப்போன்றது தான் நம்முடைய வாழ்கையும். இந்த கதையில் வருவது போல நாம் தான் அரசர்கள். நம்முடைய மனம் தான் அந்த அடிமை. நம்மில் நிறையப் பேர் அந்த அரசனைப் போல மனம் நமக்கு விரும்பியதைச் செய்தவுடன், அந்த மனதை அரசராக்கி விடுகி றோம். ஆனால் அதன் பின் வரும் விளைவுகளைப் பார்த் தால், நாமும் அந்த அரசனைப் போல செத்து விட நேர்கிறது.

ஆம். மனம் என்னும் அடிமை சொன்னவாறு செய்தால், நம்முடைய தகுதி, ஆளுமைத் திறன், பாரம்பரியம் எல்லாமே செத்து விடுகிறது. நாம் எடுக்கும் எந்த ஒரு முடிவும் நாம் விழித்து இருக்கும் போது எடுக்கப்பட வேண்டும். மனம் என்னும் அடிமையின் வசம் ஒப்படைத்த பின்னர் நமக்குள் இருக்கும் நியாய தர்மங்கள் செத்து விடும்.

## விதி

இந்திரன் மனைவி இந்திராணி ஒரு கிளியை மிகவும் பிரியமாக வளர்த்து வந்தாள்....ஒருநாள் அந்த கிளி நோய்வாய்ப்பட்டுவிட்டது.....அதை பரிசோதித்த மருத்துவர் இனி அது பிழைக்காது என்று கூறிவிட்டார்....உடனே தன் கணவனை அழைத்த இந்திராணி , இந்தகிளியை எப்படியாவது காப்பாற்றுங்கள்... கிளி இறந்துவிட்டால் நானும் இறந்துவிடுவேன் என்றாள்....

இந்திரன் , கவலைப்படாதே இந்திராணி...நான் உடனே பிரம்மாவிடம் சென்று முறையிடுகிறேன்...ஒவ்வொருவர் தலையெழுத்தையும் எழுதுபவர் அவர்தானே? அவரிடம் சென்று கிளியின் தலையெழுத்தை மாற்றி எழுதிவிடுவோம் என்று சொல்லிவிட்டு , பிரம்மாவிடம் சென்று விடயத்தை கூறினான்....

விடயத்தை கேட்ட பிரம்மா, இந்திரா.... படைப்பது மட்டுமே என் வேலை...உயிர்களை காப்பது சாட்சாத் மஹாவிஷ்ணு வின் தொழில்...நாம் அவரிடம் சென்று உதவி கேட்போம்...வா ...நானும் உன்னுடன் வருகிறேன் என்று இந்திரனை அழைத்துக்கொண்டு மஹாவிஷ்ணுவிடம் சென்று விடயத்தை தெரிவித்தார்.... மஹாவிஷ்ணுவோ, உயிர்களை காப்பது நான்தான் ...ஆனால் உன் கிளி இறக்கும் தருவா யில்.இருக்கிறது.....அழிக்கும் தொழிலை மேற்கொண்ட சிவன் தான் அதைக்காப்பாற்ற வேண் டும்...வாருங்கள் நானும் உங் களுடன் வந்து சிவனிடம் பேசு கிறேன் என்று கிளம்பினார்....



விபரங்களை கேட்ட சிவன், அழிக்கும் தொழில் என்னுடை யதுதான்...உயிர்களை எடுக்கும் பொறுப்பை நான் எமதர்மராஜனி டம் ஒப்படைத்துள்ளேன்... வாருங்கள் ....நாம் அனைவரும் சென்று எமதர்மனிடம் கூறி அந்த கிளியின் உயிரை எடுக்க வேண்டாம் என்று சொல்லிவிடு வோம் என்று சொல்லி அவர் களை அழைத்துக்கொண்டு எமலோகம் செல்கிறார்....

தன்னுடைய அவைக்கு சிவன் , மஹாவிஷ்ணு , பிரம்மா, இந்திரன் ஆகிய நால்வரும் வருவதை கண்ட எமதர்மன் உடனே எழுது ஓடி வந்து வரவேற்கிறார்..விடயம் முழுவதையும்கேட்ட அவர் , ஒவ்வொரு உயிரையும் எந்த நேரத்தில் , எந்த சூழ்நிலையில் என்ன காரணத்தால் எடுக்கவேண்டும் என்ற காரணத்தை ஒரு ஓலையில் எழுதி ஒரு பெரிய அறையில் தொங்கவிட்டுவிடுவோம்..அந்த ஓலை அறுந்து விழுந்துவிட்டால், அவரின் ஆயுள் முடிந்து விடும்....வாருங்கள் அந்த அறைக்குசென்று, கிளியின் ஆயுள் ஓலை எது என்று பார்த்து, அதை மாற்றி எழுதிவிடுவோம் என்று அவர்களை அழைத்துச் செல்கிறார்....

இப்படியாக , இந்திரன், பிரம்மா, விஷ்ணு, சிவன், எமதர்மன் ஆகிய ஐவரும் அந்த அறைக்குச்சென்றனர்... ....அவர்கள் உள்ளே நுழைந்தவுடன் ஒரு ஓலை அறுந்து விழுகிறது...உடனே அவர்கள் அவசரமாக சென்று அந்த ஓலையை எடுத்து பார்க்கின்றனர்..அது அந்த கிளியின் ஆயுள் ஓலை.....அவசரமாக அதைப்படித்து பார்க்கின்றனர்....

அதில்......

இந்திரன், பிரம்மா, விஷ்ணு, சிவன், எமதர்மன் ஆகிய ஐவரும் எப்போது ஒன்றாக இந்த அறைக்குள் நுழைகிறார்களோ , அப்போது இந்த கிளி இறந்துவிடும்..... என்று எழுதப்பட்டிருந்தது...... இதுதான் விதி என்பதோ?

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 508

கவி தேவகுமார்





ஜேசுதன் ஜக்சயன்




ஹாட் பெயின்





பிரணவன் விவேகானந்தன்




நிக்கம் சகா





டிலானி புவி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கோலியின் ஆக்ரோஷத்தால் டோனிக்கு வந்த சோதனை

தனது தலைமைத்துவத்தை நிரூபித்து விராட் கோலியிடமிருந்து இந்திய அணித் தலைவர் பதவியை பாதுகாத்துக்கொள்ள வேண்டியகட்டாயத்தில் இருக்கின்றார் இராசிக்கார அணித்தலைவர் டோனி.



சர்வதேச கிரிக்கெட் அரங்கிலே அமைதியான முறையில் அணியை வழிநடத்தி மிஸ்ரர் கூல் எனப் பெயர் எடுத்தவர்தான் இந்திய அணியின் ஒருநாள் மற்றும் இருபது -20 போட்டி அணித் தலைவர் மகேந்திரசிங் டோனி ஆவார்.

எந்தவொரு கடுமையான சந்தர்ப்பத்திலும் பதற்றம் அடையாமல் அமைதியா இருந்து இக்கட்டான சூழ்நிலையினை சரியான முறையில் எதிர்கொள்வது டோனியின் அழகான அணித் தலைமை என கூறிக் கொள்ளலாம்.

மிஸ்ரர் கூல் என அவரைப் பெயர் சொல்லி அழைக்கும் அளவிற்கு அவர் தன்னை பக்குவப்படுத்தி வைத்துள்ளார்.

சமீபத்தில்கூட தென்னாபிரிக்க அணியின் இருபது-20 அணித்தலைவர் டுபிளீசிஸ் சென்னை அணியில்தான் விளையாடிய போது டோனி தலைமையின் கீழ் தான் விளையாடியது தன்னைப் பக்குவமான கிரிக்கெட் வீரராக மாற்றியதாக தெரிவித்திருந்தார்.

டோனியைப் பார்த்து தான் பலமுறை வியந்ததாகவும் அவரிடம் இருந்து ஏராளமான விடயங்களைக் கற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவித்திருந்தார்.

டோனியின் தலைமையின்கீழ் விளையாடியவர்கள் டோனியிடமிருந்து பக்குவத் தன்மையைக் கற்றுக்கொண்டுள்ளனர்.

சர்வதேச உலகக் கிரிக்கெட்டில் டோனியின் பெருமை இவ்வளவு தூரம் வருவதற்கு அவரின் இந்தக் குணாதிசயங்கள் முக்கியமான ஒன்று.

இது ஒரு புறம் இருக்க மறுபக்கம் இந்திய அணியின் வருங்கால தலைவரும் தற்போதைய இந்திய அணியின் டெஸ்ட் அணித் தலைவருமாகிய விராட் கோலியைப் பற்றியது.

டோனி எப்படிக் களத்தில் அமைதியைக் கடைப்பிடிப்பாரோ அதற்கு எதிர்மாறாக விராட்கோலி களத்தில் ஆக்ரோஷத்தை வெளிப்படுத்துவார்.

சூடான வார்த்தைகள் முதல் உடல் அளவிலான செய்கைகள் என்பன அவரின் ஆக்ரோஷத்தின் உச்சக்கட்டமாகக் காணப்படும்.

சர்வதேச அளவில் அவர் ஒரு சிறந்த வீரராக திகழ்ந்தாலும் அவரின் ஆக்ரோஷமான குணாதிசயங்கள் அவர் மீதான விமர்சனத்தை ஏற்படுத்தியது.

டெஸ்ட்போட்டியின் தலைமைத்துவத்திலிருந்து டோனியின் ஓய்வுக்குப்பின் உப தலைவராக இருந்த கோலி சுலபமாக இந்திய அணியின் தலைமைத்துவத்தை அடைந்தார்.

சமீபத்தில் கோலி தலைமையிலான இந்திய அணி இலங்கை மண்ணில் டெஸ்ட் தொடரை 2:1 என்ற கணக்கில் வென்று சாதனை புரிந்தது.

இதைத் தொடர்ந்து கோலி மீதான எதிர்பார்ப்பும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற தென்னாபிரிக்கத் தொடரிலும் தொடர்ந்து அசத்துவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் நான் கோலியின் ரசிகன். எனது அணித்தலைவர் பதவியின் சாதனைகளை கோலியால் தான் முறியடிக்கமுடியும் என்று முன்னால் இந்திய அணித்தலைவர் கங்குலி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில், தலைவர் பதவியில் கோலி அசத்துகிறார். அவர் தன்னை விட சிறந்த தலைவராகவும் வருவார் எனவும் தெரிவித்தார்.

அவர் எப்போதும் வெற்றிபெறவேண்டும் என்ற வேட்கையில் இருக்கிறார். அவரது இந்த ஆக்ரோஷத்தை நான் விரும்புவதாகவும் கங்குலி கூறியிருந்தார்.

களத்தில் ஆக்ரோஷமாக விளையாடுவது தொடர்பில் டோனி தெரிவிக்கையில்,

களத்தில் ஆக்ரோஷமாக விளையாடலாம். ஆனால் அந்த ஆக்ரோஷம் தவறான நடத்தைக்குக் கொண்டு சென்று விடக்கூடாது எனத் தெரிவித்துள்ளார்.

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடர் டோனியின் தலைமைத்துவத்தின் மீது அதிகமான எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கைத் தொடரை கோலி தலைமையிலான அணி கைப்பற்றியுள்ளதால் டோனியின் ஒருநாள் மற்றும் இருபது -20 தலைவர் பதவிக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

தென்னாபிரிக்கா தொடர்ந்தும் கோலியை அனைத்து விதமான போட்டியிலும் தலைவராக நியமிக்க ஆலோசிக்கப்பட்டதாகவும் தகவல் வெளியாகி இருந்தது.

மேலும் டோனியின் திட்டமிடல் திறமை குறைந்துவிட்டதாகவும் விமர்சனம் எழுந்துள்ளது. இதற்கு உலகக் கிண்ணத் தோல்வி, வங்கதேசத்திடம் வீழ்ந்ததை காரணமாகக் கூறப்படுகின்றது.

டோனியின் தலைமைத்துவம் மீது இந்திய அணியின் தெரிவுக்குழுவினர் நம்பிக்கை கொண்டிருந்தாலும் எதிர்காலத்தில் ஆக்ரோஷமான முறையில் இந்திய அணியை வழிநடத்தக்கூடிய ஓர் அணித் தலைவராக வலம்வரும் விராட்கோலிக்கு போதுமான சந்தர்ப்பத்தினை கொடுப்பதற்காக டோனியை இந்திய அணியின் தலைமைப் பொறுப்பிலிருந்து விலக்க நேரிடலாம்.

அதிர்ஷ்டம் என்பது எப்போதும் டோனியின் அருகில் இருக்கும் ஒன்றாகும்.

டோனியின் தலைமைத்துவத்தை அவரது கடந்த கால சாதனைகளே சொல்லி நிற்கும். எனவே அதிர்ஷ்டம் மற்றும் களத்தில் அமைதியை பேணும் தனது திறமையான தலைமைத்துவம் மூலம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற தென்னாபிரிக்க தொடரில் தனது தலைமைத்துவத்தை நிரூபித்து விராட் கோலியிடமிருந்து தனது இந்திய அணித்தலைவர் பதவியை பாதுகாத்துக்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றார். இந்திய அணிக்கு இரண்டு உலகக் கிண்ணம் மற்றும் மினி உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொடுத்த இந்தியாவின் இராசிக்கார அணித்தலைவர் எனப் பெயர் எடுத்தவர் மகேந்திரசிங் டோனி.

- க.மதீசன்